# இளம்பிறை

## மீலாத் மலர்

60 சதம்

நபி கதைகள் - 7

**நம்பிக்கை**

—ஓரங்க நாடகம்

**நாயகத் திருமேனி**

—ஆராய்வு

**நினைவுகள்**

—உரைச் சித்திரம்

**குதிரை - மறு**

—சிறுகதைகள்


**திருப்பூர் மொஹிதீன்**

—விசேட கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யது பீடி




★ தரத்தில் தன்னிகரற்றது
★ தலைநகரிலே தலைசிறந்தது
★ தரணியெங்கும் புகழப்படுவது
★ எல்லோரும் விரும்பிப் புகைப்பது
★ விற்பனையில் முன்னணியில் நிற்பது

செய்யது பீடியே!

# செய்யது பீடி டிப்போ

192, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.

தொலைபேசி: 78001



*With the compliments of*

**CEYLON TOBACCO COMPANY LIMITED**

Manufacturers of




# 3 ROSES

Ceylon's Favourite Cigarette



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of:

# MOOSAJEE SONS

Manufacturers of 'Ceylopak" Polythene,

**270, Wolfendhal Street,**
**COLOMBO-13.**

Phone: **79737 & 31374**

# இளம்பிறை

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ராகப் பெறின்.

மாலை 5 | மீலாத் மலர் 1968 | பூ 1

நிர்வாக ஆசிரியர்:
எம். ஏ. ரஹ்மான்

திங்கள் வெளியீடு

அலுவலகம்:
இளம்பிறை,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13
இலங்கை.

Office:
**Ilampirai,**
231, Wolfendhal Street,
Colombo-13 (Ceylon).

இளம்பிறையில் வெளிவருங் கதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவருங் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

## இந்தப் பூவில்....

நபி கதைகள் ஏழு

நம்பிக்கை
—ஓரங்க நாடகம்

நாயகத் திருமேனி
—ஆராய்வு

நினைவுகள்
—உரைச் சித்திரம்

குதிரை - மறு
—சிறுகதைகள்

திருப்பூர் மொஹிதீன்
—விசேட கட்டுரை

மீலாத் விழா - அநுபந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியப் பயணம்

'இளம்பிறை'யின் மூன்றாவது மாலையின் முதலாவது பூவான மீலாத் மலர் வேலைகள் இந்தப் பக்கத்தை எழுதுவதுடன் நிறைவுறுகின்றன.

அவசரத்தில் எழுத நேர்ந்தாலும், சத்தியத்தின் உள்ளத்தை இளம்பிறையின் அபிமான வாசகர்களுக்கு நேர்த்தியாக வைக்க முடியுமென்று நம்புகின்றேன்.

இளம்பிறை தனது இலட்சிய வளர்ச்சிப் பாதையில் இரண்டு படிகளைத் தாண்டி, மூன்றாவது படியிலே காலடியெடுத்து வைக்கின்றது. இளம்பிறையின் இரு மாலைகள் நிறைவுற்று, மூன்றாவது மாலையின் முதலாவது பூ மலர்ந்துள்ளது.

கனவு பலித்த பூரிப்பில் இளம்பிறையின் முதலாவது பூ 1964 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பூத்தது. அப்பணியின் பயணம் 1965 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை நீடித்தது. அது முதற் படி.

இளம்பிறைப் பயணத்தின் இரண்டாவது மாலையின் முதலாவது பூ 1966 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மலர்ந்தது. இடையில் இளம்பிறைப் பயணத்தில் தரிப்பு ஏற்பட்டிருந்தது. இருப்பினும், இடைப்பட்ட காலத்தின் இந்தப் பணியின்மையே இலக்கியப் பணியாகவும் அமைந்தது. ஏனெனில், 'இளம்பிறை' யுடன் இணைந்துள்ள 'அரசு வெளியீடு' நிறுவனத்தின் இலக்கியப் படையலாக ஐந்து நூல்கள் வெளிவந்தன. இது பயணத்தின் இரண்டாவது படி. நினைவு நிலையில் மீண்டும் தரிப்பு.

'இளம்பிறை' பெரிய மூலதனத்தில் வேரூன்றியதில்லை. சத்தியத்திலும், இலக்கியப் பற்றிலுமே வேர் கொண்டது. இதுவே அதன் மூன்றாவது துளிர்ப்பிற்கும், இலட்சியப் பயணத்தின் தொடர்ச்சிக்கும் காரணமாக அமைந்தது.

1968 ஜூன் 9 ஆம் தேதி பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் அவதார தினமாகும். அத்தினத்திலே மூன்றாவது மாலையின் முதலாவது பூவான இம்மீலாத் மலர் விரிகின்றது. சுகுணம் நிரம்பிய நன்னிமித்தமாக இஃது அமைவதினால், நமது இலட்சியப் பயணம் தொடரும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

எல்லாப் புகழும் ஏகனும் இறைவனுக்கே!



# மீலாத் விழாச் சிந்தனைகள்

றபீஉல் அவ்வல் திங்களும், அவனியெல்லாம் பரந்து சீர்த்தியுடன் வாழும் இஸ்லாமியப் பெருமக்களுக்கு உவப்புமிகு மாதமாகும். இத்திங்களின் பன்னிரண்டாவது பிறையன்றுதான், மனிதப் புனிதராம் - இறுதி இறை தூதர் முஹம்மது முஸ்தபா நபிநாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்தார்கள்.

புகழ்சேர் அவ்விழுமிய தினத்தை, இஸ்லாம் அமைத்துள்ள இன் வரன்முறைகளுக்கு அமைவாகக் கொண்டாடுதல் ஒவ்வொரு முஸ்லிம்களுடைய கடமையாகும்.

உலகிலே பயிலப்படும் மதங்களுள் தெளிவான சரித்திர காலத்திலே பரம்பிய மதம் என்ற பெருமை இஸ்லாத்திற்கு உண்டு. அதன் வளர்ச்சியும் வளமும் புனைந்துரைகளிலே வேர் கொள்ளாது, தெளிவான – திட்டவட்டமான சரித்திர ஆதாரங்களிலே எழுந்து நிற்கின்றது. மீலாத் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுதல் என்பது இன்று நேற்று இடையிலே கிளைத்த சம்பிரதாயமல்ல என்னும் உண்மையை வரலாற்று முகத்தான் உறுதியாக அறிந்து கொள்ள முடிகிறது. கி. பி. 1207 இல், முஸாபர் அல்தீன் கொவ்வுரா, இராக்கில் மௌஸூலுக்கு அண்மையில் ஏற்பாடு செய்த மீலாத் விழா பிரமாண்டமான முறையிலே சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாக வரலாற்று நூலார் இப்னு கலிகானின் குறிப்புக்களால் அறியக் கிடக்கின்றது. மீலாத் கொண்டாடும் பாரம்பரியம் இதனினும் தொன்மை வாய்ந்ததாகவும் இருக்கலாம்.

சிலை வணக்கத்தை இஸ்லாம் மிக்கத் துணிச்சலுடன் தகர்த்தெறிந்தது. அதே போன்று பக்தி கலவாத, நம்பிக்கை இழையாத, அகம் ஒன்றாத, எந்தப் படாடோபச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயத்தையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்ளமாட்டாது. எனவே, மீலாத் விழாக்களைக் கொண்டாடும் பொழுது, பழைமைசான்ற பக்தி நிலையை நிறுவும் அதே வேளையில், இளய சமுதாயத்தினரின் மதப் பற்றையும், மார்க்கக்கல்வியையும்வளர்க்கத்தக்கதான கொண்டாட்ட முறைகளே ஏற்புடையன என நாம் ஏற்றுக் கொள்ளுதல் சிறப்புடைத்து. முஸ்லிம் சமுதாயத்தின் ஊறுபடாத தனித் தன்மையையும், மேன்மையான கலாசாரப் பாரம்பரியங்களையும் பேணி, அவற்றை வளப்படுத்துவனவாக மீலாத் விழாக்கள் அமைதல் உகந்தது.

ரபீஉல் அவ்வல் திங்கள் முதற் பிறை தொடக்கம், பன்னிரண்டாம் பிறை வரையிலுள்ள பன்னிரண்டு தினங்களும் மௌலூத்கள் எனப்படும், பெருமானாரின் அவதாரத்தையும், சீரிய வாழ்க்கையையும், நெறியையும் காவிய ரூபத்திலே சொல்லும் அரபிப் பாடல்களை ஓதுகின்றோம். இலக்கியச் செறிவும், நுட்பச் சுவையும் மிக்க மௌலூத்களை ஓதுதல் அற்புதமானது. இந்த ஓதுதல் வெறும் ஆசாரச் சடங்காகவும், உதடுகள் சம்பந்தப்பட்ட உச்சாடன வைபவமாகவும் அமையின் முழு விளைவுப் பலிதம் ஏற்படுமா என்பதைச் சமயப் பெரியார்கள் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். மௌலிது ஷரீபுகளிலேயுள்ள மகத்துவத்தைத் தமிழிலே விளக்கி நயத்தை அனுபவிக்கச் செய்யும் வழிமுறையைப் பயில்வதின் மூலம் இளய சமுதாயத்தினரின் பக்தி சிரத்தையை மேன்மேலும் வளர்த்தல் சாலும். இதனைப் பற்றியும் மார்க்கப் பெரியார்கள் சிந்தித்துப் பார்க்கக் கடப்பாடுடையவர்களாவார்கள்.

குறிப்பிட்ட பன்னிரண்டு தினங்களும் முஸ்லிம் பெருமக்கள் பெருந்தொகையினராக வாழும் ஒவ்வொரு வீதியிலும் ஹதீது மஜ்லிஸ்களை நடாத்துதல் பக்தி வளத்தைப் பெருக்கும் பிறிதொரு வழியாகும். அத்தகைய மஜ்லிஸ்களில் ஆலிம்களையும் அறிஞர்களையும் கொண்டும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தல் அவசியம். வீதி தோறும் ஹதீது மஜ்லிஸ்கள் நடைபெறின், பெண்களும் — வயோதிபரும் வீட்டிலிருந்தவாறே சொற்பொழிவுகளின் நற்சான்றினை நுகருதலுக்கும் வாய்ப்புக் கிட்டும்.

மீலாத் விழாக்களிலே நபி பெருமானார் (ஸல்) பற்றிய நூல்களை மலிவு விலையில் அரங்கேற்றும் புதிய முறையினையும் நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இதன் மூலம் ஆண்டு முழுவதும் நூல்களினால் பக்தியின் வளப்பத்தைப் பேணிப் பயன் அடைவோம்.

தோரணங்களும், பந்தல்களும், மின்சார அலங்காரங்களும் என ஏனைய மதத்தினர் வீணிலே செய்யும் ஆடம்பரச் செலவுகளைப் பின்பற்றி, மீலாத் விழாக்களை ஆடம்பரமான ஒரு கேளிக்கை விழாவாக அமைப்பதின் மூலம் இஸ்லாம் சாற்றும் புனிதத்துவத்தையும், அதன் தனிப் பெரும் பாரம்பரியத்தின் மகத்துவத்தையும் நிலைநிறுத்துதல் சாலுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் வண்ணம் சகல முஸ்லிம் பெரு மக்களையும் இவ்வாண்டின் மீலாத் விழாச் சிந்தனையாக ஏற்றுக் கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.



# நம் வழி எது?*

பௌத்த சிங்களவர்கள் புத்தர் சிலையை வணங்குகின்றார்கள். மலராஞ்சலி செய்து மகிழ்கின்றார்கள். புத்தரின் பிறந்த தினமாகிய வெஸாக் பண்டிகையை ஆடம்பரமாகக் கொண்டாடுகின்றார்கள். அதையொட்டி வீதிகள் தோறும் பெரிய பந்தல்கள் தோன்றும். புத்தருடைய மிகப் பிரமாண்டமான படங்களும், சித்திரங்கங்களும் அப்பந்தல்களில் இடம்பெறும். ஆயிரக்கணக்கான மின்சார 'பல்பு' கள் பந்தலை அலங்கரித்து ஒளி ஜாலங்கள் புரியும். ஒலிபெருக்கியில் சினிமாச் சங்கீதங்களும், புத்தரின் போதனைகளும் ஒலிபரப்பப்படும். மேடைகள் நிருமாணித்து, வேடந்தரித்துக் கூத்துகள் ஆடுவார்கள். இவற்றைக் கண்டுகளிக்க ஆடவரும் பெண்டிரும் இடிபட்டு, நசுக்குண்டு வீதிகள் தோறும் அலைவர். இது பௌத்த சிங்களவரின் கலாசாரமாக இருக்கலாம். அஃது அவர்களின் சுயேச்சை: அதைக் கௌரவிப்போமாக!

சிலை வணக்கத்தை ஒழித்தவர் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள். அல்லாஹ்வின் நாமத்தையும் பெருமானாரின் திருவுருவத்தையும் வியாபார — விளம்பரப் பொருள்களாக்காது பாதுகாத்த புனித கலாசாரப் பாரம்பரியத்திற்கு உரியவர்கள் முஸ்லிம்கள். உருவ வழிபாட்டை ஒழித்த - உருவப்படம் இல்லாத ஒரேயொரு தீர்க்கதரிசியும் மதத் தலைவரும் நபிகள் நாயகமே.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்த மாதமாகிய ரபீஉல் அவ்வல் மாதத்திலே நடைபெறும் மீலாத் விழாக்களில் முஸ்லிம்களுக்கு அந்நியமான 'வெஸாக்' கலாசாரம் புகுத்தப்பட்டு வருகின்றது. மீலாத் காலத்தில் தோரணங்களும், பந்தல்களும் கொழும்பு மாநகரின் வீதிகள் தோறும் எழுகின்றன. அனாவசியமான மின்சார ஜோடனைகளும், ஒலிபெருக்கிகளில் சினிமாச் சங்கீதமும் புகுந்து கொண்டன. பொருட்காட்சி பார்க்கும் மனோபாவத்துடன் ஆடவரும்-பெண்டிரும் இடிபட்டு நசுக்குண்டு அலையத் தொடங்கிவிட்டனர். இந்த பந்தல் — தோரண — மின்சார அலங்கார மோகம் வளர்ந்தால், மீலாத் விழா பிறிதொரு வெஸாக் விழாவாக மாறும். அப்பொழுது மீலாதின் நோக்கமென்ன? நமது இஸ்லாமிய கலாசாரப் பண்பாடுகளின் தனித்துவமென்ன? நமது நம்பிக்கையின் அர்த்தமென்ன? ஈழம்வாழ் இஸ்லாமியப் பெருங்குடிமக்கள் தமக்கு அந்நியமான வேற்று மத கலாசாரங்களைக் கைவிடல் வேண்டும். இல்லையேல், இஸ்லாமியப் பாரம்பரியத்தின் புனிதம் கெடுவதோடு, நமது வழி நமக்கே தெரியாமற் போய்விடும் எனவும் அஞ்சுகின்றோம்.

*1965 ஆம் ஆண்டில் இளம்பிறை மீலாத் விசேட மலரிற் பிரசுரமான ஆசிரிய தலையங்கத்தின் மறு பிரசுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Well wishes from:*

**W. SHAHUL HAMEED & COMPANY**

93, Maliban Street,
COLOMBO-11.

Phone: **24169**

Cable: "**MUKARRAM**"
**COLOMBO**

## தொழிலமைச்சரின்
## மீலாத் செய்தி

**வா**னோரும் வையத்தோரும் நிதமும் புகழ்பாடி மகிழும் வல்லோனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மறுவிலாப் பிறந்த சீர்நாளைக் கொண்டாடி மகிழும்பொழுது ஈழவானில் பிறந்த "இளம்பிறை" இன்று கூடிய பொலிவோடு காட்சி தருவது கண்ணுக்கும் கருத்துக்கும் சுவை பயக்க வல்லது.

"இளம்பிறை" மீலாதுந் நபி மலருக்கு எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள். வாசக நேயர்களுடன் ஒரு நாழிகைப் பொழுது இங்கே களிக்க வாய்ப்பேற்படுத்தி தந்த நிர்வாக ஆசிரியருக்கு எனது நன்றி.

எமக்கு அல்லாஹ்வின் மாமறை தந்தவர் இன்று - என்றும் – நாம் போற்றிப் புகழும் காருண்ய நபி பெருமானார். அண்ணலார் விட்டுச்சென்ற தித்திக்கும் தேன் மறைக்கு 1400 ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளன. பூவுலகெங்கும் முஸ்லிம்கள் விழா எடுத்து மகிழ்கின்றனர். எமது நேர்வழிகாட்டி திருக்குர்ஆன். பெறுதற்கரிய இப் பொக்கிஷத்தை இறைவனிடத்திலிருந்து எமக்கு அருளிச் சென்ற அருமை நபியின் ஜனனதின விழா இவ்வருடம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

முஸ்லிம்களின் நிலை, உலக முஸ்லிம்களின் நிலை இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்துச் செயல்படத் தூண்டும் 'சரித்திரத்திருப்பமாக' இவ்வாண்டு நபி மணியின் அவதார விழா எம்மை அணுகியுள்ளது. நாம் முஸ்லிம்களாகச் சிந்திக்க வேண்டும்; முஸ்லிம்களாகச் செயற்பட வேண்டும்!

இச்சிறிய கருத்தை அன்பர்களோடு பகிர்ந்து கொள்ள இடமளித்த "இளம்பிறை"க்கு மீண்டும் என் நன்றி. இனிய தமிழில் கருத்தோவியங்கள் படைத்து ஈழத்து எம் வாசகர்களுக்கு அமுதூட்டும் இந்த சஞ்சிகையின் வளர்ச்சிக்கு எனது நல்லாசிகள்!

அல்லாஹ்ற அருளும், அண்ணலார் அன்பும் எம்மீதாகுக!

**எம். எச். முஹம்மத்**
**தொழில், தொழில் வசதி அமைச்சரும்**
**1400வது ஆண்டு திருக் குர்ஆன் விழா**
**தேசியக் கமிட்டித் தலைவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி அமைச்சரின்
## மீலாத் செய்தி

ஈழம் வாழ் முஸ்லிம் மக்களின் நலன் காப்பதில் இடைவிடாது சேவையாற்றிவரும் "இளம்பிறை", மீலாத் விழாவை முன்னிட்டு விசேட மலரொன்றை வெளியிட முன்வந்துள்ளது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அந்தகார இருளிலே அல்லற்பட்டுக் கிடந்த பாமர மக்களின் அறிவை வளர்த்து, உண்மை மனிதனாக்க உதித்த எம்பெருமான் முகம்மது நபி (ஸல்)யின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதால் எம் பிரச்சினை தீர்ந்து விடாது. அன்னாரின் போதனைகளைப் பின்பற்றி அவர் வழி நடப்பதே சாலச்சிறந்ததாகும். "இளம்பிறை" மீலாத் மலருக்கு இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எம். எம். முஸ்தாபா
பாராளுமன்றக் காரியதரிசி,
சமூக சேவைகள் அமைச்சு.

**POMADOL**
**(IMPORTED)**
SEPARATELY PREPARED FOR LADIES & GENTLEMEN
* **It prevents dandruff and falling hair**
* **Maintains Clean Scalp**
* **Makes your hair soft**
* **Makes easy and smooth combing**

SOLE AGENT :
SIRRUL KADHEER & CO.
41, 43, Second Cross St.,
Pettah, Colombo.
phone: 3710 & 6009



## தயை

நபி கதை: ஒன்று

பரம ஏழையும், வலுவற்ற உடம்பினனுமான மக்காவாசி ஒருவன், ஒரு சமயம் மார்க்க விதிகளை மீறியிருந்தான். அவன் தன்னுடைய குற்றத்தை நபிநாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் ஒப்புக்கொண்டு, ஆதரவற்ற நிலையில் தலை குனிந்து நின்றான். அவனுடைய நிலைமையைப் பெருமானார் அவர்கள் பூரணமாக அறிவார்கள்.

இருப்பினும், குற்றமிழைத்தவனைப் பரீட்சித்தல் வேண்டுமென இறுதி இறைதூதர் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் இதயம் விழைந்தது.

"இக்குற்றத்திற்குப் பரிகாரமாக நீர் அடிமையைவிடுவிக்க வேண்டும்" என்று பெருமானார் கூறினார்கள்.

"அதற்கான பொருள் வசதி என்னிடமில்லாதபடியால் அது இயலாத காரியம்" என்று ஏழை, ஏந்தல் நபி நாயகத்திடம் பதிலிறுத்தான்.

"அப்படியானால் அறுபது ஏழைகளுக்கு உணவளிப்பீராக!" என்று கூறினார்கள்.

"இதுவும் என் சக்திக்கு அப்பாற்பட்டது" என்றான்.

இச்சந்தர்ப்பத்தில் பெருமானாருக்கு அன்பளிப்பாக ஒரு கூடை பேரீச்சம் பழம் வந்து சேர்ந்தது. அந்தப் பழக்கூடையும் குற்ற மிழைத்தவனையும் ஒன்றாக இணைத்து, அச் சிந்தனையில் ஒரு கணம் மௌனமாக இருந்தார்கள். பின்னர், அந்த ஏழையைப் பார்த்து, "இந்தக் கூடையிலுள்ள பழங்களைக் கொண்டுபோய் ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடு!" என்றார்கள்.

அந்த ஏழை நாணித் தயங்கியவாறே, "அல்லாஹ்வின் திருத்தூதரே! என்னைப் பார்க்கிலும் ஏழை, மக்காவில் எவருமில்லையே?" என்றான்.

முழுவதையும் அறிந்திருந்த நபிபெருமானாரின் திருமுகத்திலே சிரிப்பு மலர்ந்தது. ஏழையை நோக்கி, "அப்படியானால் இந்தக் கூடையிலுள்ள பழங்களைக் கொண்டுபோய் உன் குடும்பத்தினருக்கே பங்கிட்டுக் கொடுத்துவிடு" என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# High Class Printers

**Colour Printing a Speciality & Calender Works Under-taken**

VISIT

# TAS PRESS

1/25, Mookathal Street,
PURASAWALKAM, MADRAS-7

*T' phone :* **63012** *T' grams :* **"THAIYANNA"**

**ALSO,**

## TAS PRESS

**KILAKARAI**

*T' phone :* **44** *T' Grams :* **"THAIYANNA"**





"இன்றைய மீட்டிங்கிற்குக் கதிரை மனிதன் Lotus Pumpkin" என்றார் நண்பர். புதிய மணிப்பிரவாளம் எனக்குப் புரியவில்லை. இப்படிச் சங்கேத பாஷையிலே பீடிகை போட்டால், அவர் பெரிய விஷயத்தை விண்டு காட்டுவார் என்ற 'இரகசியம்' எனக்குத் தெரியும். நான் மௌனஞ் சாதித்தேன். "கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் Chairman. Chiar - கதிரை; Man - மனிதன். கதிரை மனிதன்தானே சரியான மொழி பெயர்ப்பு? ஆங்கிலத்தை தமிழாக்குவதும் தமிழ்த் தொண்டுஎன்றால்; தமிழை ஆங்கிலப் படுத்துவதும் தமிழ்த்தொண்டே! கமலபூசனி தலைமை தாங்குவார். கமலம் என்றால் Lotus, பூசனி என்றால் Pumpkin - மொழிப்பெயர்ப்புச் சரிதானே?" என்று விளங்கினார். அவரே தொடர்ந்தார். "நம்முடைய நாட்டிலே வயிற்றுப் பிழைப்பிற்காக மொழி பெயர்ப்பாளராகி விட்டவர்களெல்லாரும் சேர்ந்து தமிழைக் கொலை செய்யும் புது முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். Insurance என்றால் காப்புறுதியாம். அப்படியானால், Fire Insurance தீக்காப்புறுதிதானே? காப்புறுதி தீக்குத்தான் அளிக்கப் படுகின்றதா? இந்த இலட்சணத்தில் அபத்தக் கருத்துக்கள் வேறு! யார், யாரோ தயவை பிற்கதவுகளாலே பெற்று சென்னையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகா நாட்டிற்குச் சென்று தான் இந்த அம்மணிக்குள்ள Qualification. தான் ஒரு பரியாரியின்ரை பெண்டில் என்பது Additional Qualification என்ற விளம்பரம் வேறு! ஈழம் தந்த தலைசிறந்த விஞ்ஞானப் பேராசிரியர் மயில்வாகனம். அவருக்குக்கூட விஞ்ஞானம் படிப்பிக்கும் முறைபற்றி கருத்துக் கூற 'இது' முன்வந்திருக்கிறது என்றால், ஈழ நாட்டுத் தமிழுக்கு ஐயகோ!" என்றார் நண்பர். "இதற்கும் 13 ம் பக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?" என்று நான் மெதுவாகக் கேட்டேன். "நீர் பாலகிருஷ்ணன்; இந்த அம்மணியார் திருமதி பாலகிருஷ்ணன் ஆனபடியினால் பாலகிருஷ்ணன் என்ற பெயருக்குத்தானே இழுக்கு? அபசகுனம் 13ம் நம்பர் மட்டுமல்ல; தமிழுக்கு அபசகுனமாகி நாவடக்கம் இல்லாத சில பெண்மணிகளும் உலவத் தொடங்கியுள்ளதின் ஆபத்துப் புரியவில்லையா?" என்று கேட்டார். நண்பர் கூறியதிலும் உண்மை இருப்பதினால், இந்த விஷயங்களை இங்கே குறித்து வைத்து, மிகுதியைக் கொண்டோடி சுப்பருக்குத் தனிப்பட்ட முறையில் எழுதியனுப்பியுள்ளேன்.

—ஆர். பாலகிருஷ்ணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

786

# கல்கி பீடி

புகைப்பவர் மனதைக் களிநடம் புரிய வைப்பதில்
சிறப்பும் மதிப்பும் பெற்றவை

இலங்கையில் புகழ் பெற்ற

**786 கல்கி பீடிகள்**

சிந்தனை தருவது சிறந்த கல்கி பீடி!
பீடியில் சிறந்தது கல்கி பீடி!!
மணம், குணம், நிறைந்தது கல்கி பீடி!!!

தொலைபேசி ஆபிஸ்: **6043**

தொழிற்சாலை: **78946**

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்:

**சி. சின்னத்துரை அன் பிரதர்**

"கல்கி ஹவுஸ்",
79 & 79/1, மெசன்சர் வீதி,
கொழும்பு - 12.


நபி கதை: இரண்டு

## நீதி

ஏழைகளுக்குத் தண்டனை அளிப்பதிலே தயையும் கருணையும் காட்டிய நபிபெருமானார் அவர்கள், இறைவசனத்தை அமுல் நடத்த என்றுமே தயங்கவில்லை.

ஒரு சமயம் பாத்திமா என்ற பெண் ஒருத்தி திருட்டுக் குற்றஞ் செய்து விட்டாள். திருட்டுக் குற்றத்திற்குக் கையைக் கொய்வதே தண்டனை. ஆனால், பாத்திமா பனூமக்ஸூம் என்ற குடும்பத்தைச் சேர்ந்தவள். அக்குடும்பம் குறைஷியருக்குள்ளே சிறப்பு மிக்கது. இத் தண்டனையால் குடும்பத்தின் கௌரவம் பாதிக்கப்படும் என்று குறைஷித் தலைவர்கள் நினைத்தார்கள். ஒன்றுகூடி ஆலோசித்து, அப்பெண்ணிற்காகப் பரிந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் போய்ப் பேசுமாறு உஸாமா இப்னுஜைத் என்னும் நாயகத்தோழரைத் தூதனுப்பினார்கள்.

உஸாமா நபிகளாரின் அன்பிற்கும் பிரீதிக்கும் பாத்திரமானவர். அவர்களால் அவர் மகனைப் போல வளர்க்கப்பட்டவர்.

உஸாமாவின் உரைகளைக் கேட்ட நபி பெருமானார் (ஸல்) அவர்கள், 'இறைவன் பணித்த கட்டளையில் நீர் குறுக்கிடுகின்றீரா?' என்று கேட்டார்கள். உஸாமா மௌனஞ் சாதித்தார்.

அப்பொழுது அங்கு குழுமியிருந்த மக்களைப் பார்த்து, 'செல்வாக்குடையோர் திருடினால் தவிர்ப்பதும், ஏழைகள் திருடினால் தண்டிப்பதுமாக மக்கள் இருந்தனர். இவ்வநீதியே அவர்களுடைய நாசத்திற்குக் காரணமாக அமைந்தது. அல்லாஹ்வின் திருநாமத்தால் கூறுகின்றேன். இந்த முஹம்மதின் மகள் பாத்திமா திருடினாலுங்கூட, அவள் கரத்தைக் கொய்து இறைவன் ஆணையை நிறைவேற்றுவேன்' என்று நீதியின்மீது வைத்திருந்த வைராக்கியப் பற்றுதலைக் காட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டில் ஈழத்தின் நான்கு பகுதிகளிலும் நடைபெற விருக்கும் மீலாத் விழாக்களிலே கலந்து உரை நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவாளராக திருப்பூர் மொஹிதீன் அவர்கள் வருகை தருகிறார்கள். அவருடைய மார்க்க அறிவையும், நாவன்மையையும் கேட்டின்புறும் வாய்ப்பினைப் பல்வேறு இடங்களிலும் செயற்படும் மீலாத் விழா அமைப்புக் குழுக்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் உவகைக்குரியது.

'மீலாத் விழாக்களிலே கலந்து கொள்ளவரும் மொஹிதீன் அவர்களே! வருக, வருக!' என இளம்பிறை வரவேற்கின்றது. ஈழத்து அனுபவங்கள் இனிமையாகவும், பசுமையாகவும் நிலைத்து நிற்கட்டும் என வாழ்த்துக் கூறுகின்றது.

ஈழத்து முஸ்லிம் பெருமக்களுக்கு திருப்பூர் மொஹிதீனின் குறிப்பிட்ட சில ஆற்றல்களைத் தரிசிக்கும் வாய்ப்பே கிட்டுகின்றது. அரசியல் அரங்கில் அவர் சாதித்தவற்றை அறியும் வாய்ப்பு இல்லாது போய்விடக் கூடும். எனவே, அவருடைய அரசியல் வாழ்வினை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகும் இக் கட்டுரையைப் பிரசுரிப்பதை இளம்பிறை தனது கடமையாகக் கொண்டுள்ளது. ஆ-ர்.

# திருப்பூர் மொஹிதீன்

"அரன்"

பதவிப் பேறுகள் எதுவும் அடையாமலே, முப்பத்தைந்து ஆண்டுகள் தன்னலமற்ற அரசியற் பணி புரிவது என்பது, அரசியல் உலகில் ஓர் அற்புத விந்தையாகும். அந்த விந்தையைக் காரிய சாதனையாக இயற்றி நம் மத்தியில் வாழ்ந்து வருபவர்தான் திருப்பூர் மொஹிதீன். அவர் தமிழ்நாடு முஸ்லிம் லீக் துணைத் தலைவர்; நாடறிந்த நாவுக்கரசர்; வீரவாள் பரிசு பெற்ற தளபதி!

தளபதி மொஹிதீன் அவர்களுடைய அரசியல் வாழ்வு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பரந்துபட்டதாகும். 'கொடி காத்த குமரன்' என்று, பாரத சுதந்திரப் போராட்டத்தில் தமிழரின் வீறுக்கும் வீரத்திற்கும் இலக்கணமாக விதந்தேத்தப்படும் திருப்பூர்க் குமரரும், திருப்பூர் மொஹிதீனும் ஒரே ஊரவர்கள் மட்டுமல்ல; சம காலத்தவர்கள்; ஒன்றாக அரசியல் என்னும் வேள்விக் குண்டத்திலே குதித்தவர்கள். அந்நிய நாட்டுத் துணிப் பகிஷ்கரிப்புத் போராட்டத்திலே தான் இருவரும் அரசியல் அரங்கில் அடியெடுத்து வைத்தார்கள். இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் ஓர் அங்கமாகக் கிளைத்த ரயில் வண்டி மறியலிலும் இருவரும் ஒன்றாகவே செயலில் இறங்கினர்.



மறியல் போராட்டம் அன்று. விடியற் காலை 8-30 மணிக்கு ரயில் வண்டியின் முன்னாற் படுத்து திருப்பூர் மொஹிதீன் அவர்கள் மறியல் செய்தார்கள். இதுவே மறியல் இயக்கத்தின் தொடக்கம். உடனேயே அவர் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து சரியாகக் காலை 8-45 மணிக்கு திருப்பூர் குமரன் ரயிலுக்கு முன் படுத்து மறியல் செய்தார். போலீஸாரின் தடியடி. ஆக்கினையின் மத்தியிலும் சுதந்திரக் கொடியின் மானத்தைக் காத்தார்; அமரரானார்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில், தமிழ் நாட்டு அரசியலில் மூத்த தளபதியென்றழைக்கப்பட்ட பட்டுக்கோட்டைச் சிங்கம் அழகிரிசாமி அவர்கள், அன்று நடைபெற்ற அரசியற் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில், "ஒரு திருப்பூர்க் குமரனுக்கு ஈடாக எமக்கு ஒரு திருப்பூர் மொஹிதீன் கிடைத்திருக்கின்றார். குமரனின் பணியை மொஹிதீன் தொடருவார்" எனக் குறிப்பிட்டார். அழகிரிசாமியின் அன்றைய கணிப்புச் சற்றும் பிசகவில்லை. மொஹிதீன் அவர்களின் பணி இன்றுந் தொடர்கின்றது.

மொஹிதீன் அவர்கள் நாவன்மை மிக்க பேச்சாளர் ஆவர். இஸ்லாமியர் வாழும் பகுதிகளிலெல்லாம் தம் சிம்மக் குரலால் இயக்க எழுச்சி ஊட்டினார்; ஊட்டி வருகிறார். ஆங்கிலக் கல்வி மூலம் பட்டம் பெற்றவர்களும் தெளிவுபடுத்த முடியாத சிக்கலான அரசியற் பிரச்சினைகளையெல்லாம் தமக்கே உரிய கம்பீரத் தொனியிலே, கேட்போர் நெஞ்சை ஈர்க்கும் வகையில் விளக்க வல்ல ஆற்றல் பெற்றவர். தான்றோன்றித் தலைமைக் குணத்தை வெறுப்பவர். இயக்க ரீதியான கட்டுப்பாடுகளுக்கு பணியும் பண்பினர். சமுதாயப் பணியையே வாழ்க்கையின் இலட்சியமாக வரித்துக்கொண்டவர்.

தேசியப்போராட்ட காலங்களிலும் சரி, முஸ்லிம் லீக்கின் புனருத்தாரண அரசியற் பணிகளிலுந் சரி, மொஹிதீன் அவர்களின் தொண்டு தனித்துவ முத்திரை பெற்றுத் திகழ்ந்தது. லீக்குற்குள் மிதவாதக் கொள்கைக்கு மாறுபட்ட தீவிர செயற் போக்கினை ஆதரிப்பவர். மக்களுடன் மக்களாக வாழ்ந்து, மக்களுடைய துன்பங்களையும் துயரங்களையும் தெளிவாக உணர்ந்திருப்பதே இவருடைய இத்தகைய போக்கிற்குக் காரணம் எனலாம். இதனால் இவர் இடதுசாரி அரசியல்வாதி என்றும் கணிக்கப்படுகின்றார்.

மொஹிதீன் அவர்களுடைய இத் தனித்துவப் போக்கு 1941ம் ஆண்டிலேயே தூலமாகத் தெரிவதாயிற்று. அவ்வாண்டில் முஸ்லிம் லீக்கின் தலைமைப் பதவிக்கு ஜனாப் அப்துல் ஹமீத் அவர்களும், காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாகிப் அவர்களும் போட்டியிட்டனர். அப்துல் ஹமீத் இடதுசாரி மனப்பான்மை உடையரல்லர். எனினும், மிதவாதி அல்லர். இதன் காரணமாக மொஹிதீன் அவர்கள் அப்துல் ஹமீதை ஆதரித்தார். அதன் விளைவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இன்று மொஹிதீன் அநுபவிக்கின்றார் என்று அவருடைய அரசியல் வாழ்க்கையைக் கூர்ந்து அவதானிக்கும் விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

மொஹிதீன் அவர்கள் பணி பயனிற் பற்றற்றது. பிரிக்கப்பட்ட இந்தியாவில் முஸ்லிம் லீக் சிறிது காலம் செயற் படாமல் இருந்தது அப்பொழுதுகூட மொஹிதீனின் பணி பட்டிதொட்டியெல்லாம் தொட்டுப் பரவியது.

அவருடைய கலப்பற்ற தொண்டு மனப்பான்மையும், சீரிய சொற்பொழிவாற்றும் நாவன்மையும், பிரிக்கப்பட்ட இந்தியாவில் முஸ்லிம் லீக் முறையாகச் செயற்படத் தொடங்குவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே, காயல்பட்டணத் தொல்குடி மக்கள் உணர்ந்து கௌரவித்தனர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. 1954 ம் ஆண்டில் இதற்காகக் காயற்பட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவிலே அவருக்கு வீரவாள் வழங்கப்பெற்றது; தளபதி என்ற கௌரவவிருதும் சூட்டப்பெற்றது.

பாரதத்தில் முஸ்லிம் லீக்கின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கான முயற்சிகள் 1956 ஆம் ஆண்டின் ஆரம்பத்திற் பரவலாக மேற் கொள்ளப்பட்டது. லீக்கின் அமைப்பாளராக காயிதே மில்லத் தெரிவு செய்யப்பட்டார். இதே ஆண்டில், சென்னை ராஜாஜி மண்டபத்தில் முஸ்லிம் லீக் கவுன்சிலின் கூட்டம் நடைபெற்றது. முஸ்லிம் லீக் கலைக்கப்படல் வேண்டுமென்றும், அன்றேல் முஸ்லிம் மக்கள் வன்முறையிற் பழிவாங்கப்படுவார்கள் என்றும், பட்டதாரிகளான முஸ்லிம்கள் அச்சம் தெரிவித்தனர். சிலர் லீக்கைக் கலைத்து விட்டு, சுய ஆதாயம் பெறவும் விழைத்தனர்.

எப்படியும் முஸ்லிம் லீக் செயற்படல் வேண்டுமென்ற கொள்கையில் காயிதே மில்லத் உறுதியாக நின்றார். அப்பொழுது அவருடைய கொள்கைக்கு உறுதுணையாக நின்று, அவருடைய முயற்சிகளிற் பக்க பலமாக உழைத்தவர்கள் திருப்பூர் மொஹிதீன், கே. டி. எம். அஹ்மது இப்ராஹிம் சாகிப், எம். எல். ஏ. மஜீது, ரஜாகான் ஆகியோரேயாவர். உழைப்புப் பயன் தந்தது. அகில இந்திய முஸ்லிம் லீக் என்ற பெயர் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்திய யூனியன் முஸ்லிம் லீக் என மறு நாமகரணஞ் செய்யப்பட்டது.

இந்திய யூனியனில் முஸ்லிம் லீக் அரசியல் நிறுவனமாகச் செயற்படுவது பற்றிய வாக்கெடுப்பில் ஒன்பது பேர் எதிர்த்து வாக்களித்ததுடன், சிலர் லீக்கின் அங்கத்துவத்தையும் துறந்தனர். எதிர்த்தோருள் தை. அ. செய்யது அப்துல் காதர் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். ஆயினும், அப்பொழுது அதனை அரசியல் நிறுவனம் ஆக்க வேண்டும் என்று அநுசரணையாக வாக்களித்த எண்மருடைய சலியாத உழைப்பினால், 1956 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட்ட கோட்பாடுகளையும், சட்ட திட்டங்களையும் அடித்தளமாக வைத்து, 1958 ஆம் ஆண்டளவில் இயக்க ரீதியாகச் செழிப்புடன் செயற்படலாயிற்று.

1960 ஆம் ஆண்டில் முஸ்லிம் லீக்கின் மாநாடு குரோம் பேட்டையில் நடைபெற்றது. இம்மாநாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், இந்த மகாநாட்டிலேதான் பொதுத் தேர்தலில் லீக் போட்டியிடுவது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. இத்தீர்மானத்திற்கு அமைய 1962 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், எதிர்க் கட்சிகள் சிலவற்றின் ஆதரவுடன் லீக் வேட்பாளர் எழுவர் தமிழ் நாட்டிற் போட்டியிட்டனர். அத் தேர்தலில் எந்த வேட்பாளரும் வெற்றியீட்டத் தவறினர். ஆனால், லீக்கின் ஆதரவுடன் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தமிழ்நாடு சட்ட சபையில் ஐம்பது இடங்களில் வெற்றியீட்டினர். தேர்தலிலே செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ்நாடு மேற் சபைக்கு லீக்கின் பிரதிநிதி ஒருவரை வேட்பாளராக நிறுத்தத் தி. மு. க. முன்வந்தது.

பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த எவரையும் மேற்சபைக்கு வேட்பாளராக நிறுத்துவதில்லை என்ற முடிவினை லீக் எடுத்திருந்தது. இதன் காரணமாக மேற் சபை உறுப்பினராகும் நல்லொரு சந்தர்ப்பத்தைத் திருப்பூர் மொஹிதீன் இழக்க நேரிட்டது. இருப்பினும், ராஜ்ய சபைக்கு (தில்லி மேற்சபை)லீக் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்யும் வாய்ப்பு வரும்பொழுது திருப்பூர் மொஹிதீன் அவர்களுக்கே முதலிடம் கொடுப்பது என்று அப்பொழுது கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1964 ஆம் ஆண்டில் அத்தகையதொரு வாய்ப்பு ஏற்பட்டது. லீக்கில் புதிதாகச் சேர்ந்த சில ஆங்கிலப் பட்டதாரிகள், முதுபெரும் அரசியல்வாதியான மொஹிதீன் அவர்களுக்குப் போதிய ஆங்கில ஞானமில்லை என்பதைக் காரணமாகக் காட்டி, அந்தப் பெருமை அவருக்குக் கிட்டாதவாறு தடுத்தனர். இது மொஹிதீன் அவர்களுக்கு எதிராக லீக்கின் அங்கத்தினர் இயற்றிய மாபெரும் அநீதியாகும். ஏனெனில், 1962 ஆம் ஆண்டில் தில்லி லோக சபைக்கு (நாடாளுமன்றத்திற்கு) போட்டியிடும் தகைமை திருப்பூர் மொஹிதீனுக்கு இருப்பதாகக் கணித்து, அவரை ஒரு வேட்பாளராக நிறுத்திய லீக்கின் காரிய சபை, 1964 ஆம் ஆண்டில் ராஜ்ய சபைக்குப் போட்டியிடும் தகைமை இல்லை என முடிவெடுத்தமை எவ்வகையிலும் நியாயஞ் சார்ந்ததாக அமைய மாட்டாது. இச் செயல் தமிழ்நாட்டு அரசியல்வானில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

1966 ஆம் ஆண்டில் சென்னை மேற்சபையில் காலியாகும் இடம் ஒன்றினை எப்படியும் தி. மு. க. ஆதரவுடன் மொஹிதீன் அவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதாக அப்பொழுது மிகுந்த சமாதானம் கூறப்பட்டது. ஆயினும், இந்த வாக்குறுதியும் காப்பாற்றப்படவில்லை. சென்னை மேற்சபை உறுப்பினர் பதவி தேவையில்லை; சென்னை நகரகார்ப்பரேஷன் துணைமேயர் பதவியே வேண்டும் என்று 1966 ஆம் ஆண்டில் லீக் செய்த தீர்மானம் வேண்டுமென்றே மொஹிதீனுக்குச் செய்யப்பட்ட நம்பிக்கை மோசடியாகும் என்று முஸ்லிம் லீக் பிரமுகர்களே அன்று அபிப்பிராயம் வெளியிட்டார்கள்.

1967 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல்கள் வந்தன. சில வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டதின் பேரில் மொஹிதீன் போட்டியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டியூக் டிஸ்டம்பர்

உங்கள் கட்டிடங்களின் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் டியூக் டிஸ்டம்பர் பூசுங்கள். அது உங்கள் கட்டிடங்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது; கவர்ச்சி ஊட்டுகிறது.

**டியூக் டிஸ்டம்பர்**
20 வண்ணங்களில் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்:

**டியூக் டிஸ்டம்பர்**

**LANKA PAINT Co.,**
**291, Main Street,**
**COLOMBO-11**



*When You Look For*

JAM JELLIES OR CORDIAL
PLEASE DO NOT BUY
UNTIL YOU HAVE
SEEN

**CHERRY'S**

CHERRY'S JAM & CORDIALS
Are The Best in The
Market Today
Please Ask For "CHERRY'S".

**CHERRY'S PRODUCTS**
Manufacturers of Jam, Jellies, Cordials Etc.,
**COLOMBO.**


டவில்லை: 1968 ஆம் ஆண்டில் ராஜ்ய சபைக்கு லீக்கின் வேட்பாளராக மொஹிதீன் அவர்களை நிறுத்துவதுஎனவாக்குறுதி தரப்பட்டது. 1968 ஆம் ஆண்டு வந்தது. லீக்கின் காரிய கமிட்டி கூடிற்று. ராஜ்ய சபைக்கு லீக்கின் மனு கோரி மொஹிதீன் அவர்களுடன் கே. டி. எம். அஹ்மது இப்ராஹிம் சாஹிப், எஸ். ஏ. காஜா முஹைதீன் ஆகியோரும் விண்ணப்பித்தனர். திருப்பூர் மொஹிதீனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மீண்டும் மீறப்பட்டு, யாரை லீக்கின் வேட்பாளராக நிறுத்துவது என்பதைக் காரிய சபை வாக்கெடுப்பின் மூலம் தீர்மானித்தது. வாக்கெடுப்பில் காஜா முஹைதீனுக்குத் திருப்பூர் மொஹிதீனைப் பார்க்கிலும் ஐந்து அதிகப்படி வாக்குகள் கிட்டின.

கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டமையையோ, தனக்குப் பதவிகள் கிட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றாகக் கை நழுவியமையையோ பாராட்டாது, கவலையோ ஏமாற்றமோ சிறிதும் கொள்ளாது, இன்னமும் தமது அரசியற் பணியினைச் செவ்வனே இயற்றி வருகின்றார். இதுவே மொஹிதீன் அவர்களின் சிறந்த பண்பிற்கு உதாரணமாகும்.

இச் சந்தர்ப்பத்தில் ஜனாப் தை. அ. செய்யது அப்துல் காதருக்கும் மொஹிதீனுக்குமுள்ள தொடர்பினைக் குறிப்பிடுதல் பொருத்தமானது. அப்துல் காதர் அவர்கள் லீக்கின் பொருளாளராகக் கடந்த ஏழு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். முஸ்லிம் லீக் அரசியற் கட்சியாகச் செயற்படுவதில் திருப்பூர் மொஹிதீனுடன் இவர் அன்று கருத்து வேற்றுமை கொண்டிருந்த போதிலும், இன்று அவருடைய வலக்கரமாக இணைந்து உழைத்து வருகின்றார். சென்னை மேற்சபைக்கு லீக்கின் மனுக்கோரி இருவர் போட்டியிட்டனர். ஒருவர் தை. அ. செய்யது அப்துல் காதர்; மற்றவர் ஜானி சாஹிப். தை. அ. அவர்களும் ஐந்து வாக்குகளாற் தோற்கடிக்கப்பட்டார். மொஹிதீன் அவர்கள்மீது கொண்டுள்ள பற்றுக் காரணமாகத்தான் தை. அ. தோற்கடிக்கப்பட்டார் என்பதும் அரசியல் வட்டாரத்தின் அபிப்பிராயமாகும்.

திருப்பூர் மொஹிதீன், தை. அ. செய்யது அப்துல் காதர் போன்றவர்கள் சுய பயன் கருதாது பொதுப்பணி புரியும் பண்பினர். லீக்கின் கட்டுப்பாடுகளுக்கு, எவ்வளவு நம்பிக்கை மோசடிகள் நடைபெற்ற போதிலும், கீழ்ப்படிந்து பணிபுரிவதை இலட்சிய நெறியாக ஒழுகுகின்றனர்.

எந்த அரசியற் கட்சிக்குள்ளும் உள்கட்சிப் போராட்டம் நடைபெறுவதுண்டு. இந்த உள்கட்சிப் போராட்டம் கட்சியின் கொள்கை அடிப்படையில் மட்டுமே நடைபெற்றால், வரவேற்கத் தக்கதே. ஜனநாயக வளர்ச்சிக்கு இந்த உள்கட்சிப் போராட்டம் உதவியாகவும் இருக்கும். ஆனால், முஸ்லிம் லீக்கிற்குற் நடைபெறும் உள்கட்சிப் போராட்டம் வேறு வகையில் அமைந்திருத்தல் ர்சபேதமாக உள்ளது. கோஷ்டிப் பிரிவினை ஒருவரை ஒருவர் அழிப்பதற்கோ குறிப்பிட்ட ஒரு கோஷ்டியினரை அடக்கி ஒடுக்குவதற்கோ பயன் படுத்தப்பட்டு வருதல் வேதனைக்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கட்டடத் தளபாடங்கள்
★ அரிசி ஆலே மெஷின்கள்
★ அரைக்கும் மெஷின்கள்

இத்தியாதி இயந்திரங்களுக்கு
நம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்

★

கே. என். அப்துல் காதர் ராவுத்தர்
அன் கோ. லிமிட்டெட்,

312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு-10.

தொலேபேசி: 32028 & 32956

## லங்கா பேனு கம்பெனி

0 பவுண்டின் பேனுக்கள்
0 போல் பைண்ட்டு பேனுக்கள்
0 சுடுநீர்ப் போத்தல்கள்
0 விளக்குகள்
0 மணிக்கூடுகள்
0 ரெடிமேட் உடைகள்
0 உணவு வகைகள்

இவற்றிற்குப் பெயர்பெற்ற இடம்.

44, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

தந்தி: "WELLCOME" தொலேபேசி: 29577

ALLENS TOFFEES
ALLENS SWEETS
Delicious & Nutritious

MANUFACTURED WITH
MODERN MACHINERY
AND
UNTOUCHED BY HAND

BUY ALLENS CONFECTIONERY

ABRAHAM INDUSTRIES

64, Hultsdorf Street,
COLOMBO-11.

Phone: 2032

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் லீக்கிற்குள் புதிதாகப் புகுந்துள்ள ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் ஒரு கோஷ்டியாகவும், மற்றவர்கள் பிறிதொரு கோஷ்டியாகவும் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. ஆங்கில துரைத்தனத்தின் மிச்ச சொச்சமான ஆங்கிலக் கல்விக்கு அரசியற் கர்மவீரர்கள் பலியிடப்படுதல் முறையன்று. இதிலும் முறைகேடானது ஆங்கிலக் கல்வி படைத்தவர்கள், ஏனையோரின் தொண்டினைச் சொந்தப் புகழ் ஏணியில் முன்னேறுவதற்குப் பயன்படுத்துதல்.

இத்தகைய போக்கு முஸ்லிம் லீக்கின் எதிர்காலவளர்ச்சியைப் பாதிக்கும்; ஊறு விளைவிக்கும். திருப்பூர் மொஹிதீன் போன்றவர்கள் அனுபவம் மிக்கவர்கள். பொதுமக்களின் மனச் சாட்சியாகவும், உண்மைப் பிரதிநிதிகளாகவும் செயற்படுபவர்கள். அவர்களுக்கு தமிழ் நாட்டின் அரசியலில் தனித்துவமான நிரந்தர இடம் உண்டு.

பொது மேடைகள் மூலம் பொது மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட செம்மல்களுள் மூவர் விசேடமாகக் குறிப்பிடத் தக்கவர்கள். முதலில் பெரியார் ஈ.வே ரா. வைக் குறிப்பிடலாம். அவர் கண்ட மேடைகள் பதினையாயிரத்திற்கும் அதிகமென்று கணிப்பர். அடுத்தது திருப்பூர் மொஹிதீன். இவர் சுமார் பத்தாயிரம் மேடைகளில் உரை நிகழ்த்தியுள்ளார். மூன்றாமவர் தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை இவர் சுமார் ஏழாயிரம் மேடைகளில் உரை நிகழ்த்தியிருக்கலாம் எனக் கணிக்கப்படுகின்றது.

இனிமேல் தாம் எந்தவொரு பதவிக்கும் போட்டியிடுவதில்லை என்ற தீர்மானத்திற்குத் திருப்பூர் மொஹிதீன் வந்திருப்பதாகவும் அறிகின்றோம். அத் தீர்மானம் விரக்தியிலே முளை கொள்ளாது, 'பதவிப் பித்தர்கள் பதவியை அனுபவித்துக் கொண்டு போகட்டும்; நம் வழி பணி செய்து கிடப்பதே' என்ற எண்ணத்தில்வேர்கொண்டதாக இருக்கலாம். பதவியிலிருந்து கூச்சப்பட்டு ஒதுங்கும் இவரை, முஸ்லிம் லீக் உரிய முறைப்படி கௌரவித்து, இப்பொழுது ஏற்பட்டுள்ள களங்கத்தைத் துடைக்க முன்வரல் வேண்டும். முதிய தொண்டர்களை உரிய முறைப்படி கௌரவிக்கும் மரபுதான் எந்தவொரு இயக்கத்திற்கும் நிலையான ஒரு பாரம்பரியத்தை உருவாக்கித் தர வல்லது என்பதைப் புதியவர்கள் உணருதல் வேண்டும்.

எனவே, இத்தகைய சிறப்புடைய தளபதி திருப்பூர் மொஹிதீன் அவர்களை நாளையாவது உரிய மதிப்புடன் முஸ்லிம் லீக் நடத்திக் கௌரவிக்கும் என இளம்பிறை எதிர்பார்க்கின்றது. ●

---

நமது மீலாத் மலர் அட்டையை அலங்கரிக்கும் பிரமுகர்
நாவுக்கரசு தளபதி
**திருப்பூர் மொஹிதீன்**
அவர்களாவர்.

---



# மௌலிதுந் நபி

**எ. எம். எ. அஸிஸ்**

காஹிராவுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள அப்பபாஸிய மைதானத்தில் நடைபெறவிருந்த உத்தியோக பூர்வமான மௌலிதுந் நபி கொண்டாட்டங்கள் பற்றி எமது நெருங்கிய நண்பர் ஸயீத் அல்-சயிலானி பல நாட்களுக்கு முன்பே அறிவித்திருந்தார். அக் கொண்டாட்டங்களைக் கண்டு களிப்பதற்கும், இலங்கையில் நடைபெறும் கொண்டாட்டங்களுக்கும் இவற்றுக்குமுள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொள்வதற்கும் நாங்கள் ஆவலுடன் காத்திருந்தோம்.

நான் பள்ளிச் சிறுவனாயிருந்த காலத்தில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த நாளை வீடுகள் தோறும் மௌலூத் ஓதிக் கொண்டாடுவது வழக்கம். பின் வந்த ஆண்டுகளில் இந்திய நடைமுறையினைத் தழுவி, இந் நாளைக் கொண்டாடு முகமாகப் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இப் பழக்கம் இந்தியாவிற் கூட வெளிநாட்டிலிருந்து வந்ததாயிருக்கலாம். அல்லது அலி சகோதரர்கள் (மௌலானா சௌக்கத் அலி என்னும் மூத்த சகோதரரும், காயிதே ஆஸம் ஜின்னாவுக்கு முன் இந்திய அரசியல் அரங்கில் செல்வாக்கு மிக்க தலைவராகத் திகழ்ந்த மௌலானா முகம்மத் அலியும்) தலைமையில் நடைபெற்ற ஹிலாபத் கிளர்ச்சிகளின் போது பிரபலமடைந்திருக்கலாம்

இப் பொதுக் கூட்டங்களுக்கு மௌலவிகள் மட்டுமல்லாமல் முஸ்லிம் பிரமுகர்கள், பிறமதப் பெரியார்கள் ஆகியோரும் பேச்சாளர்களாக அழைக்கப்படுவது வழக்கமாயிருந்தது. இந்த வகையான கொண்டாட்டங்கள் முறையானவைகளா என்பது பற்றிச் சிலர் ஆட்சேபம் தெரிவித்தார்கள். குலஃபாயி ராஷிதீன்கள் காலத்தில் இத்தகைய கொண்டாட்டங்கள் நடைபெற்றதில்லை யென்பது இவர்கள் காட்டிய காரணமாகும். வேறு சிலர் முஸ்லிம்கள் அல்லாதார் இக் கூட்டங்களில் உரை நிகழ்த்துதல் முறையல்ல வென்று கண்டித்தார்கள். முஸ்லிம்கள் அல்லாதவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகம் கண்ட மாபெரும் புருஷர்களில் ஒருவரெனக் கௌரவித்துப் போற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள் என்பது உண்மையே; ஆனால், முஸ்லிம்களுக்கோ பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதி நபி; நபிகளின் முத்திராங்கமானவர்; எக் காலத்துக்கும் எல்லாத் தேசங்களுக்கும் பொருத்தமான இறைவாக்கைப் பிரகடனஞ் செய்தவர். அப்படி இருக்கையில் முஸ்லிம்கள் அல்லாதாரைப் பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்த நாட் கொண்டாட்டங்களில் பிரசங்கம் புரிய அழைப்பது அபசாரமான செயலாகும், அல்லது ஊக்குவிக்கத்தக்க செயல் அல்ல, என்பது இவர்கள் வாதம். அகில இலங்கை வை. எம் எம். எ.யினர் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் முதல் முறையாக கால்பேஸ் மைதானத்தில் மீலாத் கொண்டாட்டத்தினை நடத்த ஏற்பாடு செய்த போது இக் கருத்தை அனுசரித்தே நடந்தார்கள். இதற்கு முன்னர், 1930 ஐ அடுத்து வந்த ஆண்டுகளில் முஸ்லிம் தலைவர்களுக்கிடையில் பலத்த சர்ச்சையொன்று நடைபெற்றது. மீலாத் கொண்டாட்டங்களில் சர்வதேச அல்லது சுதேச அரசியல் சம்பந்தமான தீர்மானங்கள் நிறைவேற்றப் படலாமா என்பதே சர்ச்சைக்கான விஷயமாயிற்று என் நினைவுக்கு எட்டிய வரை இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டுமே இத்தகைய தீர்மானங்கள் நிறைவேறின. அதன் பின்னர் இவ் வழக்கம் கைவிடப்பட்டது. இதற்குக் காரணம் முஸ்லிம் தலைவர்கள் எல்லலோரும் ஏக மனதாக, மீலாத் விழாக்களில் அரசியல் விஷயங்களை இழுக்கக் கூடாதென்று தீர்மானித்தமை அன்று; தீர்மானங்களின் சாரம் பற்றியோ வாசகம் பற்றியோ உடன்பட்டுக்கு வரமுடியாமையே.

அக் காலத்தில் இக்காலத்தைப் போன்று பாடசாலைகளில் மீலாத் விழா கொண்டாடப்படவில்லை. அரசினர் முஸ்லிம் பாடசாலைகள் இல்லாதிருந்தமையே இதற்குக் காரணம் எனலாம்.

வீதிகளில் கடதாசிக் கூடுகள், கொடிகள், தோரணங்கள் கட்டிக் கொண்டாடும் வழக்கம் அண்மையில் தோன்றியுள்ளது. இவ் வழக்கம் பக்திக்குப் பதில் படாடோபத்தையும் ஆத்ம ஊக்கத்திற்குப் பதில் அநியாயச் செலவுகளையும் உண்டாக்குகின்றன என நியாயங்காட்டி இம் முறையை வன்மையாகக் கண்டிக்கின்றனர் மௌலவிகள் சிலர்.

இவ்வாறாகப் பார்க்கும் போது மீலாத் விழாக் கொண்டாட்டங்களில் பக்தி சான்ற பழையன நிலைத்து நிற்கும் அதே வேளையில் புதியன புகுதலையும் காண்கிறோம். இக் கொண்டாட்ட முறைகள் யாவற்றையும் ஆராய்ந்து, இளஞ்சிறாரின் மதப் பயிற்சிக்கும் கல்விக்கும் தக்கவை யாவை, தகாதவை எவை என்பதை அறிந்து தக்கவற்றை ஏற்றுத் தகாதவற்றைத் தள்ளல் வேண்டும். மக்களிடையேயும் ஜமாஅத்களிலேயும் இஸ்லாம் பற்றியும் நபிகள் (ஸல்) பற்றியும் ஆழமான அறிவை ஏற்படுத்துதல், பக்தியுணர்வைத் தூண்டுதல் ஆகிய குறிக்கோள்களை உரைகல்லாகக்கொண்டே இதனைத் தீர்மானித்தல் வேண்டும்.

மேலும், விழாத் திருப்திகரமாக அமைவதற்கு, இப்பொழுது வழக்கற்றுப்போன கூடு, கொடிகள், புராணங்கள் வகித்த இடத்தில் இவற்றில் திருத்திப் புதிப்பித்த சிலவும் புத்தம் புதியவை சில



வும் இடம் பெற்று பழையன கொடுத்த உணர்வு நிறைவை ஏற்படுத்துதல் வேண்டும். இலங்கையின் முஸ்லிம் சமுதாயத்தின இன்றைய நிலைமைகளின் பின்னணியில் இச் சமுதாயத்தின் ஊறுபடாத் தனித்துவத்தையும் முழுமையையும் பேணுவதற்கும் பாரம்பரியங்களை வளர்ப்பதற்கும் மீலாத் விழாக் கொண்டாட்டங்கள் அத்தியாவசியமானவையே. ஜீ. ஈ. வொன் குருணவோம் என்னும் அறிஞர் முகம்மதியப் பெரு நாட்கள் என்றொரு நூலை எழுதியிருக்கிறார். (இவரை 1957-8-ல் லாகூரில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டிலும் பின்னர் 1959-ல் கராச்சியில் நடைபெற்ற கலாசார காங்கிரஸ் மாநாட்டிலும் சந்தித்ததின் பயனாக அவர் இந் நூலை எனக்கு அன்பளிப்பாக வழங்கினார்.) இந் நூலின் 4ம் அத்தியாயத்திலே, கி. பி. 1207ல் இராக்கில் மொஸூலுக்கு அண்மையில் நடைபெற்ற மீலாத் கொண்டாட்டம் பற்றிச் சரித்திராசியர் இப்னு கலிகான் கொடுத்திருக்கும் வர்ணனை இடம் பெற்றிருக்கிறது. இதனை வாசித்தபோது, காஹிறாவில், அப்பாஸிய மைதானத்தில் நான் கண்ட மௌலிதுந்நபி கொண்டாட்டம் மேற்படி விழாவை அடியொற்றி அமைந்திருந்ததை அவதானித்தேன். பிரமாண்டமான முறையில் கோலாகலமாகக் கொண்டாடப்பெற்ற முதலாவது மீலாத் விழா 1207ல் நடைபெற்ற மேற் குறித்த விழாவென்பது வரலாற்றாசிரியர் கருத்து. மாமன்னர் சலதீன்-சலாஹுத்தீன் ஐயூபி-இன் மைத்துனரான முஸாபர் அல்தீன் கொவ்புரா இவ் விழாவை ஏற்பாடு செய்தார் என்று நம்பப்படுகிறது. அக் காலத்திற் கூட உலமாக்கள் சிலர் இத்தகைய கொண்டாட்டங்கள் பிதாஅத் என்று கண்டித்தார்கள். இவர்களில் 1505 ல் மௌத்தான சுயூத்தி என்பவர் மீலாத் கொண்டாட்டங்களின் சாதக பாதகங்களை ஆராய்ந்து இவ் விழாக்கள் பிதாஅத்தாக இருந்தாலும் வரவேற்க வேண்டிய ஒரு புதுமை-பிதாஹஸனா-என்று தீர்ப்பு வழங்கினார். இறைவாக்கினை ஓதுதல், பெருமானாரின் புகழ் பாடுதல் ஆகியவையே மீலாத் கொண்டாட்டங்களின் பிரதான அம்சங்கள் எனவும் பவனி, கந்துரி மற்றும் களியாட்டங்கள் யாவும் துணை அம்சங்கள் எனவும் அவர் தீர்ப்பளித்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பாடப்பட்ட மௌலூது என்னும் புகழ்ப் பாக்கள் அவர்கள் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களையும் மனாகிபுகளையும் நயம்பட விபரிக்கின்றன. இத்தகைய மௌலூதுகள் பல ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாட்டில் பெருவழக்கில் இருப்பதைக் காணலாம். உதாரணம்: மிஸ்றில் புர்தா; துறுக்கியில் சுலைமான் சலபி மௌலூது, தென்னிந்தியாவில் சுப்ஹான மௌலூது; கிழக்காபிரிக்காவில் பர்ஸஞ்சி. இம் மௌலூதுகளை ஆராய்ந்தால், இவற்றை இயற்றிய ஆசிரியர்களின் ஆத்மிக அனுபவத்தை மட்டுமன்றி அவ்வப் பகுதி மக்களின் குணவியல்புகளையும் நாம் அறிந்து கொள்ளலாம். மேற்சொன்ன மௌலூதுகளில், புர்தா இங்கிலிஸில் பெயர்க்கப்பட்டிருக்கிறது. இம் மொழிபெயர்ப்பை இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி ஸ்தாபனம் தனது வருடாந்த வெளியீடொன்றில் பிரசுரித்திருக்கிறது. சுலைமான் சலபி மௌலூதின் இங்கிலிஸ் மொழிபெயர்ப்பை லண்டன், ஜோண் மரே ஸ்தாபனத்தார் வெளியிட்டுள்ளார்கள். இதன் முன்னுரையில் கி. பி. 1589ம் ஆண்டளவில் துறுக்கி மன்னர் மூன்றாம் சுல்தான் முறாத் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பிரபல

புளக் தயாரிப்பாளர்கள்

எல்லா வகையான

புளக்குகளுக்கும்

தலை சிறந்த இடம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**லங்கா புளக் மேக்கர்ஸ்**

27, பீர்சாய்பு தெரு,

கொழும்பு - 12.

தொலைபேசி: 78290 (28280) மாற்றத்துக்குப்பின்

தந்தி: "LUCKBLOCK"

ஆட்சிக் காலத்தில் நடந்த மீலாத் விழா பற்றிய வர்ணனை காணப்படுகிறது. சுப்ஹான மௌலூதின் தமிழாக்கங்கள் பல என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. நம் நாட்டில் குர்ஆன் பள்ளிக்கூடங்கள் இருந்த காலத்தில், மௌலூதுகளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு வந்தது. இளைஞர்களுக்கு மார்க்க அறிவு புகட்டுதற்கு இவை இன்றியமையாதவையாகும். இன்றுள்ள எமது அரசினர் முஸ்லிம் பாடசாலைகளில் இவை மீண்டும் உயர்ந்த இடம் பெறச் செய்தல் நன்று.

இனி அப்பாஸிய மைதானக் கொண்டாட்டங்களுக்கு வருவோம். 1947 ஆம் ஆண்டு பெப்ரவரி 2ஆந் தேதியன்று அங்கு சென்றோம். மைதானம் முழுவதும் பொருட்காட்சியும் களியாட்டு விழாவும் நடை பெறும் இடம் போல ஊஞ்சல், சுழல் அரங்குகள் நிறைந்ததாய்க் காட்சியளித்தது. நடனக்காரர்களும், வித்தைக்காரர்களும் வாயில்கள் தோறும் காணப்பட்டார்கள். இவர்களைக் கடந்து உள்ளே சென்றோம். மைதானத்தின் அமைப்பு முதலில் எமது கவனத்தை ஈர்ந்தது. பாகிஸ்தானில் சமியானு என்று குறிப்பிடப்படும் கூடாரங்கள் இரு மருங்கிலும் வரிசையாகக் காணப்பட்டன. காஹிருவிலும் கராச்சியிலும் பெரு வழக்கிலுள்ள இந்தக் கூடாரங்கள் திடீர், திடீரென்று வரும் மழையின் காரணமாக இலங்கையில் உபயோகிப்பதற்குப் பொருத்தமற்றன. சமீப காலத்தில் கொழும்பில் அலுமீனியத் தகட்டாலான கூடாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுக்குச் செலவு அதிகம்; சமியானுக்கள் போல இவை வண்ணமும் வனப்பு மளிக்கத்தக்கனவுமல்ல. அன்று அப்பாஸிய மைதானம் அரச மாளிகை போலக் கம்பீர தோற்றமளித்தது.

மைதானத்தில் ஒரு மருங்கில் ஒவ்வோர் அமைச்சும் தனித் தனிக் கூடாரம் அமைத்திருந்தது. இக் கூடாரங்களில் இஸ்லாமியக் கட்டடக் கலையின் தனித்துவச் சிறப்பைக் காட்டும் வடிவ அமைப்புக்கள் அழகுக்கு அழகு செய்வனவாக விளங்கின. இவற்றின் மத்தியில் அரசருக்கும் அவரது பரிவாரங்களுக்கு மென விஷேச பந்தலொன்று அமைக்கப்பட்டிருந்தது. அன்றைய வைபவத்தில் பாறூக் மன்னருக்குப் பதிலாக அவரது சாச்சா (சிறப்பா) மார்களில் ஒருவரான மேன்மைதங்கிய இளவரசர் முஹம்மத் அலி அவர்கள் வந்திருந்தார்கள். உத்தியோக பூர்வமான வைபவத்தின் போது இந்த விசேஷ பந்தலில் ஒரு புறத்தில் மிஸ்றின் முஃப்தி, ஷெய்குல் அஸ்ஹார் போன்ற மார்க்கப் பெரியார்களும் மறு புறத்தில் பிரதம மந்திரி, மந்திரிமார் போன்ற ராஜாங்க அதிகாரிகளும் வீற்றிருந்தார்கள். ஒவ்வோர் அமைச்சுக்கும் ஒரு தனிக் கூடாரம். இக் கூடாரங்களில் அந்தந்த அமைச்சின் உயர் உத்தியோகத்தர்கள் பிரசன்னமளித்திருந்தனர். அமைச்சர்கள் மேல் நாட்டார் போல உடையணிந்திருந்தார்கள். தலையில் துறுக்கித் தொப்பி வைத்திருந்தார்கள். கூடாரங்களின் உள்ளே சித்திர வேலைப்பாடமைந்த வண்ணக் கம்பளங்களும் தங்க முலாம் பூசிய நாற்காலிகளும் கொத்து விளக்குகளும் வைக்கப்பட்டிருந்தன. இவைகள் கூடாரங்களைக் குபேர இல்லங்களாய்க் காட்டின. அதிகாரிகளும் அவர்களின் அதிதிகளும் பொலிஸார் கூடாரங்களைக் காவல் செய்ய, உள்ளே பத்திரமாக இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best compliments of:

**MOHIDEEN SONS TEXTILES**

**92, 2nd Cross Street**
**COLOMBO-11**

'phone: 21913

With the best compliments of:

**SHAMUNA LEBBE & COMPANY**
**JEWELLERS**

**COLOMBO**

T' phone: **21447**

தார்கள். வெளியே முட்டி மோதிச் சென்ற சனங்கள் அவர்களை அணுகாதவாறு பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. அவர்களில் சிலர், சூழலை மறந்தவர்களாய், ஒரு வித அலட்சிய பாவத்துடன் தமது அதிதிகளுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்; கோப்பி போன்ற பானங்கள் பருகினார்கள். மற்றுஞ் சிலர்-தஸ்பீஹ்மணி- செபமாலைகளை- உருட்டிக் கொண்டிருந்தார்கள். மேன்மை தங்கிய இளவரசர் முஹம்மத் அலி அவர்கள், முன்னிலையில் அவர்களின் ஆசியுடன் நடைபெற்ற ராணுவ கடற்படை, பொலிஸ் அணிவகுப்புகளுடன் உத்தியோக பூர்வமான கொண்டாட்டங்கள் உச்சக்கட்டத்தை யடைந்தன; பண்டைக்கால கஜரத, துரக பதாதியை மனக்கண்முன் விரியச் செய்தன. இந்த அணி வகுப்புகள் மார்க்க விழாவில் மன்னனது நிழலைப் பரப்பிற்று. கூடாரங்களில் வக்பு அமைச்சின் கூடாரமே ஒப்புயர்வற்றதாய் மிளிர்ந்தது. அஸ்ஹார் பல்கலைக் கழகத்துக்கெனத் தனியாக அமைக்கப்பெற்றிருந்த கூடாரத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வையும் வாக்கையும் விளக்கும் பிரசங்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. பொது மக்கள் இவற்றைக் கேட்டுப் பயன் பெறும் பொருட்டு மைதானமெங்கும் ஒலி பெருக்கிகள் பொருத்தப் பெற்றிருந்தன. ஆனால் சனத்திரளின் மனமெல்லாம் களியாட்ட நிகழ்ச்சிகளிலேயே படிந்திருந்தது. இதை அவதானித்தபோது பிரசங்கங்களை வேறொரு சமயத்தில் ஏற்பாடு செய்திருக்கலாமென்று எனக்குத் தோன்றியது.

இந்தக் கூடாரங்களின் எதிர்ப்புறத்தில் சூபிய்யாத் தரீக்குகளுக்கான கூடாரங்கள் அமைந்திருந்தன. இவற்றுளொன்று மௌலானா ஜலாலுத்தீன் றூமி அவர்களின் வழியைப் பின்பற்றுவோருக்கென ஒதுக்கப் பெற்றிருந்தது. றூமி அவர்கள் துறுக்கியில் வாழ்ந்தவராவர். அவருடைய கப்றுஸ்தான் செல்யூக் துறுக்கியர்களின் தலைநகரான கொன்யாவில் அமைந்திருக்கிறது. கப்றுஸ்தானை மேரை மரியாதையுடன் பேணிவந்த போதிலும் அவரது ருதிபை நடத்துவதற்கு துறுக்கி அரசாங்கம் அனுமதிக்கவில்லை. இப்போது நிலைமை மாறியிருக்கலாம். இக் கூடாரங்கள் தரத்திதளபாட அலங்காரத்திலும் அமைச்சுக்களின் கூடாரங்களை மிஞ்சாத போதிலும் அவற்றில் நடைபெற்ற திக்றுகள் — இறைநாமார்ச்சனைகள் — மக்களைப் பெரிதும் கவர்ந்தன. மக்கள் கூட்டம் பெரும்பாலும் இக் கூடாரங்களையே மொய்த்துக் கொண்டு நின்றன. இத்திக்றுகள் அவர்களைப் பக்தி நிலைப்பட்ட பார்வையாளராக்கின.

என் மனைவி, அங்கிருந்த மிஸ்றுப் பெண்களைப் போலவன்றிச் சேலை அணிந்திருந்தார். சேலை அவர்களின் கவனத்தைக் கவர்ந்தது. சிலர் நான் மிஸ்ர்வாலிபனென்றும் இந்தியப் பெண்மணியை நிக்காஹ் (திருமணம்) செய்திருக்க வேண்டுமென்றும் பேசிக்கொண்டார்களென்றும் எங்களுடன் வந்திருந்த நண்பர் சயீத் அல் - ஸயிலானி விளக்கினார். வேறு சிலர் நடன அல்லது சங்கீத நிகழ்ச்சிக்காக நாங்கள் இந்தியாவிலிருந்து விசேஷமாக அழைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றார்களாம்! இக் கூடாரங்களில் அசல் இஸ்லாமிய முறைப்படி எமக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அஸ்ஸலாமு அலைக்கும் என்ற எமது வாழ்த்துரையைக் கேட்டதும் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோரும் மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் எங்களை வரவேற்று உபசரித்தார்கள். மிஸ்றில் அப்பொழுது குளிர் காலம். ஆகவே, சூடான பானங்கள் பரிமாறப்பட்டன. இவற்றில் அதிகமாகப் புழக்கத்திலிருந்தது சீனி சேர்ந்த கறுவாப் பானமாகும். சில இடங்களில் வெறும் தேநீர் பரிமாறினார்கள். அமைச்சர்களின் கூடாரங்களில் சஃலப் என்னும் பானம் வழங்கினார்கள். பாலில் வாசனைத் திரவியங்களும் விசேஷ சேர்மானங்களும் சேர்த்துக் காய்ச்சித் தயாரிக்கப் பெற்றிருந்த இந்தப் பானத்திலே ஏலம், கசகசா, வாதுமை, பன்னீர் முதலியன சேர்க்கப்பெற்றிருந்ததென்று என மனைவி கண்டுபிடித்தார்.

உத்தியோக பூர்வமான கொண்டாட்டங்களும் சமயாசார சடங்குகளும் உல்லாசக் களியாட்ட நிகழ்ச்சிகளும் பின்னிப் பிணைந்த இந்த வைபவத்தில் மௌலிதுந்நபி சார்பான விசேஷ நிகழ்ச்சியேதும் இடம் பெற்றதாவென்று இச் சந்தர்ப்பத்தில் கேட்கத் தோன்றலாம். ஒலிபெருக்கி வாயிலாக வெளிவந்துகொண்டிருந்த கிறாஅத்தைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. அதுகூட மைதானம் முழுவதிலும் வியாபித்திருந்த பல்வேறு களியாட்ட நிகழ்ச்சிகளினதும் வியாபாரக் கூக்குரல்களினதும் ஆரவாரத்தில் மங்கிக்கொண்டிருந்தது. அறபு தெரிந்த, பக்தி சிரத்தையுள்ள சிலர் மட்டுமே அவ்வப்போது அல்லாஹ், அல்லாஹ் என்று உச்சாடனஞ் செய்து கொண்டார்கள்.

கூடாரங்களிலிருந்து வெளியேறியது போது, பொதுசனங்களின் மகிழ்ச்சிப் பெருக்குக்காக ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த விசேஷ அம்சங்களைவை என்று கவனித்தோம். பந்தல்கள் போல் அமைந்திருந்த விற்பனைச் சாலைகளில் உண்பதற்கும் பருகுவதற்கும் ஏராளமான பண்டங்களும் பானங்களும் இருந்தன. கண்ணைக் கவரும் வகையில் வெள்ளிக் காகிதங்களால் சுற்றப்பட்டு அலங்கரிக்கப்பட்ட இனிப்புப் பொம்மைகளும் நிரை நிரையாக அடுக்கப்பட்டிருந்தன. இவை தவிர, அற்புதமாக ஒளியேற்றப்பெற்ற அரங்கங்களிலே பூச்சும் சோடினையு மணிந்த நாட்டியக் காரரினதும் நாடகக்காரரினதும் வகை வகையான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மேளதாள சமாக்கள் ஒரு புறம்; வீணையாகிய மெஸ்மாரின் நாத வெள்ளம் மறு புறம்; அங்காடி வியாபாரிகளின் ஆரவாரம் பிறிதொரு புறம். எல்லாம் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுவதாக இருந்தன. ஜால வித்தைக்காரன் ஒருவன் முட்டைகளை உடைத்து அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிப்படச் செய்தான்; நூலையும் ஊசியையும் விழுங்கினான்; அதே ஊசியையும் நூலையும் வெளியே எடுத்துக் காண்பித்தான். வரலாற்று வீரர்களினதும் இதிகாச வீரர்களினதும் வீரப் பிரதாபங்களைப் புகழும் தெருப்பாடகர்கள், கரண வித்தைக்காரர், தீக்குளிப்போர், இப்படி எத்தனையோ பேர் தத்தம் முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். கொடிகள், சின்னங்கள் சகிதம் பல்வேறு ஊர்வலங்கள் நடைபெற்றன. கொடிகள் தங்க முலாம் பூசப்பெற்றதும், பொன் எழுத்துக்களால் கலிமாக்கள் பொறிக்கப்பெற்றும் இலங்கின. சனங்களைக் கட்டுப்படுத்துவது பொலிசாருக்குப் பெரும்பாடாயிருந்தது. சவுக்கைச் சுற்றியதும் அல்லோல கல்லோலப்பட்டு சிதறி ஓடிய சனத்திரள் ஒரு சில நிமிடத்துள் சிரித்துக் கொண்டே மீண்டும் முன்போல முண்டியடித்துக் கொண்டு நின்ற காட்சி வேடிக்கையாயிருந்தது.



மறக்க முடியாத ஓர் அனுபவம் இது. கொண்டாட்டமென்றால் மக்களின் உணர்ச்சிப் பிரவாகம் கால தேச வர்த்தமானங்களையெல்லாங் கடந்து விடுகிறது; இலங்கையரானாலும் மிஸ்றியீன்களானாலும் கொண்டாட்ட உற்சவ காலங்ளில் ஒரே விதமாகவே நடந்துகொள்கிறோம். ஆயினும் இவ்விழா முடிந்து இருப்பிடம் திரும்பிய வேளையில் இஸ்லாமிய கலாசாரம் கால, இட எல்லைகளையெல்லாம் கடந்த தொன்று என்ற எண்ணம் மனதில் படிந்திருந்தது. ●

---

**எல்லாச் செய்கைகளும் எண்ணத்தைக் கொண்டே (மதிப்பிடப்படுவனவாக) இருக்கின்றன.**

—நபி மொழி


# இயந்திரங்கள் விற்பனைக்கு சகாய விலையில்

- 10 கு. ச. “பெட்டர்” டீசல் எஞ்சின்கள்
- 6 கு. ச. “லிஸ்டர்” டீசல் எஞ்சின்கள்
- இங்கிலீஸ் ஏ. சி. மோட்டார்கள்
- நெல் உமி அகற்றும் மெசின்கள்
- இங்கிலீஸ் வெல்டிங் ட்ரான்ஸ் போர்மர்கள்
- ஏ. எம். பி. எஸ். 200, 175,

தொடர்பு கொள்க:

**ஹுசேன் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ்,**

553, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு.

தொலைபேசி: **28131**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Your Requirements in:

★ **Building Materials**

★ **Rice Milling Plants**

★ **Factory Requisites**

★ **M. S. Bars, Flats, Joists.**

**Distributors for**
**Harrisons Lister Engineering Ltd.**

**T. P. Abdul Rahuman & Co.,**

350, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO-10.

*'Phone :* 3027 & 3004

*Telegrams;* "DAWN"

**கிழவயதிலும் குதிரையைப் போன்று போர்க் குணங் கொண்ட ஓர் ஆசிரியருடைய மனவோட்டங்களை இக் கதை நேர்த்தியாகச் சித்திரிக்கின்றது.**

அங்கம் இரண்டு

# குதிரை

வ. அ. இராசரத்தினம்

இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர்களின் விடுமுறைக் கழகம் நடந்து கொண்டிருந்தது.

'திட்டவட்டமான குறிக்கோளும் கொள்கையும் அற்று, நினைத்தவர் நினைத்த போதெல்லாம் கல்விக் கொள்கையிற் தலையிட்டுத் தாம் முடைந்த தொப்பிக்குத் தக்கதாகத் தலையையே வெட்டிக் கொள்ளும் முயற்சியில், ஆசிரியர்களை வற்புறுத்துவதற்காக நடைபெறும் நிகழ்சி இது' என்று பல ஆசிரியர்கள் உள்ளூர நினைத்துக் கொண்டாலும், மண்டபம், என்னவோ நிரம்பிவழிந்தது. ஆண்கள் பெண்கள், வயோதிபர்கள், வாலிபர்கள், தலை நரைத்தவர்கள், பட்டாம் பூச்சியின் வாக்கிற் சுழன்று திரியும் வாலைக்குமரிகள், அவர்களில் மொய்க்கும் இளைஞர்கள் ...

எத்தனையோ பேருக்குத் திருகோணமலைப் பட்டினத்தில் என்னென்னவோ அலுவல்கள். விடுமுறைக் கழக வகுப்புக்காக 'கடனே' என்று ஐந்து ரூபாவை அழுது தொலைத்துவிட்டு, அந்தச் சாக்கோடு பட்டினத்திற் பல அலுவல்களையும் கவனிக்க வந்த கிராமத்து ஆசிரியர்கள் பலரும், விடுமுறைக் கழகத்தை ஒரு பொழுது போக்காகக் கருதித் தம்மை மறந்த களிமயக்கிற் சுகித்திருந்த இளைஞர்கள் சிலரும் 'சித்திரப் பாவையின் அத்தக அடங்கி' விரிவுரையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மேடையிலே பேராசிரியர், கீழ் வகுப்புகளிற் கணிதம் பயிற்றும் முறை பற்றிப் போதனை செய்து கொண்டிருக்கிறார். இங்கிலாந்திலும் படித்து இளவயதிலேயே பேராசிரியராகிவிட்டவர். அவர் பக்கத்திலே தமிழ்ப்பாஷை படிப்பிக்கும் முறை பற்றி அடுத்ததாகப் பேச இருந்த பண்டிதர் நல்லதம்பியும் வீற்றிருந்தார். ஆம்; ஓய்வுச் சம்பளம் பெற்றுத் தன் வயதில் முதுமை காரணமாக ஓய்ந்திருந்த நல்லதம்பிப் பண்டிதர், தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, கழுத்தைச் சுற்றிய விசிறி மடிப்புச் சால்வை சங்கராபரணச் சர்ப்பமாக நெளிய, தம் தடித்த மூக்குக் கண்ணாடியினூடாகச் சபையைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே, ஆரோகணித்துக் கொண்டு எதிரி

படைக்குள் புகத் தயாராக நிற்கும் போர்ப் புரவி போன்று கம்பீரமாகக் காட்சியளித்தார்.

நல்லதம்பிப் பண்டிதரைத் தெரியாதவர்கள் அந்த வட்டாரத்தில் இருக்கவே முடியாது. தனித் தமிழைத் துறைபோகக் கற்றவர் என்ற இறுமாப்பை, நிமிர்த்தி நிற்கும் தன் தடமார்ப்பில் பெருமையாக ஏற்றுக்கொண்டு, எந்நேரமும் போர்க் குதிரை போலப் பின்வாங்குத லின்றியே ஊரை — குறிப்பாக ஆசிரிய வட்டாரத்தை — ஒரு கலக்குக் கலக்கினுர் அவர். காற்சட்டை யணிந்த பல்வேறு உத்தியோகத்தர்களும், சிறப்பாக வித்தியா கந்தோரின் அத்தனை மேலதிகாரிகளும், ஏன் அந்த வட்டாரத்தின் முக்காலே மூன்று வீசம் ஆசிரியர்களும், 'வடக்கே'யிருந்து வந்தவர்கள் என்ற எண்ணத்தை முள்ளின் உறுத்தலாக ஏற்றுக்கொண்டு, அந்த உறுத்தலிற் போர்க்கோலங்கொண்டு, ஆசிரிய கூட்டங்களிலெல்லாம் கதாநாயகனக விளங்கிய நல்லதம்பிப் பண்டிதர் 'காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்தாத அபூர்வப் பிறவி' என்று சிலர் சொல்லிக்கொண்டாலும், கூட்டம் குழப்புவராகவே பெயரெடுத்து அந்தப் பகுதியிற் தம்பெயரை நிலை நாட்டியிருந்தார். அந்தப் போர்க் குணந்தான், ஓய்வுச் சம்பளம் பெற்ற பின்னரும் அவரை மேடை யேற்றியிருக்கிறது. இல்லாவிட்டால், விடுமுறைக் கழகத்தை நடத்தும் வித்தியாதரிசி அவர் பாய்ச்சலின் கீழ் விழுந்திருக்க மாட்டாரா?

மேடையில் விற்றிருந்து தன் தடித்த மூக்குக் கண்ணுடியின் வழியாகச் சபையினரைப் பார்க்கையில் நல்லதம்பிப் பண்டிதருக்குப் பெருமையாகவே இருந்தது.

முன்பெல்லாம் இதைப்போன்ற ஆசிரியர் கூட்டங்களிற் பெரும்பாலோர் 'அன்னியராகவே' இருப்பார்கள். என்னைப்போல ஓரிருவர் தான் இந்நாட்டவர்களாயிருப்பர். ஆனுல், இப்போது ... . பிரபையோடு உதயமாகும் அறிவுச் சூரியனுக்கு இச்சபையிலிருக்கும் இத்தனை 'எழுவான்கரை' ஆசிரியர்களும் நாற்றங்காலாக அமைந்துவிட்டார்கள். எல்லாமே என் இடை விடாத போராட்டத்தின் வெற்றி.

யாழ்ப்பாணத்திலிருந்து சிறப்புச் பேச்சாளராக வந்த கணிதப் பேராசிரியர், தன் பேச்சைத் தொடர்ந்து நடத்திக் கொண்டேயிருந்தார் "இளம் பிள்ளைகளைக் கிளிப்பிள்ளைப் பாடமாகப் பதினுறும் வாய்ப்பாடுமட்டும், பதினுறு அலகுகள் வரை மனனம் பண்ணும்படி வற்புறுத்துகிருேம். புதிய கல்வி முறையின்படி இது தேவையற்றது; பிழையான முறை. பெருக்கல் வாய்ப்பாடுகளின் நோக்கமே—ஏன் கல்வியின் நோக்கமே—கற்றதைப் பிரயோகம் பண்ணுவதுதான். வாய்ப்பாட்டைப் பிரயோகித்துப் பெருக்கற் கணக்குகளைச் செய்வதற்குப் பதினுறும் வாய்ப்பாடுவரையும் மனனம் பண்ணத் தேவையில்லை. மேலும், பதினுறு அலகுகள் வரை வாய்ப்பாட்டை மனனம் பண்ணவும் வேண்டாம். பத்தாம் வாய்பாடு மட்டும், பத்து அலகுகள் வரை தெரிந்தாலே போதுமானது. அதுவும் மனனம் பண்ண வேண்டும் என்ற தேவையுமில்லை. 'லொக் கார்தம்' கணித மட்டைகளை வைத்துக் கொண்டு கணக்குகளைச் செய்வது போல, வாய்பாடு மட்டைகளை வைத்துக் கொண்டே கணக்குகளைச் யெய்கையிற் காலகதியில் அவை மனதிற் பதிந்து விடும்."

கூட்டத்திலே இருந்த வயதான 'பழைய' ஆசிரியர்கட்குப் பேராசிரியர் சொன்னது சம்மதமில்லாமலிருப்பதாகவே தோன்றியது. ஆயினும், எதிர்த்து ஒரு வார்த்தையுமே சொல்லவில்லை.

'அவரை அழைத்த குற்றத்திற்கு அவரும் தன் கடமைக்கு எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும். நாம் போனது ஈரிரண்டு நாலு என்று தொடங்குவதுதானே?' என்று எண்ணினுர்களோ, என்னவோ, பேராசிரியரின் 'தொண தொணப்பு' எப்போது முடியும் என எதிர்பார்த்தவர்களாய், மேடையின் பின்புறச் சுவரில் தொங்கிய கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இளைஞர்கட்கோ எதுவும் சம்மதம் என்றே தோன்றிற்று போலும்! மொத்தத்தில் இந்தப் பேச்சு என்ற யமவாதனை விரைவாக முடிவடையட்டும் என்று எண்ணியவர்களாகச் சபையினர் அசமந்திருந்தனர்.

ஆனுல், மேடையில் இருந்த நல்லதம்பிப் பண்டிதருக்கு இருப்புக் கொள்ளவில்லை. இந்தச் சபையிலே எல்லாருமே வாய்மூடி மௌனியாக இருக்கிருர்களே என்று அவருக்கு ஆத்திரமாக இருந்தது.

இன்றைய ஆசிரியர் சமுதாயம் எத்தனை தூரத்திற்கு எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறது? எதற்கும் எல்லாவற்றிற்குமே தலையாட்டி மாடுபோல இருக்கிருர்களே! அதுவும் எல்லாப் பாடசாலைகளையும் அரசாங்கம் சுவீகரித்துக் கொண்டபின், ஆசிரியர்கள் எவருக்குமே சுதந்திரம் இல்லை. இதைப் போன்று விவாதத்திற்கிடமான கருத்தை அந்த நாளையிற் சொல்லியிருந்தால் 'மிஷன்' வாத்திமாராயிருந்த நாங்கள் ஆளைத் தொலைத்திருக்கமாட்டோமா? ஆயினும் இவர்கள் எல்லாராலும் எப்படி வாய் பேசா மௌனியாக இருக்கமுடிகிறது?

இப்படி எண்ணிக்கொண்ட பண்டிதரின் மன ஓட்டத்திலே, அந்த நாளையச் சம்பவம் ஒன்று பளிச்சிட்டது.

அன்றும் இப்படித்தான் ஒரு விடுமுறைக் கழகம் நடந்துகொண்டிருந்தது. காலையில் ஒரு சொற்பொழிவு முடிந்ததும், அடுத்த பத்து நிமிடங்கட்கு ஓய்வு நேரம். ஆனுல், விடுமுறைக் கழகத்தை நடாத்திய வட்டார வித்தியாதரிசி நிகழ்ச்சி நிரலில் அந்தப் பத்து நிமிடத்தை 'இளைப்பாற்றி' என்று அச்சிட்டிருந்தார். அந்த 'இளைப்பாற்றி' என்ற சொல் எச்சமா, முற்ரு என்று விவாதத்தை கிளப்பி வட்டார வித்தியாதரிசியின் தமிழ் ஞானத்தைக் தலைகுனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments from:

**M. A. KIZAR & CO.**

**Exporters of Tea & Ceylon Produce**

P. O. BOX: 816

**COLOMBO-12**

*Phone :* 32082 *Tel:* "TEAEXPORTS"


வைக்க, அவர் தமது உத்தியோக அதிகாரத்தைப் பிரயோகிக்க முனைந்தபோது, நான் குறுக்கிட்டு மேலே விடுமுறைக் கழகத்தையே நடத்த முடியாதபடி குழப்பி வட்டார வித்தியாதரிசி அடுத்த மாதமே மாற்றம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்! எல்லாம், அந்தக் காலத்தில் இந்த நல்லதம்பியின் வல்லமை... ஆனால், இன்று ?

பண்டிதராற் பொறுக்கவே முடியவில்லை!

"நீர் சொல்வதெல்லாம் சுத்த அபத்தம்" என்றார் கணிதப் பேராசிரியரைப் பார்த்து.

அவர் அப்படிச் சொன்னது முன் வரிசையில் இருந்தவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

கூட்டத்திற் சிறிது சலசலப்பு. ஆயினும், சற்று நேரத்தில் அடங்கிவிட்டது!

கணிதப்பேராசிரியரும் தன் பேச்சை முடித்துக் கொண்டு அமர்ந்தார்.

பண்டிதர் நல்லதம்பி அவர்கள் பேச எழுந்தார். தான் பேச எடுத்துக் கொண்ட 'கீழ் வகுப்புகளிற் தமிழ்ப் பாஷை கற்பித்தல்' என்ற பொருளை அவர் ஆயத்தம் செய்து வந்திருப்பினும், கணிதப் பேராசிரியர் தெரிவித்திருந்த கருத்துக்கள் அவர் சிந்தனையைக் குழப்பி அவரின் இயல்பான போர் முனைப்பைத் தூண்டிவிட்டிருந்தன. அந்த முனைப்போடு ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்றவர், தம் விஷயத்தை மறந்து, கணிதப் பேராசிரியருக்கு ஒரு 'சூடு' கொடுக்கவேண்டும் என்ற ஒரே ஆதரத்தோடு, கழுத்தைச் சுற்றிச் சங்கராபரண சர்ப்பமாய்ப் புரளும் தன் விசிறி மடிப்புச் சால்வையைச் சற்று இறக்கித் தம் நிமிர்திய தடமார்பிற் புரள விட்டு, தமது தடித்த மூக்குக் கண்ணாடியைச் சரிப்படுத்தி ஒரு கனைப்புக் கனைத்துச் சபை வணக்கம் தெரிவித்துத் தன் பேச்சைத் தொடங்கினார்.

"எனது கெழுதகை நண்பர் உயர் திரு. சண்முகலிங்கம் பேராசிரியர் அவர்கள், இவண் சிறார்க்கு எண்கணிதம் பயிற்றும் முறை பற்றி முறைகேடாகச் சில செப்பினார். யாமும் ஓர் தமிழாசிரியன் ஆனமையின், நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று நக்கீர நெஞ்சோடு, அவர் கூற்றிலுள்ள பொருந்தாமையை இவண் விளக்கக் கடமைப்பட்டுள்ளோம். அஃதென்னை யெனில், எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்பது ஆன்றோர் வாக்கு. இரண்டுள்ளும் எண்ணை முதலில் நுவலிய தென்னை யெனின், அதன் முதன்மை கருதி யென்பது வெள்ளிடைமலை. ஆயின் நமது எழுவான்கரையில அறிவுச் சூரியன் உதயமாவனதைக் கண்டு காழ்ப்புறும் பேராசிரியர் போன்றோர் எண்ணைக் கற்பிக்கும் முறைபற்றிப் பிழையான எண்ணங்களைக் கொடுத்து நம்முடையதும், நம் எதிர்காலச் சந்ததியினரதும் எண் என்ற கண்ணைக்

கெடுக்கும் நாசவேலையிற் தற்போது ஈடுபட்டிருக்கிறார்கள்! பேராசிரியர் போன்றோருக்கு நமது அருட்டிரு விபுலானந்த அடிகளார் கணிதப் பட்டதாரியாகவும் அதே நேரத்தில் இலக்கிய விற்பன்னராகவும் இருந்தமைகூடப் பெரிய ஆற்றாமையாக இருக்கிறது; அடிகளாரைப் போன்ற பலர் நம்மிடையே தோன்றுவதைத் தடைசெய்யும் முகத்தான்... ...'

பேச்சுத் தொடர்ந்தது.

கூட்டத்திற் சலசலப்பு ஏற்பட்டது, 'இந்தக் கூட்டங் குழப்பிப் பண்டிதருக்கு இன்னமும் குதிரைப் புத்தி போகவில்லையே' என்றார் ஒருவர். இளைஞர்கள் சிரிக்கிறார்கள்!

மேடையிலே பண்டிதர் செந்தமிழிற் பொழிந்து பொழிந்து தள்ளிக் கொண்டேயிருக்கிறார்.

'அரபிக் குதிரையாக இருப்பினும் பிறவிச் சந்தம் போகாதே' என அலுத்துக் கொண்ட வழுக்கைத்தலை ஆசிரியர் ஒருவர், ஒரு வாய் வெற்றிலையாவது போடலாம் என்றெண்ணிக் கொண்டே வெளியேறுகிறார்.

'சதுரங்கத்திலே குதிரை மட்டும் விசித்திரமான காய். ஏனைய காய்களைப் போன்றல்லாது, அது பாய்ந்து வெட்டும். அத்துடன் மூன்று கட்டங்கள் பாய்வதானாலும், எத்திசையிலும் நேராக முன்னேறாமல், ஒரு கட்டமோ, இரண்டு கட்டமோ பாய்ந்து செங்கோணத்தில் திரும்பும். அந்தப் புத்திதான் இந்தப் பண்டிதரும் 'கீழ்வகுப்புகளிற் தமிழ்ப்பாஷைக்கு கற்பித்தல்' என்ற பொருளை விட்டு, என்னைத் தாக்க எழுந்த குதிரை, செங்கோணத்திற் திரும்பி எனது நாட்டவர் எல்லோரையேயும் தாக்கிறதே.......' எனப் பேராசிரியர் சண்முகலிங்கம் நினைத்திருக்கக்கூடும்.

மேடையிலே பண்டிதர் முழங்கிக்கொண்டேயிருக்கிறார்! ●

> சென்ற இதழில் முதலங்கக் கதையான 'காலாள்' பிரசுரமாகியிருந்தது. ஓர் அரசியல்வாதியினுடைய மன அவசங்களை அக்கதையிலே ஆர். பாலகிருஷ்ணன் சித்திரித்திருந்தார். இந்த இதழில் 'குதிரை', 'தேர்' ஆகிய இரண்டாம், மூன்றும் அங்கக் கதைகள் பிரசுரமாகியிருக்கின்றன. 'குதிரை'யில் வ. அ. இராசரத்தினம் அவர்கள் ஓர் ஆசிரியருடைய மன அவசங்களையும், 'தே'ரில் எஸ். பொன்னுத்துரை அவர்கள், ஓர் எழுத்தாளருடைய நனவோட்டங்களையும் சித்திரித்துள்ளார்கள்.
>
> அடுத்த இதழில் நான்காம் அங்கக் கதை:
> யானை
>
> சதுரங்கம்



இந்த ஓரங்க நாடகம், மீலாத் பற்றிய நினைவுகளுடன் இழையோடும், இஸ்லாம் நிறுவிய சீரிய சகோதரத்துவ நெறியை விளக்கும் முகமாக எழுதப் பட்டுள்ளது.

**பாத்திரங்கள்:**
ஹஸரத் உமர் (ரலி)
பிலால்
உமய்யா
அபூபக்கர் (ரலி)
குரல்

# நம்பிக்கை

எம்.ஏ. ரஹ்மான்

**குரல்:** முஹம்மது நபி நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி இறைதூதராக அவதரித்து, சகோதரத்துவ நெறியை வலியுறுத்தி, ஏக இறை வழிபாட்டினை நிலைநாட்டிய சாந்தி மார்க்கமாம் இஸ்லாத்தைப் பரப்பினார்கள். குலங்களாகப் பிளவு பட்டும், விக்கிரக ஆராதனையிற் புலன் செலுத்தியும் வாழ்ந்த அரா பியர் மத்தியிலே இஸ்லாத்திற்கு ஆரம்பகாலத்தில் எதிர்ப்பு இருந்தது. ஆனால், இந்த எதிர்ப்புக் கால ஓட்டத்தில் முற்றாகத் தளர்ந்தது. முஹம்மது நபி நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் இமாமான முதலாவது கலீபா அபூபக்கர் (ரலி) காலத்தில், இஸ்லாம் அராபிய எல்லைகளுக்கு அப்பாலும் விரிவடைந்தது. யூதர்களாலும், கிறிஸ்தவர்களாலும், முஸ்லிம்களாலும் புனித நகர் என்று போற்றப்படும் எருஸலம் நகரம் இரண்டாம் கலீபா உமர் பின் கத்தாப் (ரலி) காலத்தில் முஸ்லிம்களாற் கைப்பற்றப்பட்டது. "நகரத்தின் திறவுகோலை முஸ்லிம்களுடைய கலிபாவிடமே கொடுப்பேன்" என்று கிறிஸ்தவப் பாதிரியார் விண்ணப்பஞ் செய்தார். கலிபா உமர் மதினாவிலிருந்து புறப்பட்டு எருஸலம் வந்திருந்தார். அப்பொழுது பிலாலும் அங்கு வந்து கலிபாவைச் சந்தித்தார். அந்தச் சரித்திரப் பிரசித்திபெற்ற சந்திப்பின்போது.......

**உமர் (ரலி):** பிலாலே! ஹஸ்ரத் அபூபக்கர் கலீபா மரணித்ததும், இரண்டாவது கலீபாவாகத் தேர்ந்தெடுத்து முஸ்லிம் பெருமக்கள் என்னைக் கௌரவித்தார்கள். அப்பொழுது உங்களிடம் வந்து, 'முன்போல் இனிய தொனியில் அதான் சொல்லுங்கள்' என்று கேட்டேன்.

**பிலால்:** கலீபா உமர் அவர்களே! அஃது இன்றும் நன்றாக ஞாபகமிருக்கிறது. 'அந்த வேலை, அல்லாஹ்வின் றசூலுடன் முடிந்துவிட்டது. நான் ஸீரியாவுக்குச் செல்ல அனுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாருங்கள்' என்று கேட்டேன். என் நிலைமையைப் புரிந்து கொண்ட நீங்கள் அனுமதி வழங்கினீர்கள்;

உமர்: நீங்கள் வாழ்ந்துவரும் ஸீரியா நாட்டிற்கு வரும் சந்தர்ப்பமும் கிட்டலாம். இங்கு ஏருஸலத்திற் சந்தித்து அன்பைப் பகிர்ந்து கொள்வது மகிழ்ச்சியினைத் தருகின்றது. எப்படி இருக்கிறது ஸீரியா நாட்டு வாழ்க்கை?

பிலால்: மதினுவிலே தொடர்ந்து நான் தங்கியிருக்க விரும்பாததற்குக் காரணங்கள் அநேகம். தலையாயது, பெருமானுர் இல்லாத அந்த நகரம் சோகமயமாகக் காட்சிதந்ததுதான்... அந்த நகரத்தின் ஒவ்வொரு இடமும் றசூலுடைய ஒவ்வொரு அருஞ் செயலையும் எனக்கு ஞாபகப்படுத்தும்... அதான் ஒலி கேட்கும் பொழுதெல்லாம், ஹபஷீயாகவும் அடிமையாகவும் இருந்த என்னை, தாம் நிறுவிய பள்ளிவாசலின் முதலாவது முஅத்தினுக நியமித்துக் கௌரவித்த றசூலின் அருட் செயலே என் நினைவில் நிறையும். அவர் நபி பிராணுகவும், அதே சமயம் எனக்கு உற்ற தந்தையாகவும் விளங்கினுர்... அந்தப் பிரிவை எப்படி என்னுல் தாங்க முடியும்?

உமர்: கலீபா அபூபக்கர் காலத்தில் மதினுவிலே தங்க எவ்வாறு மனம் ஒப்பினீர்கள்?

பிலா: கலீபா உமர் அவர்களே! அது தாங்கள் அறியாததல்ல...

[பழைய சம்பவம் நினைவில் எழல்]

பிலால்: றஸுலுல்லாஹ்வின் கலீபாவே! மதீனு வாழ்க்கையில் எனக்கு இன்பமில்லை... பெருமானுரவர்களுடன் சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்குத் துக்கம் மேலிடுகிறது... ஸீரியாவுக்குச் செல்ல அனுமதி தாருங்கள்.

அபூபக்கர்: பிலாலே! நீ சொல்வது உண்மை என்பதை நானறிவேன். ஆனுலும், நீ என்னுடன் இருக்கத்தான் வேண்டும்.

பிலா: நான் ஒரு காலத்தில் அடிமையாயிருந்தேன். நீங்கள் அல்லாஹ்வுக்காக என்னை விடுதலை செய்தீர்களல்லவா? அப்படியாஞல், இங்கிருந்து போக எனக்கு அனுமதி கொடுங்கள். ஆஞல், உங்களுக்காக என்னை விடுதலை செய்திருந்தால் என்னைப் போகவிட வேண்டாம். நான் ஸீரியா சென்று, அல்லாஹ்வின் பாதையில் புனிதப்போர் புரிந்து, ஷஹீத் ஆக விரும்புகின்றேன்.

அபூபக்கர்: அல்லாஹ்வின் நாமத்தால் நானும் கேட்டுக் கொள்ளுகின்றேன். எனக்கு வயதாகிவிட்டது. மரணம் சமீபித்து விட்டது. என்னுடன் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். உமது பிரிவை என்னுல் தாங்க முடியாது.

[மீண்டும் நனவு நிலை அடைதல்]

உமர்: பிலாலே! உங்கள் விழிகள் இரண்டும் கண்ணீரை இப்படிக் கொட்டுகின்றனவே. நான் ஏதாவது புண்படுத்தும் படியாகப் பேசிவிட்டேனு?

பிலா: அன்புடைமை பூண்ட கலீபாவே! நாயகத் தோழர்கள் என் மீது சொரிந்த — சொரிந்து கொண்டிருக்கின்ற அன்பின் மேன்மையை நினைக்கும்பொழுது என் கண்ணீர் பெருகுகின்றது... இந்த பிலால் அடிமையாகவே பிறந்தவன். உமய்யா பின் கல்ப் என்பவரின் சொத்தாகக் கணிக்கப்பட்டேன். விக்கிரக வணக்கம் என்னும் அஞ்ஞானத்திலே நம்பிக்கை வைத்திருந்த அவர் மிகவும் கொடுமைக்காரர். அந்தக் காலத்தில் நான் அனுபவித்த இடர்கள்.......

[பிறிதொரு பழைய சம்பவம் நினைவில் எழல்]

உமய்யா: ஹஹ்ஹஹ்ஹா! என் அடிமையாம் பிலால் முஸ்லிமாஞே? என்ன நெஞ்சழுத்தம்! என் உப்பிலே விளைந்த அந்த அடிமை எனக்குப் புத்தி புகட்டுவதுபோல இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டானு? அவனைச் சித்திரவதை செய்து பாடம் புகட்டுவேன்; வழிக்குக் கொண்டுவருவேன்... சிறுவர்களே! உங்களுக்குப் பிரியமான விளையாட்டு ஒன்றை ஏற்பாடு செய்து தருகின்றேன். இந்த பிலால் என் அடிமை! அவனுடைய கழுத்திலே கயிறு போட்டுக் கட்டி, நடுத்தெருவில் சுடு மணலில் இழுத்துச் செல்லுங்கள்... நாள்கணக்காகப் பட்டினி போட்டுப் பசியால் வாட்டியெடுங்கள்!... இவனுடைய நம்பிக்கை அப்பொழுதும் தளரவில்லையாஞல், நிர்வாணமாக்கிப் பகலிற் சுடுமணலிலும், இரவில் பனியிலும் போட்டு வாட்டுங்கள்... இவனை யார் வந்து காப்பாற்றுவார்கள் பார்ப்போம்... இந்த அடிமைக்குக் குறைஷிக் குலத்தவனின் புத்தி வரலாமா?... நமது பரம்பரையான விக்கிரக ஆராதனையை நிந்திக்கத் துணிந்த இவனை அந்த ஏக இறைவன் அல்லாஹ் வந்து காப்பாற்றுகிருனு பார்ப்போம்... ஹஹ்ஹஹ்ஹா!

பிலால்: (ஈனக் குரலில்) அஹத்... அஹத்... அஹத்...

உமய்யா: அஹத்தாம் அஹத்! (தன்னுள் பேசுவதாக) முஹம்மதுவின் போதனைகளிலே அப்படி என்ன காந்த சக்தியை இவர்கள் கண்டார்கள்? தங்கள் உயிர்களைக்கூடப் பொருட்டாக மதிக்கவில்லையே...(கேட்கும் படியாக) எட, பிலால்! கபீப்பைப் போன்று நீயும் வீணுகச் சாகாதே!

பிலால்: கபீப் ஒரு வீரத்தியாகி...'கபீப்! இந்த வேளையில் உமக்குப் பதிலாக முஹம்மத் இருந்து, நீ தப்பிவிட்டால் நல்லதென்று நினைக்கின்றீரல்லவா?' என்று அவரைச் சித்திரவதை செய்த அக்கிரமக்காரர்களுள் ஒருவன் கேட்டான். அப்பொழுது, கபீப் என்ன பதில் சொன்ஞர் தெரியுமா? இவ்வாறுதான் சொன்ஞர்: 'ஏ, கொடுமைக்காரனே! நான் என் உயிரை அர்ப்பணஞ் செய்ய ஆசைப்படுகின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், றஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய காலிலே ஒரு முள் தைக்கவும் நான் பிரியப்படமாட்டேன். இதை ஆண்டவன் அறிவான்' இப்பொழுது நான் அந்த வாசகங்களைத்தான் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கின்றேன்.

[மீண்டும் நனவு நிலை அடைதல்]

உமர்: என்ன? மீண்டும் ஆழ்ந்த யோசனை?

பிலால்: நான் அடிமையாக இருந்த பொழுதுகூட, தவ்ஹீத், சலாத், சௌம், சக்காத், ஹஜ் ஆகிய ஐந்து கடமைகளையும் ஏற்றேன்.

குரல்: (பின்னணியில்) சஹாதத்து அன்லாயிலாக இல்லல்லாஹ் வஅன்ன முஹம்மதுற்றசூலுல்லாஹ் வயிக்காமுஸ்ஸலாத்தி வயீத்தாஊ சக்காத்தி வசௌமு றம்ளான வஹஜ்ஜில் பைத்தி மனிஸ்ததாஹ இலைஹி சபீலா.

பிலால்: ஏக இறைவனிலும், மலக்குகளிலும், வேத நூல்களிலும், இறை தூதர்களிலும், கியாமத்து நாளிலும், நன்மை தீமைகளிலும் யாவும் இறைவனிடமிருந்தே என்பதிலும் விசுவாசித்தேன்.

குரல்: (பின்னணியில்) ஆமன்து பில்லாஹி வமலாயிகத்திஹி வகுத்துபிஹி வருசுலிஹி வல்யௌமில் ஆகிரி வல் கத்ரீ கைரிஹி வஸர்ரிஹி மினல்லாகித்த ஆலா.

பிலால்: நான் அடிமையாக அல்லற்படுவதைக் கண்டு பெருமானார் மனம் மிக நெகிழ்ந்து தமது ஆப்த தோழர் ஹஸரத் அபூபக்கரிடம் என்னை விடுதலையாக்கும் யோசனையைத் தெரிவித்தார். என்னை அடிமையாக வைத்திருந்த உமய்யா மிகவும் கல்நெஞ்சினர். என்னை விடுதலையாககுவதற்குப் பெருந்தொகைப் பொருள் கேட்டார். ஆனால், அபூபக்கரின் அருட்சுரப்பு அடைபடவில்லை. அவருடைய அன்பினால்தான் சுதந்திர புருஷனானேன்.

உமர்: அந்த நன்றியறிதலுக்காக அவர் கலீபாவாக இருக்கும் வரை மதினாவிலே தங்கி, என்னுடைய காலத்தில் ஸீரியாவுக்குப் போனீர்களா?

பிலால்: அப்படியுமல்ல. தீமையிலிருந்து விலக மூன்று வழிகளை றஸூலவர்கள் கற்பித்தார்களல்லவா! உண்மையைப் பிரசாரஞ் செய்யுப் தப்லீக் நெறியையும், தீமையின் இருப்பிடத்தை விட்டு வேறிடம் செல்வது என்னும் ஹிஜ்ரத்தையும் பெருமானார் காலத்திலேயே இயற்ற முடிந்தது. இறைநெறியில் உயிர்விடும் ஜிஹாத் என்னும் புனிதப் போரிலே ஈடுபடும் நோக்கமாக, உங்களிடம் அனுமதிபெற்று ஸீரியாவுக்குப போனேன். கலீபா, உமர் அவர்களே! நீங்கள் என் மீது கொண்டுள்ள அன்பு மாசு மறுவற்றது.



உமர்: உங்களுடைய விழிகளிலே பெருக்கெடுத்தோடும் இந்தக் கண்ணீரைப் பார்க்கும் பொழுது, அன்றொருநாள் புனித மதினமாநகரில் கழிந்த இன்னொருநாள் என் ஞாபகத்திற்கு வருகின்றது பிலால்! நீங்கள் அன்றும் வழக்கம்போல பாங்கு சொன்னீர்கள். தொழுகைக்கு அழைக்கும் உங்கள் இனிய குரல் கேட்டு நான் பள்ளிவாசலுக்கு விரைந்தேன். பள்ளிக்குப் பக்கத்திலேயே குடியிருந்த நபிபெருமானாரைக் காணாது என் மனம் தவித்தது.

பிலால்: நானும் பெருமானாரைக் காணாது திகிலுற்றேன். அவருடைய வீட்டுக் கதவின் பக்கம் நின்று "அஸ்ஸலாத், யா றஸூலல்லாஹ்!" என்றேன். தொழுகையை நடத்த எம்பிரானுக்குச் சரீர சக்தியில்லை என்றும், உங்களையே நடத்தும்படி கூறினார்கள் என்றும் நான் வந்து கூறினேன்.

உமர்: அப்பொழுது நான், "ஹஸ்ரத் அபூபக்கர் இருக்கும் பொழுது நான் இமாமாக இருக்கமுடியாது. நீர் சென்று இங்கு அபூபக்கர் இருக்கிறார் என்று பெருமானாரவர்களுக்குத் தெரியப்படுத்தும்" என்று கூறினேன். எல்லாமே பசுமையாக ஞாபகத்திலிருக்கின்றது.

பிலால்: பசுமையாக மட்டுமா? எந்த ஒரு நிகழ்ச்சியை எடுத்தாலும், நபிபெருமானாரின் ஞாபகமே மேலோங்கி நிற்கின்றது. அங்கு ஸீரியாவுக்குப்போய் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டபின்னரும்... நான் இறப்பதற்கு முன்னர், நான் மதினமாநகர் வந்து உங்களுடைய றௌழாஷரீஃபு வந்து தரிசிப்பேன்... (தனக்குள் கூறிக்கொள்பவரைப் போல) ஹிஜ்ரி பதினொன்றாம் ஆண்டு, ரபீயுல் அவ்வல் மாதம், பன்னிரண்டாம் நாள் — அந்த நாளை இன்று நினைத்துக்கொண்டாலும் என்னுடைய தொண்டை துக்கத்தால் அடைத்துக் கொள்ளுகின்றது.

உமர்: ஆம்; அன்றுதான் எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள். அன்றும், ஹஸ்ரத் பிலாலே! நீங்கள்தான் பாங்கு சொன்னீர்கள். அப்பொழுது குரலிலே படிந்திருந்த சோகம்... நீங்கள் பாங்கு சொல்லக் கேட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன. கிறிஸ்தவர்களும், யூதர்களும் புனித நகராகக் கொண்டாடும் இந்த எருஸலம் நகர் முஸ்லிம நகராகியது. இப்பொழுது ளுஹர் தொழுகை நேரமாகிவிட்டது. இந்த நகரத்தில் முதலாவது பாங்கு சொல்லும் பெருமை பிலாலே, உங்களைச் சாரவேண்டும். உமது இனிய குரலை இப்போது கேட்கலாமா?

பில: நாயகத் தோழரே! கலீபா உமர் அவர்களே! உங்கள் விருப்பம் இதோ!

அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(பின்னணியில் குரல் மெதுவாக ஒலித்தல்): அல்லாஹ் மிகப் பெரியவன்.*

அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்
அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்

*(பின்னணியில் குரல் மெதுவாக ஒலித்தல்): வணக்கத்திற் குரியவர் அல்லாஹ்வைத் தவிர எவருமிலர் என்று சான்று பகர்கின்றேன்.*

அஷ்ஹது அன்ன முஹம்மதற்ற சூலுல்லாஹ்
அஷ்ஹது அன்ன முஹம்மதற்ற சூலுல்லாஹ்

*(பின்னணியில் குரல் மெதுவாக ஒலித்தல்): நிச்சயமாக இறைதூதர் முஹம்மது வெனச் சான்று பகர்கின்றேன்.*

ஹய்ய அலஸ்ஸலாத்
ஹய்ய அலஸ்ஸலாத்

*(பின்னணியில் குரல் மெதுவாக ஒலித்தல்): தொழுகைக்கு வாருங்கள்.*

ஹய்ய அலல் பலாஹ்
ஹய்ய அலல் பலாஹ்

*(பின்னணியில் குரல் மெதுவாக ஒலித்தல்): ஈடேற்றத் திற்கு வாருங்கள்.*

அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர்
லா யிலாஹ இல்லல்லாஹ்

குரல்: *பிலால் பாங்கு சொல்லத் தொடங்கியதும், நாயகத் தோழர்கள் எல்லாரும், தாங்கள் பெருமானாரவர்களுடன் வாழ்ந்த நாட்களை எண்ணிக் கண்ணீர் வடித்தார்கள். அபு உபைதா, முஆத் போன்ற தோழர்கள் மெய்மறந்தார்கள். வெகு நேரம் வரை கலீபா உமர் பேச்சற்ற நிலையிலிருந்தார். பிலால் பாங்கு சொன்ன பின்னர்தான் முஹம்மது நபி பிரான் கூட்டுத் தொழுகை நடத்துவது வழக்கம். கலீபா அபூபக்கர் காலத்திலும் இவ்வழக்கம் நீடித்தது. பிலால் பாங்கு சொல்லக் கூட்டுத்தொழுகை நடத்தும் பாக்கியம், இவ்வாறுதான் கலீபா உமர் அவர்களுக்கு முதன்முதலாக எருஸலம் நகரிலே சித்தித்தது!*



# நபிகள் பெருமானாரும் (ஸல்) நாயகத் திருமேனியும்

ஜே. எம். எம். அப்துல் காதிர்

தமிழகத்திலும் ஈழத்திலும் வாழும் முஸ்லிம் பெருமக்கள் தமிழ் மொழியையே தங்கள் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இஸ்லாமிய மரபும் தமிழ் மரபும் பேணிச் சிறந்த இலக்கியங்களைப் படைத்து இஸ்லாத்துக்கும் தமிழுக்கும் அவர்கள் செய்துள்ள இணையற்ற சேவை மிகவும் சிறப்புடன் மிளிர்கின்றது.

இறைவனின் திருத்தூதராகிய நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் புகழைச் சிந்தையை அள்ளும் செந்தமிழ்ப் பனுவல்களாற் சிறப்பித்துப் பாடியுள்ளனர் முஸ்லிம் புலவர்கள்.

ஆண்பாலாரைக் குறிக்கும் விழுமிய தமிழ்ச் சொற்களையெல்லாம் ஆய்ந்தெடுத்துப் போற்றி நபிகளார் புகழை வாயார மனமாரப் பாடிப் பக்தியிலே திளைத்து மகிழ்ந்தனர் அன்னார்.

நம்பி, குரிசில், கோமான், பிரான், பெருமான், வள்ளல், அண்ணல், ஏந்தல், செம்மல், நாயகம் என்று இன்னோரன்ன சீரிய செல்வப் பெயர்களையெல்லாம் அப்பெருமானுருக்குச் சூட்டி ஆராத இன்பம் அடைந்தனர் அவர்கள்.

ஆயின், அப் பெருமகனாரை இறைவனாக உயர்த்தியோ இறை பண்புகளையுடைய தெய்வ அவதாரமாகக் காட்டியோ அவர்கள் இஸ்லாமிய மரபுக்கு ஊறு விளைக்கவுமில்லை; அங்ஙனமே அன்னாரின் பண்புக்கு ஒவ்வாத சிறு மொழிகளாற் சிறுமைப் படுத்தவுமில்லை. தமிழ் மரபுக் கிசையாத இலக்கண வரம்பை மீறிய வருணனைகளால் தமிழ் மொழியை அழிக்க முயலவுமில்லை.

அண்மைக் காலத்திலே நபிகள் பிரானை (ஸல்) 'நாயகத் திருமேனி' என்னுந் தொடரால் குறிப்பிட்டுக் கூறுதல் அதிகரித்து வருகின்றது. முஸ்லிம் எழுத்தாளர், பேச்சாளர், பத்திரிகையாளர், வானொலிக் கலைஞர் ஆகிய பலரும் இச் சொற்றொடரை நபிகளாருக்கு ஒரு நியதிப்பெயராய் எடுத்து வழங்கிப் பரப்பி வருகின்றனர்.

நாயகத் திருமேனி என்னும் சொல்லின் பொருள் என்ன என்பதைப் பார்ப்போம்.

மேனி என்பது உடம்பு எனப் பொருள் தரும் சொல்லாகும். திரு என்னும் அடைமொழி அழகு, செல்வம் முதலியவற்றைக் குறிக்கும். ஆதலின் திருமேனி என்னுஞ் சொல் அழகிய உடம்பு அல்லது திவ்விய தேகம் என்னும் பொருள் தருவதாகும். 'நாயகத் திருமேனி' என்பது திவ்விய உடம்புகளுள் நாயகமான சிறந்த ஓர் உடம்பு என்னும் பொருள் தரும் ஒரு தொடர் ஆகும்.

உடம்பு அல்லது மேனி என்னும்போது உயர்திணையாளரின் உடம்பை மட்டுமன்றி, அஃறிணைப்பொருள்களின் சடலத்துக்கும் அது பெயராயமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திணையாளரின் உடம்பும் திணைபற்றிக் கூறுமிடத்து அஃறிணை என்றே கொள்ளப்படும். உயிரும் அஃறிணை என்பதே இலக்கண நூல் கூறுவது. உயிரும் மனிதஉடம்பு கூடியபோது தான் உயர்திணையாகியமனிதன் தோன்றுவான். அவை இரண்டும் பிரிந்தால் அஃறிணைதான். அவற்றை வாக்கியங்களில் எழுவாயாய் அமைக்கும் போது அவற்றுக்கு அஃறிணைப் பயனிலையே வழங்கப்படும்.

நபிகள் பெருமானாரின் திவ்வியதேகத்தைப் பற்றிக் கூறும் போது அதனைத் 'திருமேனி' என்றுகுறிப்பிடுவதில்தவறில்லை. அவ்வாறு கூறுவதே சிறப்பாகும். முஸ்லிம் புலவர் பலரும் இச்சொல்லை எடுத்தாண்டுள்ளனர்:

''வன்காபிர் விழிக்கணங்கள்
திருமேனி தீண்டாது
மறைத்தல் போலும்''
—சீரு: மணம்புரி படலம் 35.

''நபிதம், மணியொளிர் திரு
மேனியினிற் கஸ்தூரி
வாசங்கொள் நாசியே
நாசி''—இராஜநாயகம்: சுகுபத்துல்லாவிற் குறுபான் கொடுத்தபடலம் 24.

''மணங்கொள் திருமேனி
மூகம்மதனார் மரபுக்
கோத்திரம்உரைத்தோம்
இப்பால்'' —கோத்திர
மாலை 51.

என்னும் எடுத்துக் காட்டுக்களில் நபிகளார் தம் திவ்விய தேகம், திருமேனி என்னுஞ் சொல்லாற் சுட்டப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கொரு திருநாமமாய் எடுத்தாளப்படவில்லை.

பெண் பாலாரின் அழகிய உடலும் திருமேனி என்றே கூறப்படும்.



''போது மணம் வீசும் திருமேனியின் பூவை ''பற்றத்'' தென்பவரை'' —கோத்திரமாலை 97. என்னும் மேற்கோளில் பெண்பாலாருக்கும் இச் சொல் வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

முஸ்லிம் புலவர்களேயன்றிப் பிறமதப் பெரும் புலவர்களும் இச் சொல்லை இப்பொருளில் ஆளுவதைக் காணலாம்.

''செழியனும் பிள்ளையார் தம் திருமேனி காணப் பெற்று, விழியுற நோக்கலாலே வெம்மை நோய் சிறிது நீங்கி'' — திருஞான சம்பந்தர் புராணம்753. இம் மேற்கோளில் ஆளுடைய பிள்ளையாரின் திவ்விய தேகம் 'திருமேனி' எனச் சிறப்பிக்கப் பட்டுள்ளது. மேலும் சேக்கிழார் அமணரைக் கூறும்போது 'மாசுமேனி நீசர்' — ஷை 773 என்று இகழ்வர்.

''மாந்தளிர் மேனி இலக்குமி மணாளன்'' என்னுந் தொடரில், மேனி, பெண்பாலார் உடலைக் குறிக்கும். — குசேலோ பாக்கியானப்: தந்நகர்ப் புறமடைந்த அத்தியாயம் 58.

இறைவன் பலவித உருவங்களுந் தாங்கி வரும் தன்மையை உடையவன் என்பது முஸ்லிம் அல்லாத பிற மதத்தார் கொள்ளும் நம்பிக்கையாகும். அவன் பல அவதாரங்கள் எடுப்பவன்.



பலவகை உடல்களையும் தாங்குபவன் என்பர் அன்னார். இறைவன் குருத்திருமேனி தாங்கிக் குருந்த மரத்தடியில் திருவாதவூரரை ஆட்கொண்டார்; 'பன்றித் திருமேனி' தாங்கிப் பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டினார் என்று பல திருவிளையாடற் கதைகளை நாம் கேள்வியுறுகின்றோம்.

'நாயகத்திருமேனி' என்று முஸ்லிம்கள் கூறுவதும் அவர்களின் அல்லாஹ் என்னும் இறைவன் உருக்கொண்டு தோன்றிய திருஉருவங்களில் ஒன்றோ என்று பிறரெல்லாம் ஐயங் கொள்ளுதற்குக் காரணமாய் அமைந்து மயக்கத்தை விளைவிக்கின்றது, இத்தொடர்.

சைவ மக்கள் இறைவனுக்கு 'உருவத் திருமேனி', 'அருவத் திருமேனி', 'அருவுருவத் திருமேனி' முதலாய உருவ பேதங்கள் உள என்பர். அவற்றிற்கேற்பப் பலவகை உருவப் படிமங்களை உண்டாக்கி அவற்றினை வழிபடுவர் அச்சிலைகளும் 'திருமேனி' என்றே வழங்கப்படும். செம்பினால் வார்க்கப்பட்ட செப்புத் திருமேனிகள் முதல் கருங்கற் சிலையுருவத் திருமேனிகளையும் நாம் கண் கூடாகக் கண்டு வருகின்றோம் திருமேனி என்னுஞ் சொல்லைத் தெய்வப் படிமமாகிய விக்கிரகத்துக்கு இட்டு வழங்குதல் இன்றளவும் மரபில் இருந்து வருகின்றது. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்குச் சென்றிருந்த சென்னை முதன் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் மலேஷியப் பிரதம அமைச்சர் துங்கு அப்துல் றகுமான் அவர்களுக்குக் கூத்தப் பிரானின் 'செப்புத் திருமேனியை'ப் பரிசாய் அளித்த செய்தி, பத்திரிகைகளிலே படங்களுடன் வெளிவந்தமை அண்மைக்கால நிகழ்ச்சியாகும்.

இலக்கிய வழக்கிலும் 'திருமேனி' என்னுஞ் சொல் விக்கிரகம் அல்லது லிங்கம் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

'திருத்தொண்டர் தொகை' பாடிய சுந்தரமூர்த்தி நாயனார்,

''மெய்ம்மையே திருமேனி
வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதை
தாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப்
பெருமானுக் கடியேன்''
(செய்யுள்3)

என்று கனிந்துருகிப் பாடுகின்றார். இச் சரிதையை விரித்துரைக்கப் போந்த சேக்கிழார்,

''அங்கண் முன்னை அர்ச்
சனையின் அளவின்
தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்
ணிமணல் புளினக் குறை
யில் ஆத்தியின் கீழ்ச்
செங் கண் விடையார் திரு
மேனி மணலால் ஆக்கிச்
சிவாலயமும்
துங்க நீடு கோபுரமும் சுற்று
லயமும் வகுத்தமைத்தார்.
சண்டேசுர நாயனார் புராணம். 32

என்றும் செய்யுளில் திருமேனி என்னுஞ் சொல்லைச் சிவலிங்கம் என்னும் பொருளில் எடுத்தாண்டுள்ளார்.

எனவே திருமேனி என்னுஞ் சொல், உடலையும், இறைவன் தாங்கி வரும் உடலங்களையும், விக்கிரகத்தையும் குறித்து நிற்கும் என்பதனை நாம் காணகின்றோம். இவற்றுள் எப்பொருளைக் குறித்த போதினும் அஃது எழுவாயாய் வரும் போது அஃறிணை முடிவையே ஏற்று வரும் என்பதனையும் கண்டோம்.

உயர்திணையுள் ளெல்லாம் அதி உத்தமராய் விளங்கும் நபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பிரானுக்க இவ்வஃறிணைப் பெயர் நியதிப் பெயராய் வழங்கப்படுதல் எவ்வாற்றானும் பொருந்துவதாகாது.

இறைவன் உருவமெடுத்திருக்கும் திருமேனிகளுள் இதுவும் ஒன்றே என்று ஐயத்தைத்தூண்டுவதனால்இஸ்லாத்தைப்பற்றிப் பிறர் இழிவாகவும் பிழையாகவும் எண்ணுதற்கு இச்சொல் இடந்தருகின்றது. மேலும், விக்கிரக வழிபாட்டையே இவ்வையகத்திலிருந்து வேரோடு கல்லியெறிய வந்த வள்ளலாருக்கு 'நாயக விக்கிரகம்' என்னும் பெயர் பொருத்தமானதுதானா? "நாயகத்திருமேனி...... ..............நவின்றருளியுள்ளார்கள்'' என்னும் வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இங்கு, திருமேனி உயர்திணைப்பயனிலையேறத் தமிழ் இலக்கண வரம்பையே மீறித் தமிழுக்கு இழுக்கைத் தருகின்றது. பெருமானாருக்கு 'நாயக லிங்கம்' என்னும் பெயரைச் சூட்டி அவர்களை நிந்திக்கின்றது. இந்த விந்தையைக் கண்டு அழுவதா? சிரிப்பதா!

நாயகத் திருமேனி என்னும் சொல்லுக்குப் பின்னால் 'ஸல்லல்லாகு அலைகிவஸல்லம்' என்னும் பரிசுத்த சாந்தி வாழ்த்தினையும் எழுதுகின்றோமே! யாருக்கு இவ்வாழ்த்தினைக் கூறுகின்றோம் என்று எண்ணிப் பார்க்கின்றோமா?

'நாயக லிங்கம்' அல்லது 'நாயக விக்கிரகம்' என்னும் பொருளைத்தரும் இந்த நாயகத் திருமேனி நமது அரிய ஈமானின் நம்பிக்கையை அழித்து இணை கற்பிக்கும் பாவத்துக்கு நம்மையெல்லாம் இட்டுச் செல்வதாய் அமைந்துள்ளது. (நஊது பில்லாஹி மின்ஹா)

இச்சொல்லை அப்பெருமானாருக்குச் சூட்டுதலைப்போன்ற பிறிதொரு அவமானம் இல்லை. எனவே எமது இஸ்லாமிய எழுத்தாளரும் பேச்சாளரும் இதனை விடுத்து நபிகளாரின் திருநாமத்தைப் பரிசுத்தப் படுத்த முன்வருவார்களாக.

''மாதயா நிதி ஆகியே புவி
வாழ்கவே வரு செம்மலை
வேத நூல் புகழ் ஓதுகாரணா
வீறுலாவிய அகுமதை
சீத மாமுகில் நீழ லேபுரி
தேகவாச முகம்மதை
ஓத ஓத மெய்ஞ் ஞான
போத(ம்)உள் ஊறும்
ஊறு(ம்) இதுண்மையே''

(வஸ்ஸலாம்)

---

கற்கை நன்றே

கல்வி தனையொருவன் கற்றல் கடனாகும்
மெல்லிய லார்க்கு மதுவிதியே - கல்விதனைச்
சீன வளநாடு சென்றேனுங் கண்டடைய
வேணும் மதிக்கோர் விளக்கு.

நபிமொழி நாற்பதை அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் நாற்பது வெண்பாக்களாக்யாத்துள்ளார். அது அரசு வெளியீட்டின் பதினைந்தாவது நூலாக வெளிவந்துள்ளது. அவற்றுள் மேற்காணும் வெண்பாவும் ஒன்று.

ஆ. மு. ஷரிபுத்தீன்

---



## பாணந்துறை - மொயீன் ஸமீன்



"என்ன ஸியானா கனவு காண்கிறாயா?'' என்று வாஹிது மரைக்கார் அவளது கவின் வதனத்தை இலேசாக வருடுகிறார். அவர்கள் இருவரும் கதிர்காமத் தீரத்திலுள்ள, பயணிகள் விடுதியிலே தங்கியிருக்கின்றனர்.

அறுபது வயது நிரம்பிய மரைக்கார் இருபது வயது வாலிபனாகத் தன்னைக் கற்பித்துக்கொண்டு காதலின்பத் தினவினைப் பகிரங்கப்படுத்தும் ஒரு சாயல். அவர்களுடைய போக்கினைப் பார்க்கும் சின்னஞ் சிறிசுகள் கூச்சத்தாற் குறுகிவிடுவார்கள் போலத் தோன்றியது.

இஸ்லாம் ஆண்களுக்கு அணியக் கூடாதென்று தடைவிதித்திருக்கும் பொன்னும் பட்டும் அவரது சதை விழுந்த ஆருதியை அணிசெய்தன. அவர் பாணந்துறையில் பிரபல்யமான வர்த்தகர்; பெரிய பணக்காரர். வட்டி எடுப்பது முதல், கறுப்புச் சந்தை வியாபாரம் வரை அவர் பணம் புரண்டது.

தாரத்துக்குப்பின் தாரமாக இரண்டு மனைவிகளைப் பெற்றும், அவருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. ஆனாலும், மனஞ்சோர்ந்துவிடாமல் மூன்றாந்தாரமாகப் பதினாறுவயது நிரம்பாத ஸியானாவை மனைவியாக்கியுள்ளார். பரம ஏழையான ஸியானா பலவந்தமாக அவருக்கு இரையாக்கப்பட்டாள். ஆரம்பத்தில் அவளுக்கு அவர்மேல் வெறுப்புத் தட்டியிருந்தாலும், செல்வச் சொகுசினால் நிலைமாறிவிட்டாள். பொன்னகையணிவதிலும், வண்ண வண்ண ஆடைகளை உடுப்பதிலும், சினிமா, கடற்கரை, வாடிவீட்டு உல்லாசம் போன்றவற்றிற் பொழுது போக்குவதிலும் தன்னை மறந்தாள். ஆனால், அண்டை வீட்டார் தன்னை இழிவாக நோக்குவதையும், சிறுவர்கள் "மலடு மலடு'' என்று தூற்றுவதையும் அவளால் சகிக்கமுடியவில்லை.

அவர்களுக்குத் திருமணம் முடிந்து மூன்று வருடங்கள் கடந்தும், இன்னும் குழந்தைப் பேறில்லாததால் கதிர்காமத்திற்குப் புனித யாத்திரை வந்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை நேரம்; சூரியன் மேல்வானிற் சந்தி வேளை சமைக்கின்றான். ஆலய மணி 'கணீர் கணீர்' என்று ஒலித்தது. தென்றல் கோயில்களிலிருந்தும் பள்ளிவாசலிலிருந்தும் வாசனைகளை அள்ளி வீசியது. கற்பாறைகளில் இடறிவிழுந்து ஓடும் மாணிக்க கங்கையில் யாத்திரீகர்கள் அழுக்குக் கழுவலில் மூழ்கிக் கிடந்தனர். பாவங்கள், நோய்கள், தோஷங்கள், சாபங்கள், சூனியங்கள், கண்ணூறுகள், பழிகள் யாவும் அந்தப் புனித நீரில் மூழ்குவதால் தீர்ந்து விடுகின்றதென்றும், கேட்கும் வரங்கள், ஞானம், அறிவு, செல்வச்சிறப்பு, இளமை, அருள் முதலியன கிடைக்கிறதென்றும், இச்சாபலிதங்களினாற் பாவ விமோசனம் கிடைக்குமென்றும் மரைக்காருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை.

ஸியாறா தன் மேனியில் மார்பிலிருந்து முழங்கால் வரை மெல்லிய துணியொன்றை அணிந்திருந்தாள். அவள் நீருள் மிதந்து, கையைக் காலை வீசி எறிந்து, மூழ்கி எழும்போது உடலுடன் உடை ஒட்டிக்கொள்ளும். மாலை இளம் ஒளியில் அவளின் மாந்தளிர் மேனி பளபளக்கும் கோலம், ஏதோ நிர்வாண அழகி தோன்றும் ஆங்கிலப்படமொன்றின் காட்சியைப் போல... அவளது உருண்டு திரண்ட அவயவங்கள் ஈரத்தினால் விம்மிப் புடைத்திருந்தது... அவளின் அங்க அழகு முழுரூபத்தில் அங்கிருந்தவர்களுக்குத் தரிசனந் தருவதான மயல்.

அவர்கள் மூழ்கிக் கொண்டிருந்த அதே இடத்தில் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க கட்டழகு இளைஞன் ஒருவனும் மூழ்கிக் கொண்டிருந்தான. அவனது தோற்றம் பக்திப் பரவசத்தைக் காட்டவில்லை; உல்லாச வாழ்வையே பறைசாற்றுவதாயிருந்தது. ஸியாறாவின் மேல் வைத்த கண் வாங்கினானல்லன். அவளது இளமையை அனுபவிக்கத் தவம் செய்வது போல் தன்னை மறந்து அலமந்து நின்றான். அவனது எழில் உருவத்தைக் கண்ட ஸியாறாவிற்கும் மேனியெல்லாம் புல்லரித்தது. அவனை ஒரு முறை ஆறத்தழுவும் பாக்கியம் கிட்டாதோ? என்று சொல்வதுபோல் அவளது பார்வையில் ஒருவித ஏக்கம் தொக்கி நின்றது. அவளது நெஞ்சைப் பிழந்து கொண்டு அவளது உணர்ச்சி பெருமூச்சாகக் கிளர்ந்து வெளிவந்தது.

புனித யாத்திரைகள், நேர்த்திக்கடன்கள், 'இஸ்மு் துவாகள்' மந்திரஜாலங்கள், அறபு வித்தைகள், சூனிய சாகசங்கள், மலையாளத் தாயத்துக்கள், மேல் நாட்டுக் கீழ் நாட்டு வைத்திய முறைகள், சிங்களப் பேயாட்டங்கள், தான தருமங்கள் சாஸ்த்திரத் 'தோயிலை'த் தோஷங்கள், 'கட்டாடி'ப் பூசாரிக் கைவண்ணங்கள், இத்தியாதி, இத்தியாதி! எத்தனையோ கைங்கரியங்கள் செய்தும் பிள்ளைப் பாக்கியம் கிட்டவில்லை! அவளுக்கு நிரந்தர ஏமாற்றம். நாடி தளர்ந்து வாடிவதங்கி மலடுதட்டிவிட, குழந்தைப் பேறு கிட்டாது என்ற எண்ணக் கீறல், அவள் மனத்தை அரித்தது. அவளது ஒரே ஆசை? குழந்தைப் பாக்கியம்! வழி...

வழி பிறந்தது! அவளது மனதில் ஒரு வெறியெண்ணம் கிளர்ந்தது. அண்டை வீட்டு ஆஜர் ராத்தாவும் எதிர் வீட்டு உம்முலைறா ராத்தாவும் அன்றொருநாள் சண்டைபிடித்த



பொழுது பரிமாறிக்கொண்ட வார்த்தைகள் அவளது அகத்தைப் பிழிந்தது.

''அடியே உம்முலைறா 'ஹரபாஹி'ப்போக நீ ஜெயிலானி மலைக்குகைல... ஆசீம்லெவ்வையோட...... அப்படியில்லாட்டி ஒனக்கு புள்ள கெடச்சியோடி! ஆடி மூதேவி...நீ ஊருக்கு 'இபாதத்து'க்காரி மாதிரி இப்பதலையில மொக்கட்டோட திரிஞ்சதுக்கு நீ செஞ்ச 'பஸா' எங்களுக்குத் தெரியாமலோத முட்டமஜினுட மூமினும் பழஞ்சோத்தூட்டு பல்கிஸ்ஸிம் கண் மாணிக்கத்தால கண்டலியோடி...இப்பயானாலும் நான் எம்பிச்சியன்...''

'ஆமாப்! உம்முலைறாத்தா அப்பட்டமாக நடந்துகொண்டதாலதான் அவட 'ஸீபத்து!' வெளிச்சுது...நான்... இங்கு நான் செய்வத யார் பார்த்துக்கொண்டிருக்கப் போறாங்க... அதற்கு ஆள்?... அந்தப் பொடியன்...' மூழ்கிக் கொண்டிருந்த அவளது மனதில் இவ்வித வெறியெண்ணம் பீறிட்டுப் பாய்ந்து காமத்தின் விளிம்பைத் தொட்டது.

தனது நோக்கத்துக்கு அந்த வாலிபனை வலிந்து இழுக்க முற்பட்டாள். தனது விழிகளால் அவனது மனதைக் கிண்டிக்கிளறினாள்; உறுப்புக்களை நளினமாக அசைத்துக் காட்டி அவனது பருவப் பசிக்குத் தீனிபோட்டாள்.

நீண்ட நேரக் குளிப்பு முதியவருக்கு ஒத்துக் கொள்ளவில்லையோ என்னவோ, அவர் கரையேறிவிட்டார். ஒளிமங்கிய அவரின் கண்களுக்கு அந்த நுட்பமான வாலிபலீலைகள் புலனாகவில்லை. அந்த இளைஞன் அவளருகில் நெருக்கமாக நிற்பதை உணர்ந்து கொண்டார். அவர் அவளை எரிவுடன் பார்த்தார். பின் அவளைச் செல்லமாகவும் கொஞ்சம் கண்டிப்புடனும், ''இது நேரமாகுது ஸியாரத்தடிக்குப்போகவேணும்; 'கத்தம்' 'பாத்திஹா' 'நேர்த்திக்கடன்' என்று எத்தனையோ இருச்சிய'' என்று அழைத்தார். செய்வதின்னதென்று அறியாது அவரின் வற்புறுத்தலின் பேரில் வெறுப்புடன் அவள் கரையேறினாள். ஆனால், அவளது விழிகள் அந்த இளைஞனையே மாறி மாறி வட்டமிட்டன.

ஸியாரத்தடிக்கு வந்த மரைக்காருக்குக் குழந்தை கிடைத்தாற்போன்ற மனப்பூரிப்பு; பச்சை நிற 'மப்ளா' ஒன்றை தலையில் வரிந்து கட்டிக் கொள்கிறார் அங்கிருந்த திருநீறில் சிறிது எடுத்துப் பயபக்தியுடன் நெற்றியில் தேய்த்துக்கொள்கிறார். பின் மனைவியின் பிறைநுதலிலும் சற்றுத்தடவி விட்டு எஞ்சியிருந்ததை அவளின் வயிற்றிலும் பூசிவிடுகிறார். இருகரமேந்தி இறைவனைத் துதித்த வண்ணம் எண்ணிப் பத்துத் தோப்புக்கரணம் இடுகிறார். பரமதிருப்தியுடன் மனைவியை நோக்கி அவளுக்கும் செய்யப் பணிக்கிறார். அவரின் வற்புத்தலின் பேரில் சாடையாக தலையை அசைத்துவிட்டு அக்கம் பக்கத்தை நிமிர்ந்து நோக்குகிறாள். அப்பொழுது அந்த இளைஞன் வேப்பமரத்திற் சாய்ந்தவாறு அவளைப் பார்த்து இலேசாக முறுவலிக்கிறான். நாணத்தால் தலைகுனிந்த அவளின் பவள இதழ்களில் இளநகை நெளிந்தது.

பிள்ளை வரம் பெற அத்தாட்சியாக ஸியாரத்தருகே பிள்ளை ரூபத்திலான தகரத்தாயத்துகள் விற்பனையாகின நோய்வாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்கள், நாய்-பூனை-பேய்-பிசாசுகளுக்குப் பயந்தவர்கள், அந்தப் பாணியிலான தாயத்துக்களை சாம்பிராணிப் புகை பிடித்து அணிந்து கொண்டனர். அதிலிருந்து விமோசனம் பெறலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. மரைக்காரும் இண்டு ரூபாவைக் கொடுத்து பக்கிரி பாவாவிடம் பிள்ளையொன்றைக் கேட்டார். அதை மஞ்சள் நூலில் இழைத்து; ஏதேதோ ஓதி சாம்பிராணிப் புகைபிடித்து ஸியானுவின் கழுத்தில் கட்டமுனைந்தார். மரைக்கார் அவரைத் தடுத்து அதை வாங்கி இருகரமேந்தி திரிகரண சுத்தியுடன், ''யாரப்பே! யா அவ்லியாவே!! கேட்கு முன் வரங்கொடுக்கும் கராமத்துக்கடலே! ஓங்கட பரக்கத்தால அடுத்த வருஷக் கந்தூரிக்கு புள்ள கிடிக்கிவர அருள் செய்யவேண்டும். நாயனே, எங்கட நாட்டம் 'கபூலானு'க்க வருஷா வருஷம் நூறு ஆடுகள் தவறாமல் குருபான் குடுப்பேன்'' என்று கொஞ்சம் உரக்கக் கூறிக் கொண்டே அதை ஸியானுவின் கழுத்தில் பக்திப்பரவசத்துடன் கட்டுகிறார். பின்னர் பத்து ரூபாவுக்கு முடிச்சிலிடப்பட்டிருந்த திருக்குர் ஆன் தமாம் ஒன்றை அவிழ்த்துவிட்டு ஒரு ரூபாவுக்கு 'யாஸிமும்' ஓதிவிக்கிறார். மரைக்காருக்குப் பரமதிருப்தி. வரம் ஈடேறினாற் போன்ற பிரமை. பூரிப்புடன் தன் இள மனைவிக்கு அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை ஒவ்வொன்றாகக் காண்பிக்கிறார். முட்டிமோதும் சன நெருரிசலில் தன் மனைவியைக் கட்டிப்பிடித்து இழுத்து முன்னேறுகிறார். 'ரிபாய்ராத்தீப்' நடைபெறுகின்றது. அங்கு நடக்கும் குத்து வெட்டு நிகழ்ச்சியைக் கண்ட அவர்களுக்கு மயிர்கூச்செறிகிறது. முஸ்லிம் கன்னிப்பெண்கள் சனக் கூட்டத்தில் சர்வ சாதாரணமாக நடமாடுவதைக் கண்ட அவளுக்கு ஒரு விதத் தெம்பு ஏற்பட்டது. உதட்டில் சாயம் பூசி, தொடைதெரிய, இடைதெரிய உடை அணிந்து, கட்டையாகக் கூந்தல் வெட்டி, தனந் தூக்கி அலங்காரங்களுடன் ஆண்களுடன் முட்டி மோதுவதைக் கண்டு பரமானந்தமடைகின்றாள். அங்கிருந்து தமிழ் சிங்களப் பகுதிக்குள் நுழைகிறார்கள். அங்கு நடக்கும் பூசைகள், பன என்ற பௌத்த மறைவிளக்கம், காவடியாட்டம் முதலியவற்றைப் பார்த்து ரசித்துக்கொண்டு இருப்பிடத்தை நோக்கி நடக்கின்றனர்.

அறைக்குள் அவர்கள் அடியெடுத்து வைத்தபோது, அவர்களைப் பின் தொடர்ந்து கொண்டிருந்த வாலிபனும் அண்டையறையுட் புகுந்தான். தண்ணீர்க் குளிப்பும், அளவு கடந்த அலைச்சலும், குளிர்காற்றும் மரைக்காரின் தளர்ந்த உடம்புக்கு ஒத்துவரவில்லை! அவருக்கு காய்ச்சற்குணம் ஏற்பட்டுவிட்டது. ''ஸியானு மேலெல்லாம் நடுங்குது. வாயெல்லாம் காய்ந்து கசக்குது... நேர்த்திக்கடன் ஏதாக்கும் சரிவரச் செய்யத் தவறிவிட்டோமோ?'' என்று அவர் ஐயத்துடன் பிதற்றுகிறார்.

கொண்டு வந்த கை மருந்துகளையெல்லாம் மரைக்காருக்குக் கொடுத்தும் உடம்பு தேறவில்லை. வரவர நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. உதவிக்கு ஒருவருமே இல்லை. அடுத்த அறையிலிருந்த வாலிபனைக் கையுதவிக்கு அழைப்பதா? விடுவதா? என்று அவளது மனதுக்குள் போராட்டம் ஏற்பட்டது. ஏற்கனவே சந்தேகப்பட்ட அவர் அவனின் உதவியை விரும்பமாட்டார் என்று நினைத்து அந்த முடிவைக் கைவிட்டாள்.



அவளுக்கு ஓரே அலுப்பாக இருந்தது; கட்டிலில் சாய்ந்தாள்; அந்த இளைஞனின் எழில் உருவம் அவளது மனதுக்குள் மாறி மாறித் தென்பட்டது. உறக்கமின்றிப் பெருமூச் செறிந்தாள். அதே நேரத்தில் அடுத்த அறையிலிருந்து எழுந்த தேனினும் இனிய கவிதை அடியொன்று அவளது காதுக்குட் பாய்ந்து, காம உணர்வைத் தூண்டியது.

''தூண்டிற் புழுவினைப் போல்—வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக—எனது
நெஞ்சம் துடித்ததடி''

பாரதியாரின் எளிய தமிழ்க் கவிதையை இனிய ராகத்தில் அந்த இளைஞன் பாடினான். அவனது மனப் போராட்டத்தை அவள் நன்கு புரிந்து கொண்டாள். சதைப் பசியால் அவளது உடம்பு வீறிட்டது! உணர்வு கொப்பளித்தது......

முணங்கிக் கொண்டிருந்தவர் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். மிருகத்தனமான உணர்வு அவளை ஆட்கொண்டது; 'போ! அவன் உனக்காகத்தான் காத்திருக்கிறான். அவசரமாகப் போ! நீண்ட நாளைய மனோ இச்சையை நிறை வேற்று! சந்தர்ப்பத்தை நழுவவிடாதே... தயங்காதே போ!' என்று இனந்தெரியாத ஒரு சக்தி அவளை உந்தியது.

விளக்கு அணைந்திருந்தது; இருட்டும் தனிமையும் அவளுக்கு வசதியாக இருந்தது. கதவை அரவம் காட்டாமல் மெல்லத் திறந்து, அங்குமிங்குமாக நோக்கினாள். யாருமே இல்லை. உடம்பெல்லாம் பயத்தால் சிலிர்த்தது. அவளது உடலில் இனம் தெரியாத மெல்லிய நடுக்கம் இழையோடியது. தயங்கித் தயங்கி மெதுவாக அடுத்த அறையை நோக்கி அடிவைத்தாள். அதே வேளை சுபஹுத் தொழுகைக்காக பள்ளிவாசலிருந்து வாங்கொலி பரவியது, ''அல்லாஹு அக்கபர்.' அந்த வார்த்தைகள் அவளது இதயத்தை ஊடுருவியது. ''அல்லா எல்லாவற்றையும் அவதானிக்கிறான்'' என்று ஒரு பிரமை மனதை உறுத்தியது. மனச்சாட்சி முள்ளெனக் குத்தி வேதனைப்படுத்தியது. விடுக்கென்று திரும்பி தான் செய்ய விழைந்த மாபெரும் துரோகத்துக்கு இறைவனிடம் பாவமன்னிப்பு இறைஞ்சினாள்! கண்ணீரால் அவளது மாசு கரைந்து கொண்டிருக்கின்றது.

---

அயலானை ஆதரி

அண்டை யயலான் பசித்திருக்கக் தன்கண்ணுற்
கண்டிருந்துங் காணா தவன் போல - உண்டு
பசிதீர்ந் தகமகிழ்வான் பார்மீதி லுண்மை
முசிலீ மெனப்படுத லின்று.

தனது அயலகத்தான் தனக்கருகே பசித்திருக்க வயிறார உண்பவன் உண்மையான விசுவாசியல்லன் - பைஹகி.

ஆ. மு. ஷரிபுத்தீன்.

---

*With Compliments from*

**THE LEATHER PEOPLE**

**N. M. MOHAMED MOHIDEEN**

*General Merchants, Tanners,*
*Exporters & Importers*

*Leading Exporters of*
**"N M M"** *Quality*
KIPS and TANNED
GOAT and SHEEP SKINS
to U. K.

*Direct Importers of*
All Kinds of Shoe Materials from
United Kingdom, Europe & India

**17, Second Cross Street,**
**COLOMBO-11.**

*Cable:* **"SHEEPSKIN"** *Dial:* **25794**

*Tannery at:*
**Kotuwegoda, Rajagiriya.**
*Dial:* **674 - 2310**
**Kotte**

*Bankers:*
**Chartered Bank**

*Branch:* **Udatalawinne, Katugastota.**
" **Narpitimunai, Kalmunai.**

# தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரியம்

## தென் பாண்டி நாட்டை ஆண்ட அறபி மன்னர்

ஓர் அறபி அகதி தென்பாண்டிய நாட்டின் வேந்தராகவும், இன்னொரு அரபி அகதி சுந்தர பாண்டிய தேவரின் முதல் அமைச்சராகவும் இருந்த தாக வரலாறு கூறும் உண்மைகள் இக்காலத்தில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் மூடி மறைக் கப்பட்டுள்ளன. சுந்தரபாண்டியதேவர் வலிமை மிக்க மாமன்னராகவும் பேரறிஞராகவும் விளங்கிய வர். பாண்டிநாட்டை மாத்திரமல்ல, சோழ நாட் டையும் ஈழ நாட்டின் ஒரு பகுதியையும் ஒரேகுடை யின் கீழ் அரசாட்சி செய்த மன்னாதி மன்னர். சீன நாட்டுடன் ராஜரீக தொடர்பு வைத்திருந்தவர். பாண்டிநாட்டின் தூதுவராகச் சீன நாட்டுக்கு ஓர் அறபி அகதியை அனுப்பிவைத்தார் என்று வரலாறு கூறுகிறது. இதுபற்றியும் இக்கால வரலாற்று ஏடுக ளில் எத்தகவலுமில்லை. இந்நிகழ்ச்சி பற்றி உண் மையான வரலாறு கூறும் செய்திகளை இவண் தருகி றேன்.-

## எகிப்தில் ஏற்பட்ட புரட்சி

கி. பி. 1280 வது வருடம். எகிப்து நாட்டில் ராணுவ ஆட்சி நடைபெற்ற காலம் இது; வெள்ளை அடிமை (White Slaves) இனத்தைச் சேர்ந்த மம்லூக் சுல்தான் முகம்மது கலாவூன் என்பவன் எகிப்தின் வேந்தனாக இருந்த காலம். இவன் ஒரு கொடுங்கோலன். இமாம்களையும் பெருமானார் (ஸல்) அவர்கள் வழிவந்த 'ஸாதாத்'[2]களையும் கொடுமைப்படுத்தினான். மக்கள் மத்தியிலே புரட்சி ஏற்பட்டது. புரட்சியாளர்களை மன்னன் அடக்கி ஒடுக்கினான் 'கெய்ரோ'[3] நகரவாசிகள் ஹிந்துஸ் தானு[4]க்கு ஹிஜ்ரத்[5] செய்ய முடிவுசெய்தனர். ஐந்து கப்பல்களில் பிரயாணமாயினர். ஒன்று ஹிந் துஸ்தான் வரும் வழியில் தவறிவிட்டது[6]. இரண்

1. இமாம் — தலைவர் என்பது இதன் பொருள்.
2. ஸாதாத் — பெருமானார் (ஸல்) அவர்கள் வமிசத்த வர்களை இப்படி அழைப்பதுண்டு.
3. கெய்ரோ — இதன் அறபி பெயர் 'காஹிரு'. தமிழர் கள், 'காயிறான்' என்பர். இது எகிப்து(மிசிரம்) நாட் டின் தலைநகர்.
4. ஹிந்துஸ்தான் — 'இந்தியா' நாட்டை இப்படியும் அழைப்பதுண்டு.
5. ஹிஜ்ரத் — நாடுவிட்டு நாடுசென்று குடியேறுவதை 'ஹிஜ்ரத்' என்பார்கள் அறபிகள்.
6. தவறியதாகக் கூறப்படும் முதற் கப்பல் அண்டார்டிக் பெருங்கடலிலுள்ள ஒரு இடத்தில் போகி சேர்ந்திருக் கக் கூடுமென்றும் சில வரலாற்று ஆசிரியர்கள் எழு திவைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாவது கப்பல் 'ஸூரத்' திலும், மூன்ருவது கப்பல் 'கோக்கானூரி'[8] லும் நான்காவது கப்பல் 'அச்சை நிருபம்'[9] என்ற துறைமுகத்திலும் போகி சேர்ந்தது. இந்தத் துறைகள் அனைத்தும் அறபிக்கடலிலே மேற்கு கரையிலே அமைந்துள்ளன. செய்யிது ஜமாலுத்தீனை யும் அவரின் குடும்பத்தினரையும் ஏற்றிவந்த ஐந்தாவது கப்பல் கி.பி. 1284-ல் தூத்துக்குடி[10]க் தஅண்மையிலுள்ள காயல்துறை வந்துசேர்ந்தது. இது காயலில் அரபிகளின் இரண்டாவது குடியேற்றம். முதல் குடியேற்றம் கி. பி. 875-ல் நிகழ்ந்ததை முன்பே குறிப்பிட்டுள்ளேன்.

## சீனுவுக்குத் தமிழகத் தூதுவராக நியமிக்கப்பட்ட அறபி

பாண்டிய நாட்டின் வேந்தனுக இருந்த சுந்தர பாண்டிய தேவர் எகிப்திய[1] முஹாஜிரீன்[2] களுக்கு எல்லாவகையான ஒத்தாசைகளும் அளித்தார். செய்யிது ஜமாலுத்தீன் என்பவர் பெருமாஞர்(ஸல்) அவர்களின் பேரஞர் கர்பலா[3] தியாகி இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் 21-வது வழித்தோற்றல். இவர் ஓர் அறிஞர். ஒரு வணிக வல்லவர். கூர்மை மிக்க ராஜதந்திரி. இவர்மீது மன்னருக்கு பெருமதிப்பு இருந்தது. கி. பி. 1286-ல் சீனுவுக்கு செய்யிது ஜமாலுத்தீனை தமிழகத்தின் 'எழுச்சி'[4] யா (தூதுவரா)க அனுப்பிவைத்ததோடு மட்டுமன்றி, அவரின் தம்பி செய்யிது தகிய்யுத்தீனை தமது முதல் அமைச்சராகவும் நியமித்துக்கொண்டார்.

டாக்டர் கால்ட்வெல் பாதிரியார்[5] இச்சம்பவம் பற்றி தமது 'திருநெல்வேலி சரித்திர' த்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:-

"1286-ல் மாமன்னர் குப்லேகானுக்கு அன்பளிப்புகள் அனுப்பிய நாடுகளில், மாபர்[6] நாட்டின் பெயரும் சீனு வரலாற்றில் காணப்படு

---

7, 8, 9, — ஸூரத் மகாராஷ்டிருவிலும், கோக்கானூர் அச்சை நிருபம் கேரளத்திலுமுள்ள துறைமுகப் பட்டினங்கள்.

10. தூத்துக்குடி தமிழகத்திலுள்ள ஒரு துறைமுகம்.

1. எகிப்து — தமிழர்கள்'மிசிரம்' என்பர். "ஓனர் மிசிரம், யவனரகம்........" — பாரதியார்.

2. 'முஹாஜிரீன்' — அகதிகள்.

3 கர்பலா — கூபா நாட்டிலுள்ள ஒரு முற்றவெளி. யஜீதுடன் போர்தொடுத்து வீரமரணம் எய்திய இடமும் இதுவே.

4. தூதுவரை 'எழுச்சி' என்பார் தமிழர்கள்.

5. டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் தமிழ் மூதறிஞர். நல்ல ஆராய்ச்சியாளர். இவருக்கு சென்னை கடற்கரையில் ஒரு சிலை எழுப்பப்பட்டுள்ளது.

6. சீனு வரலாற்றில் மாபரை மா - பாஹ் (Maparh) என குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறது; 1280-ம் ஆண்டிலும் அதைத் தொடர்ந்து மற்ற வருடங்களிலும் 'மாப'ருடன் ராஜதந்திர உறவுகள் பற்றி சீனுவிலுள்ள மூல ஏடுகளில் அபூர்வமான ருசிகரமிக்க சாராம்சங்களை பாதியர் என்ற வரலாற்று ஆசிரியர் கொடுத்துள்ளார்; சுல்தான்[7] களாக இருந்த ஐந்து சகோதரர்கள் பற்றியும் மாபரிலிருந்து மங்கோலிய அரசவைக்கு அனுப்பப்பட்ட சமலாதிங்[9] என்ற தூதுவர் பற்றியும் இவற்றில் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.''[10]

## குதிரை வர்த்தக உடன்பாடு

செய்யிது ஜமால்லுத்தீன் சீனு நாட்டிலிருந்து திரும்பி வந்ததும், அவருக்கும் மன்னருக்குமிடையில் ஒரு வர்த்தக உடன்பாடு கை எழுத்தாயிற்று. 'வருடா வருடம் செய்யிது ஜமாலுத்தீன் பாண்டிய நாட்டுக்கு 11,400 குதிரைகள் ஏற்றுமதி செய்ய வேண்டும். ஒவ்வொரு குதிரைக்கும் மன்னர் 500 'சக்கி'[11] தங்கம் செலுத்தவேண்டும்' என்பது ஒப்பந்த நிபந்தனை. செய்யிது ஜமாலுத்தீனை பாண்டிய நாட்டின் முப்படைக்கும் முக்கிய தளபதியாகவும் நியமித்தார் மன்னர்; பாண்டி நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் நடந்த போரில் செய்யிது ஜமாலுத்தீன் தலைமையில் ஒரு படை வந்து வெற்றி ஈட்டியதாகவும் வரலாறு கூறுகிறது. நாட்டுக்கு அவர் புரிந்த பெரும் பணியை கௌரவிக்குமுகமாக பழைய காயலில் ஒரு பகுதியை செய்யிது ஜமாலுத்தீனுக்கு அன்பளிப்பாக வழங்கினர் மன்னர்; கி. பி. 1292-ல் சுந்தரபாண்டிய தேவர் காலமானர். அது சமயம் செய்யிது ஜமாலுத்தீனின் பெயரும் புகழும் மிக உச்சத்தில் இருந்தது. பாண்டிய நாட்டின் சிம்மாசனத்துக்கு அவர் தெரிசெய்யப்பட்டார். அதுமுதல் அவர் மலிகுல் இஸ்லாம்[12] சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் என அழைக்கப்படலாஞர். அவரின் தம்பி செய்யிது தகிய்யுத்தீன் என்பவர் பிரதம அமைச்சராக பதவியைத் தொடர்ந்து வகித்தார்; அவரை மக்கள் வீர தீர பிரபு 'மலிகுல் அஃழம்'[13] என அழைத்தனர்.

## சுல்தான் ஜமாலுத்தீனின் ஆட்சியின் மாட்சி

செய்யிது ஜமாலுத்தீன் ஆட்சிக்கு வந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு 7000 மாட்டுச் சுமை தங்கம்

---

7. சுல்தான் — மன்னர்.

8. மங்கோலிய — மஞ்சள் நிறத்தவர்களை இப்படி அழைப்பதுண்டு.

9. சமலாதிங் — ஜமாலுத்தீனை இப்படி அழைப்பர் சீனர்கள்.

10. திருநெல்வேலி சரித்திரம், 36—வது பக்கம்.

11. 'சக்கி' என்பது வெனிஸ் தேசத்து நாணயம்'. அரபு நாட்டு களஞ்சி என்ற மித்காலுக்கு இது சமம். ஒரு சக்கிக்கு ரூபாய் 4 சதம் 40 ஆகும்.

12. மலிகுல் இஸ்லாம் — இஸ்லாமிய வேந்தன்.

13. மலிகுல் அஃழம் — மாமன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Farm House

**THE LEADING HOUSE FOR**

*FERTILISERS, POULTRY FOODS*

*AGRICULTURAL CHEMICALS & ALL FARM REQUISITIES*

## *THE FARM HOUSE*

**34, Bazaar Street, Batticaloa.**
*Tel: No.* 332

*Branch:* **MIRAVODAI, VALAICHCHENAI.**

[ GOVT. AUTHORISED FERTILISER DEALERS ]

## பாம் ஹவுஸ்

**உர வகைகள், கோழித் தீன்கள்,**

**விவசாய இரசாயனங்கள்**

**மற்றும் எல்லா வகையான விவசாயத்**

**தேவைகளுக்கும் தலைசிறந்த இடம்**

**பாம் ஹவுஸ்**

*34, கடைத்தெரு வீதி,*
*மட்டக்களப்பு.*

*தொலைபேசி:* 332

*கிளை:*

**மீராவோடை,**
வாழைச்சேனை.

[அரசாங்க அதிகாரம் பெற்ற பசளை வியாபாரிகள்]




நகை ஆப ணங்கள் கிடைத்தன.[1] கருணை மிக்க மன்னராக விளங்கினர். அனைத்துலக மன்னர்களுடனும் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். உலகெங்கும் அவரின் பேரும் புகழும் எப்படி பிரகாசித்தன என்பது பற்றி சரித்திராசிரியர் வாஸிப் கொடுத்துள்ள குறிப்புக்கள் சான்றுகள் கூறுகின்றன. அவை:-

''மலிகுல் அஃழம் தகிய்யுத்தீன், மலிகுல் இஸ்லாம் ஜமாலுத்தீன் ஆகியோரின் பேரரசும் அதிகாரப் பெருமையும்கீர்த்தியும் மாபரில் மாத்திரம் என்ன, ஹிந்து நாட்டின் பல பாகங்களிலும் மிகப் பிரபலமாக விளங்கியது. தொலைதூர நாடுகளிலுள்ள வேந்தர்கள் எல்லோரும் உறவுகளை வளர்த்து நேசத்தைஏற்படுத்தினர்கள், ஜமாலுத்தீனுக்கும் சுல்தான் அலியின் ஹஸப்பருத்தீன் முவய்யிதுக்கு மிடையில் அறபியில் நடைபெற்ற கடிதத் தொடர்பு மூலம் அக்கால வேந்தர்கள் ஜமாலுத்தீனை எப்படி கௌரவமாக மதித்தார்கள் என்பதை அறியக்கிடக்கிறது.''[2]

செய்யிது ஜமாலுத்தீன் மகன் செய்யிது பக்ருத்தீன் கி. பி. 1297-ல் சீனவுக்குப் பாண்டிய நாட்டின் தூதுவராக அனுப்பப்பட்டார். கி. பி. 1305 வரை அவர் அங்கு பணிபுரிந்தார். மலிகுல் அஃழம் செய்யிது தகிய்யுத்தீன் கி. பி. 1303-ல் காலமானர். அவருடைய பதவிக்கு அவரின் மகன் சிருஜுத்தீனும் அவருக்குப் பின் அவரின் மகன் நிஸாமுத்தீனும் முதல் அமைசர் பதவி வகித்தனர். செய்யிது தகிய்யுத்தீன் மரணமான அதே ஆண்டிலேயே செய்யிது ஜமாலுத்தீன் உலக பாதுகாப்புச் சபைக்கு[3] அழைக்கப்பட்டு மிகப் பெரு மதிப்புடனும் கௌரவத்துடனும் உபசரிக்கப்பட்டார்; செய்யிது பக்ருத்தீன் சீனவிலிருந்து திரும்பி வரும் வழியில் மாபர் கரையில் காலமாகிவிட்டார். அவரின் கல்லறை அவரின் சிறிய தந்தை செய்யிது தகிய்யுத்தீனின் கல்லறைக்கண்மையிலேயே அமைந்துள்ளது.[4] கி. பி. 1306-ல் செய்யிது ஜமாலுத்தீன் ஷிருஸில்[5] மரண

---

1. ''செல்வம் எத்தனை உண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு''

   என பாரதியார் பாடினர். 13-வது நூற்றுண்டில் தென்பாண்டி நாட்டில் செல்வ வெள்ளம் எப்படி கரை புரண்டோடியது என்பதற்கு ஜமாலுத்தீன் பெற்ற செல்வத்தின் அளவு ஓர் எடுத்துக் காட்டு.

2. எச். எம். எலியட் எழுதி, 1871-ல் பதிக்கப்பட்ட 'இந்தியா சரித்திரம்' புத்தகம் 3-பக்கங்கள் 45, 47, 52, 54, 91, 211, 518, 550, பார்க்க.

3. 13-வது நூற்றுண்டில் பாரசீகக்குடா நாட்டில் ஒரு உலக பாதுகாப்பு சபை இருந்ததாக தெரியவருகிறது. உலக நாடுகளின் விவகாரங்களை சுமுகமாக தீர்க்கும் உலக அவைக்கு ஒரு தமிழக வேந்தன் தலைமைதாங்கியதையும் வரலாறு கூறுகிறது.

4. இங்கு 'மாபர் கரை' என்பதை காயல்பட்டினம் துறை எனக் கொள்க.

5. ஷிருஸ்—இது அக்கால பாரசீக குடா நாட்டின் தலைநகரம். இங்குதான் உலக பாதுகாப்பு பெருமன்றம் அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானர். ஓர் அழகிய கோரி அவரின் சமாதி மீது எழுப்பப்பட்டு அதில் அவர் மரண நினைவாக ஓர் இரங்கற்பாவும் செதுக்கப்பட்டுள்ளது.[6]

## தமிழகத்தின் வகுப்பு ஒற்றுமை

'பாண்டிய நாட்டின் அறபிவேந்தர்' (An Arab King of Pandya) என்ற தலைப்பில் எனது கட்டுரை சென்னையிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' (Hindu) என்ற ஆங்கிலச் செய்தித்தாள் 25 8-40 இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. பல அறிஞர்களும் வரலாற்று மாணவர்களும் பாண்டிய நாட்டில் அறபிகள் ஆதிக்கம் வகித்ததை மறுத்து எழுதினர். சுந்தரபாண்டிய அரசவையில் முஸ்லிம்களுக்கு பல மிக்க செல்வாக்கும் அதிகாரமும் இருந்ததாக 13-வது நூற்றாண்டு வரலாற்று ஆசிரியர்கள் யாவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கின்றனர்; தமிழகத்திலே ஹிந்துக்களும் முஸ்லிம்களும் மிக சினேகமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு இதனடியில் காணும் குறிப்புகள் சான்று பகர்கின்றன:—

மதுரையிலுள்ள மற்ற வேந்தர்களைவிட சுந்தர பாண்டியரைப் பற்றி நமக்கு அதிக தகவல்கள் கிடைக்கின்றன. மதுரை ஸ்தலபுராணம், திருத்தொண்டர் புராணம் ஆகிய காப்பியங்களில் காணப்படும் பொருள்மிக்க தொகுப்புக்களிலிருந்தும் சிங்கள வரலாற்று ஆசிரியர்களும். இஸ்லாமிய சரித்திராசிரியர்களான வஸப் ரஷீதுத்தீன், அமிர் குஷ்ரு ஆகியோர்களும் தந்துள்ள தகவல்களிலிருந்தும் நிரம்பச் செய்திகள் கிடைக்கின்றன. சுந்தரபாண்டியர் பாண்டிய தலைமுறை அல்லது சோழபாண்டிய தலைமுறையிலுள்ள கடைசி மன்னர் என விளங்குகிறது. சுந்தரர் இறந்ததும் மதுரை அரசு முஹம்மதியர் வசமாயிற்று என்ற முஸ்லிம் சரித்திராசிரியர்களின் கூற்றுகள் இட்படியான சந்தர்ப்பவாதங்களால் யதார்த்தம் என்றே கொள்ளவேண்டும். இதுபற்றி எல்லா கர்ணபரம்பரைக் கூற்றுக்களும் இஸ்லாமிய சரித்திராசிரியர்களின் அறிக்கைகளுக்கு ஒத்தே இருக்கின்றன. சுந்தரர் வாழ்ந்த காலத்திலேயே முஹம்மதியர்கள் மேலாதிக்கம் ஓங்கி நின்றது உண்மை.

—டாக்டர் கால்ட்வெல், திருநெல்வேலி சரித்திரம், பக்கம் 32.

நெல்ஸன் கைடேட்டில் கண்ட குறிப்புகளிலிருந்து கி. பி. 1573-ல் வீரப்பநாயக்கர் மதுரையிலுள்ள ஒரு மசூதிக்கு கூன்பாண்டியர் கொடுத்த ஒரு நன்கொடையை உறுதிப்படுத்தி ஓர் உறுதிப்பத்திரம் எழுதிக்கொடுத்திருப்பதை அறிகிறோம்,

---

6. எச். எம். எலியட் தமது நூலில் செய்யது ஜமாலுத்தீன் மரணம் பற்றி விரிவாக எழுதி அறபியில் செதுக்கப்பட்டிருந்த இரங்கற்பாவை அடியில் கொடுத்திருப்பதாக எழுதியிருக்கிறர். ஆனல் அது கொடுபடவில்லை. ஏனே விடுபட்டுவிட்டது.'




# SIVASAKTHY TRADERS
33, Old Moor Street,
Colombo - 12.
*T'phone:* 32917

**General Merchants and Commission Agents**
**Estate Suppliers and Dealers in**
**No. 1 Sulavi Rice - Samba - Kora**
**and other Ceylon Produces**

*Rice Mills*

***Sivasakthy Rice Mills,***
**JA-ELA.**
Phone : 94



*With Best Compliments*

*from*

# Ratha Beedi Company
**111, 113, Madawala Road,**
**Katugastota.**

*Telephone:* 2 9 3 *Telegrams:* "RATHA"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் சுந்தரர் அரசவையில் முஹம்மதியர்களின் செல்வாக்கு மேலோங்கி நின்றதையே காட்டுகிறது.

— டாக்டர் கால்ட்வெல்.

## ஆராய்ச்சியின் மூலம் கண்ட உண்மைகள்

'ஸெர் மார்கோ போலோ' என்ற நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் கர்னல் ஹென்றி யூல் (Col. Henry Yule) என்ற பொறிஇயல் நிபுணர். இத்தாலி பூதத்துவ ராயல் பொறியியல் குழுவைச் சேர்ந்தவர். நூறு வருடங்களுக்கு முன் இவர் கொற்கை1 மாராமங்கலம்2 பழைய காயல்3 புன்னைக்காயல்4 காயல்பட்டணம்5 இவ்விடங்களுக்கெல்லாம் நேரிற் சென்று பார்வையிட்டு பலவாறு ஆராய்ந்து பல ருசிகரமிக்க தகவல்களைக் கொடுத்துள்ளார். பேரறிஞர் கலாநிதி கால்ட்வெல் பாதிரியாரும் அவருடன் ஒன்ருகச்சென்று ஆய்வுத்துறையில் துணை நின்ருர். மார்கோ போலோ இறங்கிய பழைய காயலில் ஒரு பெரிய வெறுநிலம் பரந்து கிடக்கிறது. இதை மக்கள் சூரன் காடு என அழைக்கின்றனர். இந்த இடத்தை நானும் வேறு சில ஆய்வாளர்களுமாக6 29-9-1940-ல் சென்று பார்வையிட்டோம். இந்த இடத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்தேன். இப்பொழுது அழிந்து கிடக்கும் சூரன்காடு ஒரு காலத்தில் பாண்டிய வேந்தன் அரசவை வைத்து நடத்திய இடம் என கர்னல் ஹென்றி யூல் கூறுகிறர். இது முழுக்க முழுக்க சரி என்பதே என் அபிப்பிராயம். வேறு சில வரலாற்று உண்மைகளைப்பற்றி இக்கிராம மக்களிடம் கேட்டு விளங்கியதாகவும் யூல் பெருமகனர் கூறுகிறர். காயலில் ஆட்சி புரிந்த சூர் ராஜா ஒரு முஸ்லிம் என்றும், அவர்தான் காயலின் கடைசி மன்னர் என்றும் அந்த ஊர் மக்கள் கூறியதாகவும் யூல் துரை மகனர் கூறுகிறர். காயலிலுள்ள மீனாட்சி கோவிலில் சூர் ராஜா வழங்கியதாகக் கூறப்படும் ஒரு செப்பு பட்டயம் இருப்பதாகவும், இஃது அந்தக்கோவிலுள் பாதுகாத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், இதில் சூர் ராஜா வழங்கிய மான்யங்களைப்பற்றிய குறிப்புகள் இருப்பதாகவும், சூர் ராஜா ஒரு முஸ்லிம் என்றும் அந்தக் கோவில் மதகுரு உறுதிப்படுத்தியதாகவும் ஹென்றி யூல் எழுதியுள்ளார். சூர் ராஜா, என்ற பெயர் முஸ்லிம் பெயராகத் தொனிக்கவில்லைதான் ஆனல், ஊர் மக்களின் கூற்றில் உண்மை இல்லாமலிருக்கவும் முடி

---

1. முஹம்மதியர்—முஸ்லிம்களை முஹம்மதியர்கள் என தவருக அழைத்தனர். கிறிஸ்து நாதரைப்பின் பற்றியவர்கள்தங்களைக் கிறிஸ்தவர்கள்என்றும்தங்கள் மதத்தை கிறிஸ்தவமதம் என்றும் அழைக்கின்றனர். அவ்வாறே பௌத்தர்களும். முஸ்லிம்கள் தாங்கள் முஹம்மது நபி(ஸல்) அவர்களைப் பின் பற்றியவர்களாயினும் தங்களை முஹம்மதியர்கள்என அழைத்துக் கொள்வதில்லை;

1, 2, 3, 4, 5, முதல் மூன்று ஊர்களும்நெல்லை மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் வட்டாரத்திலும் பிந்திய இரு ஊர்களும் திருச்செந்தூர் வட்டாரத்திலும் அமைந்தவை. ஒருகாலத்தில் காயல், புன்னைக்காயல், காயல்பட்டணம் இம்மூன்றும் சேர்ந்து ஒரே பட்டினமாக விளங்கியதாகவும் அறிகிறேம்.



*With best Compliments of*

**P. S. K. V.**
**Pallak Lebbe & Co.,**

163, Second Cross Street,
Colombo - 11.

**Jewellers of Distinction**
**Specialists and Exporters**
**in**
**Ceylon Genuine Gems of**
**ALL VARIETIES**

*Phone:* 3525 *after change* 20525

*Grams:* "THAIKA"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BATA**

*WHOLESALE DISTRIBUTORS*

**E. A. M. S. MARIKAR**
30 & 136, PRINCE STREET,
PETTAH, COLOMBO.
*Phone:* 3698

*Branch:*
132, Trincomalee St.,
Kandy.
*Phone:* 7456

பீடிகளில் சிறந்தது
**ஆர். எம். ஏ. பீடி**
சோம்பலை நீக்கி சுறுசுறுப்பைத் தருவது
**ஆர். எம். ஏ. பீடி**
பாட்டாளி முதல் பணக்காரன் வரை
விரும்பிப் புகைப்பது
**ஆர். எம். ஏ. பீடி**
*தயாரிப்பாளர்:*
ஆர். எம். ஏ. பீடி கம்பேனி
பெந்தன்னி கொட,
நாராம்மல
தலைமை நிலையம்:
10ம் வட்டாரம்,
பெரிய கிண்ணியா,
கிண்ணியா.

யாது: சூர் ராஜா என்பது செய்யிது ஜமாலுத்தீனின் பட்டப் பெயராகவும் இருக்கலாம். சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் வமிசத்தவர்கள் சிலர்களின் கல்லறைகளில் நாட்டப்பட்டிருக்கும் கல்களில் ஷெண்பக முதலியார், பராக்கிரம பாண்டியமுதலியார், வீரபாண்டிமுதலியார் இப்படியான பெயர்களும் பொறிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். ஜமாலுத்தீன் வேந்தனுக வருவதற்கு முன், ஒரு வர்த்தக நிபுணராகவும், பெரும்புகழ் கொண்ட ராஜதந்திரியுமாகவும், நாட்டின் சேனைத் தலைவராகவும், அறிஞராகவும் இருந்திருக்கிறார். ஆகையால், அவரை மக்கள் 'சூரன்' என் அழைத்திருப்பார்கள். இப்பெயரால் சூரன் காடு ஏற்பட்டிருக்கலாம்.

## தமிழ் பேசும் முஸ்லிம்களின் தந்தை நாடு

முன் கூறியபடி ''மூர்'' (Moor) என்றும், 'சோனகர்' என்றும், 'துலுக்கர்' என்றும், 'மரைக்காயர்' என்றும், 'லெப்பை' என்றும், ''சோழியர்'' என்றும், 'யவனர்' என்றும் அழைக்கப்படுகின்றவர்கள் யாவரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு உலகின் பல திக்குகளிலும் பரந்துவாழும் அறபி வழி வந்த முஸ்லிம்களேயாவார். தமிழ் முஸ்லிம்கள் என்றும், தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்றும் அழைக்கப்படுகின்றவர்களும் இவர்களேயாவார். இவர்களின் தந்தை நாடு தமிழகத்திலுள்ள நெல்லைமாவட்டத்திலுள்ள காயல்பட்டணம் என்பதை சரித்திர ஆய்வாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மார்கோ போலோ இப்பெரும் புகழ் கொண்ட நகருக்கு இரு முறை வந்துள்ளார் கி. பி. 1288-ல் முதன் முறையாகவும், கி. பி. 1293-ல் மறுமுறையும் வந்துள்ளார்; அனைத்துலக வர்த்தக கேந்திர இடமாக விலங்கிய நகரும் இதுவே. பற்பல வகையான தொழில்கள் இங்கு இருந்தன. கப்பல் கட்டுதல், பீங்கான் உற்பத்தி, நெசவு, முத்துச்சிலாபம் மற்றும் பல்வேறு தொழில்களும் இங்கிருந்தன. 'மஸ்லின்' துணி இங்கு உற்பத்தியாகி ஐரோப்பிய நாடுகளுக்கும், உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. மறைந்த மாமேதை, பண்டித ஜவஹர்லால் நேரு தமது 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' (Discovery of India) என்ற நூலில் 194-வது பக்கத்தில் இந்தகவல் வருமாறு காணப்படுகிறது.

காயல் பட்டணத்திலிருந்து காயல் ஆரம்பமாவதாக பழைய காயல் ஸ்தலபுராணம் கூறுகிறது. திரு ரா. பி. சேதுப்பிள்ளை தமது ''ஊரும் பேரும்'' என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:-

''காயல்பட்டணம் ஒரு அழகிய நகரம். சோனகர் பட்டினம் என்று இது முன்பு அழைக்கப்பட்டது''

---

6. சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் வமிச வழி வந்தவரும் எனக்கு மாமாமுறையுமான பிரபு நயினு சாஹிபு, சி. மு. க. நூ. சேகு முகம்மது, ஹாஜி சி லெ. முகம்மது இபுருஹீம், எம். கே. முகம்மது இபுருஹீம் சாஹிபு பீ. ஏ., பீ. எல்., என்னுடன் வந்த ஆய்வுக் குழுவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Quality . . . .*

**Our Watchword**

*It ensures that every Cup of Darleys Golden Blend Tea is as good as the previous. Make sure that your next cup is made with Darleys Golden Blend Tea.*

*You are sure to notice the difference*

DARLEYS

GOLDEN BLEND

TEA

DARLEYS

482 1/A, DARLEY ROAD, COLOMBO



தங்களின் பூர்வ நகரின் ஞாபகமாக காயல்பட்டணம் என்று இந்த நகருக்கு பெயர் வழங்கப்பட்டது என்றும், இதன் ஆரம்பப்பெயர் 'சோனகர் பட்டினம்' என்றும் காயல்பட்டணம் வாசிகள் கூறுவதாக டாக்டர் கால்ட்வெல் குறிப்பிடுகிறார். காயல்பட்டணத்துக்கு மிக அண்மையில் ஒரு கிராமம் உண்டு. அதற்குப் பெயர் சோனகன் விளை. அங்கே ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதற்குப் பெயர் துலுக்கன் குளம். தற்பொழுது இலங்கை என்று அழைக்கப்படும் ''ஸரந்தீபுக்கு எதிரில் அமைந்த இடம் காயல்'' என்று அப்துல் றஸாக் அவரின் குவார்டர் மீர்ஸி (Quartermeries)-ல் குறிப்பிடுகிறார். ''காயல் ஒரு முஸ்லிம் வேந்தனின் ராஜ்யம்'' என வாஸ் கோடிகாமா (Vasco De Gama) தமது ''ரொடெய்ரோ'' (Roterio) வில் எழுதியுள்ளார் ஜியாவுனி எம்பொலி, டுவர்தமா, பர்பஸா, நிகோலோ கோண்டி ஆகிய சரித்திர மேதைகள் ''காயல் முத்துக் குளிக்கும் இடம்'' என வர்ணித்துள்ளனர். காயல் என்றவார்த்தைக்கு கடற்கழி அல்லது களப்பு என்பது பொருள். களப்பு ஓரத்தில் அமையும் ஊர்களுக்கு காயல் என்ற பெயர் ஏற்படுவதுண்டு. காயலில் நடைபெற்ற முத்து சிலாபத்தைப் பற்றி மார்கோ போலோ மிக விரிவான தகவல்கள் தந்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் இருமுறை குளித்தல், நல்லகாரியங்களுக்கே வலக்கையையும், அருவருப்பான காரியங்களுக்கு இடக்கையையும் உபயோகித்தல், உதட்டில் படாமல் பாத்திரத்தில் நீர் அருந்துதல், பாத்திரம் கிடைக்காவிடில் கையைப் பாத்திரமாக உபயோகித்து நீர் அருந்துதல், போதையாம் மது ஒழித்தல், நீதியைக் கண்டிப்பாக நடத்தல், குடிகாரர்களையும் கடலோடிகளையும் பிணையாளர்களாக ஏற்றுக்கொள்ள மறுத்தல்; சோதிடக்கலை, விண்கலை இப்படியான துறைகளில் அபார ஞானம். இவையெல்லாம் மார்கோபோலோவைக் கவர்ந்த தமிழக நாகரிகங்களில் சில. இப்படியான நற்பண்புகள் தம் சொந்தநாட்டில் இல்லாததால் தமிழகத்தில் கண்ட இப்பண்புகள் அவருக்கு மிக விநோதமாகத் தோன்றி இருக்கலாம்.

## பாண்டிய அரசின் வீழ்ச்சி

செய்யிது தகியுத்தீன் கி.பி. 1303ல் மரணமானார் என்றும், அவர் இறந்து சில மாதங்களில் செய்யிது ஜமாலுத்தீன் ஷிராஸுக்குபுறப்பட்டார் என்றும் முன்னர் குறித்தேன். அப்பொழுது அவர் மகன் செய்யிது பருக்தீன் சீனாவில் இருந்தார். செய்யிது திகிய்யுதீனின் மகன் செய்யிதுசிராஜுத்தீன் தந்தைக்குப்பின் முதல் அமைச்சராகிசெய்யிது ஜமாலுத்தீன்இல்லாத காலத்திலும் அவரே ஆட்சியை நடத்தி வந்தார். செய்யிது ஜமாலுதீனின் மகன் செய்யிது பக்ருதீன் சீனாவிலிருந்து கி. பி. 1305-ல் தமிழகம் திரும்பிய சந்தர்ப்பத்தில், தந்தை செய்யிது ஜமாலுத்தீன் ஷிராஸிலிருந்தார் செய்யிது பக்ருத்தீன் 1305-ல் காலமானார்; செய்யிது ஜமாலுத்தீன் கி. பி. 1306ல்- காலமானார். சுல்தான் செய்யிது ஜாமலுத்தீன் காலமானதும் நாட்டின் நிர்வாகப் பொறுப்பை சுந்தரபண்டியதேவரின் சகோதரர் குலசேகரபாண்டியதேவர் ஏற்றுக்கொண்டார். குலசேகரபாண்டிய தேவர் முழுநாட்டையும் சீரும் சிறப்புமாக ஆட்சி செய்துவந்தார். அவர் அரசோச்சிய காலத்தில் மதுரை அரசாங்க பொக்கிஷசாலையில் 1200 கோடி தங்கப் பேழைகள் இருந்ததாகக்கூறப்படுகிறது. குலசேகரதேவருக்கு இரு ஆண்

C. P. P.

SILVERED & COPPERED MIRRORS

MADE TO LATEST BRITISH FORMULA
SUPERVISED BY FOREIGN TRAINED EXPERT
GUARANTEED FOR QUALITY

THE COLOMBO PICTURE PALACE
GLASS MERCHANTS,
104, PRINCE STREET,
COLOMBO - 11.



பீடிகளுக்குள் பிரபு
லோட் பீடி
சிறந்த புகையிலை கொண்டு
உயர்ந்த முறையில் தயார்
செய்யப்பட்டது
லோட் பீடி
புவியில் பிறந்தோர்
புகைத்தின்புறுவதற்கு
சிறந்தது
லோட் பீடி
லோட் பீடி கம்பேனி,
நாம்புளுவ,
பஸ்யால.


மக்கள்—ஒருவன் சுந்தரபாண்டிய தேவன். இவன் பட்டத்து ராணிக்குப் பிறந்தவன். மற்றவன் வீர பாண்டியதேவன். இவன் வைப்பாட்டிக்குப் பிறந்தவன். வீரபாண்டியன் மிகவும் சாமார்த்தியமானவன்; சாணக்கியன்; ராஜதந்திரி வீரபாண்டியனைப் பட்டத்து இளவரசனுக நியமித்தார் குலசேகர பாண்டியதேவர். இதனுல் கோபங்கொண்ட சுந்தரபாண்டியன் தந்தையைக் கொன்றுவிட்டு நாட்டைப் பலாத்காரமாகக் கைப்பற்றிக் கொண்டார். வீரபாண்டியனுக்கும் சுந்தரபாண்டியனுக்கும் சண்டைமூண்டது. இதில் வீரபாண்டியன் வெற்றிபெற்ருன். சுந்தரபாண்டியன் டில்லி மாமன்னன் அலாவுத்தீன் கில்ஜீ இடம் சென்று உதவி தேடினுன். டில்லி வேந்தன் தம் தளபதி மாலிக் கபூரை பாண்டி நாட்டை வென்று வர அனுப்பினுன்.

## தமிழ் முஸ்லிம் தளபதி

பாண்டிய நாட்டின் பிரதம சேனுதிபதியாக இருந்தவர் எகிப்திய வழிவந்த ஒரு தமிழ் முஸ்லிம். பாண்டிய நாட்டின் சேனுதிபதி ஒரு முஸ்லிம் என்பதை அறிந்த மாலிக் கபூருக்கு பெருமகிழ்ச்சி. பாண்டிய நாட்டு சேனுதிபதிக்கு ஒரு இரகசியதூது அனுப்பினுன் மாலிக்கபூர். பெரும் சலுகைகள் அளிப்பதாக வாக்களித்தான். பட்டம் நல்குவதாக உறுதி அளித்தான்.

"நான் என் நாட்டுக்கு துரோகம் செய்ய மாட்டேன், வாருங்கள். களத்தில் சந்திப்போம். வெற்றி அல்லது மரணம். இதுவே என் தாரக மந்திரம்."

என முழங்கினுன். பாண்டிய சேனுதிபதி, இஸ்லாமிய செம்மல், அமீர் குஷ்ரூ என்ற சரித்திராசிரியன் இம்மாவீரனை 'அரை காபிர்'[1] என பட்டம் சூட்டி வரைந்துள்ளான். இப்போர்பற்றி எழுதியவன் அமீர்குஷ்ரூ: இப்படி அவரைக் குறைத்து எழுதியது அவரின் தேசப்பற்றுக்கு சான்றிதழாகும். போரிலே மாலிக் கபூர் வென்ருன். வெற்றியின் நினைவாக கி.பி. 1310-ல் ராமேஸ்வரத்தில் ஒரு மசூதியைக் கட்டினுன். அந்த மசூதி இப்பொழுது இருந்த இடம் தெரியவில்லை. ஆனுல், கி. பி. 1300-ல் காயல்ப்பட்டணத்தில் சுல்தான் செய்யிது ஜமாலுத்தீன் கட்டிய மசூதி இன்றும் அன்றுபோல் புகழுடன் விளங்குகிறது. தமிழ் முஸலிம்கள் கட்டி எழுப்பிய சமத்துவத்துக்கும், சகோதரத்துவத்திற்கும், அன்புக்கும், பண்புக்கும் சின்னமாக இது விளங்குகிறது. இஸ்லாம் பலாத்காரத்தின் மூலமோ பகைமையின் மூலமோ பரவியதல்ல. சமாதானத்தின் மூலமும் அன்பின் மூலமும் பரவியதே இஸ்லாம். 9-வது நூற்றுண்டிலும் 13-வது நூற்றுண்டிலும் எகிப்திய அறபிகள் ஏற்றிய அறிவு ஒளி அன்பு ஒளி தமிழகத்திலும் இந்தியாவின் இதர மாநிலங்களிலும், இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்துனசெு, மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் வாழும் நடுகள் எங்கும் சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ் முஸ்லிம் இனத்தைக் கட்டி எழுப்புவதில் இஸ்லாமிய முனிவர்கள், சாதுக்கள், சித்தர்கள், மெஞ்ஞானிகள், துறவிகள், கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், தமிழ் அறபு மொழிகளின் இலக்கிய கர்த்தாக்கள், எழுத்தாளர்கள் மற்றும் பல்வேறு

---

1. கரபிர்:-இஸ்லாத்தை நம்பாதவர்.

துறைகளிலும் ஈடுபாடுள்ள தமிழ் முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் பங்கை நன்கு நிறைவேற்றியுள்ளனர். ''தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரியம்'' என்பது ஒரு பெரிய விஷயம். இதில் ஒரு சிறு பகுதி மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

## ஆதார நூல்கள்: BIBLIOGRAPHY


1. திருநெல்வேலி சரித்திரம் — ஆங்கிலம் — டாக்டர் கால்ட்வெல்
2. சென்னைஞாபகக் குறிப்பு (Madras Manual) ஆங்கிலம்
3. இலங்கை அரசாங்க டச்சு உறுதிகள்—ஆங்கிலம்
4. இந்தியா சரித்திரம் — (History of India) — ஆங்கிலம் —ஸர் எலியட்-1867
5. ஸெர் மார்கோ போலோ(Ser Marco Polo)— ஆங்கிலம் —கர்னல் ஹென்றீ யூல்
6. இலங்கை——ஸர் ஜான் எமர்சன் டென்னண்ட் -1860
7. ஹொப்ஸன் ஜொப்ஸன் (Hobson Jobson)—ஆங்கிலம் —கர்னல் ஹென்றீ யூல்
8. ராயல் ஆசியா சங்க சஞ்சிகை—ஆங்கிலம்
9. இப்னுபதூதா —ஆங்கிலம்—கிப்ஸ்
10. இந்தியா நாட்டின் கண்டுபிடிப்பு—ஆங்கிலம்—பண்டிதர் ஜவகர்லால் நேரு
11. இலங்கை ஜனக்கணிதம் 1911—ஆங்கிலம்-டாக்டர்டென்ஹாம்
12. தென்இந்தியாவைப்பற்றி அறபிபூமிசாஸ்திரஆராய்ச்சியாளர் அறிவு—ஆக்கிலம்—டாக்டர் ஹுஸைன் நயினர்
13. இலங்கை ஜனக்கணிதம் 1946—ஆங்கிலம்—ஏ. இ.ரணசிங்ஹ
14. பேருவளை—ஆங்கிலம்—டாக்டர் புரோஹியர்
15. யாழ்ப்பாண வைபவம்—தமிழ்—முதலியார் குலசபாநாதன்—1952
16. 'ஊரும் பேரும்'—தமிழ்—ரா. பி. சேதுப்பிள்ளை
17. வான்புகழ் காயல்பட்டணம்—தமிழ்—நான் எழுதியது
18. இஸ்லாமிய தென்னகம் (Islamic South) —ஆங்கிலம் —நான் எழுதியது
19. பாண்டிநாட்டை ஆண்ட அறபி வேந்தர் (கட்டுரை) —ஆங்கிலம்—ஹிந்து—நான் எழுதியது
20. பழைய காயல் ஸ்தல புராணம்—தமிழ்
21. நான் எழுதி பல பத்திரிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகள்.


## தகைமை

நபி கதை: ஐந்து

பெண் ஒருத்தி தன்னுடைய மகன் இனிப்புப் பண்டங்களையே அதிகமாக உண்பதைப்பற்றிக் கவலை கொண்டாள். அவனுக்கு அத்தாய் எவ்வளவோ நற்புத்திகள் கூறியும் அவன் திருந்தவில்லை எனவே, தன் மகனைப் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அழைத்துச் சென்று தன் மனக்குறையை முறையிட விரும்பினாள்.

நாயகம் (ஸல்) அவர்களின் உபதேசத்தின் மூலம் மகன் திருந்துவான் என அவள் விசுவாசித்தாள். இதனால், மகனை நபிபெருமானாரின் திருச் சமுகத்திற்கு அழைத்துச் சென்றாள்.

'நாயகமே! என் மகன் அளவுக்கு மீதமான இனிப்புப் பண்டங்களை விரும்பிச் சாப்பிடுகின்றான். நான கூறிய புத்திமதிகள் எதுவுமே அவன் மனதிற் பதியவில்லை. தயை கூர்ந்து உங்கள் உபதேசத்தின் மூலம் அவனைத் திருத்துதல் வேண்டும்' என அன்பு கசிந்துருகும் குரலிற் கேட்டுக் கொண்டாள்.

வள்ளல் நபி நாயகம் (ஸல்) அவர்கள் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்தார்கள் பின்னர் அமைதியான குரலில், 'உம்முடைய மகனுக்கு உபயோகமான புத்திமதிகளை நான் கூறுவேன். ஆனால், ஒரு வாரம் கழித்து அவனை அழைத்து வாருங்கள்' எனப் பதிலளித்தார்கள்.

அப் பெண்மணிக்குப் பெருமானாரின் வார்த்தைகள் பெருவியப்பை அளித்தன. இருப்பினும், இறைதூதரிடம் மறு உத்தரம் கேட்க விரும்பினாளல்லள்.

பெருமானாரின் கூற்றுக்கு இணங்க விடேகி, ஒரு வாரம் கழித்து மீண்டும் தன் மகனுடன் வந்தனள்.

அன்று, முஹம்மது நபி (ஸல்) அவர்கள், இனிப்புப் பண்டங்கள் அதிகமாகச் சாப்பிடுவதினால் உண்டாகும் கேடுகளைப் பற்றிச் சிறுவனுக்கு நன்கு விளக்கினார்கள் சிறுவனும் செவி மடுத்துக் கேட்டான்.

அப் பெண்மணிக்குப் பெருமானாரின் செயலும் போக்கும் புரியவில்லை. அதற்கான காரணத்தை அறிய விரும்பினாள்.

'இறைதூதரே! இதே உபதேச மொழிகளை அன்றே அருளியிருக்கலாமல்லவா? ஒரு வாரம் கழித்து, இன்று வரச் சொன்னமைக்கு ஏதாவது விசேட காரணம் உண்டா?' என மிக விநயமுடன் கேட்டாள். தம் வாக்குகளும் வாழ்க்கையும் இணைந்திருப்ப வாழ்ந்து காட்டிய கர்ம வீரரான முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள், பெண்ணே! ஒரு வாரத்திற்கு முன்னர், நீர் உமது மகனுடன் வந்த சமயம் நானே அதிகம் இனிப்புப் பண்டங்கள் உண்ணும் பழக்கத்தையுடையவனாக இருந்தேன். அதனால், உம் மகனுக்கு உபதேசம் செய்யும் தகுதி அன்று எனக்கிருக்கவில்லை. ஆனால், சென்ற ஒருவாரகாலமாக நான் அப் பழக்கத்தை கைவிட்டேன். எனவே, உபதேசிக்கும் தகைமையும் என்பால் சேர்ந்துவிட்டது' என உண்மைக் காரணத்தை முகத்திலே தவழ்ந்த முறுவலுடன் விளக்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்கள்

With the Best Compliments of:-

**A. S. M. ABDUL CADER (COLOMBO) LTD.,**

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS,

**113, OLD MOOR STREET,**
**COLOMBO-12.**

*Phone:* 31486 *Grams:* MUBASHSHIR

**SULTAN'S TRANSPORT SERVICES**

JAFFNA to COLOMBO
COLOMBO to JAFFNA

*Head Office :*
KANDY ROAD,
**CHAVAKACHCHERI**

*Branch Offices :*

31, Old Moor Street,
COLOMBO-12.

64, Manipay Road,
JAFFNA.

# இலட்சியம் எது?

"அண்ணல்"

தத்துவத்தைப் போட்டுப் பிசைந்து வடித்தெடுத்து
முத்திபெறப் பார்த்தேன் முடியவில்லை நித்தனித்தம்
சித்தம் உழுது சேறாக்கி சோதனையாம்
வித்தை விதைத்து நிதானித்து நின்றாலும்
சத்தியத்தின் கால்கள் சறுக்கும் சதுராடிப்
புத்தியற்றுப் போகின்றேன் இப்புவியில் ஆசைக்கால்
தத்தி நடக்குந் தருணத்தில் ஈரிறகும்
எத்திப் பறக்க எழும்பும் அதை இருத்தும்
உத்தி தெரியா துலைவேன் உறுத்தல்களே
சித்தியடையும் சிறுமை தலை தூக்கும்
நத்தி நலத்தை நடுவில் இருத்துதற்குப்
பத்தியங்கள் காத்தேன் பலன்மாறி மாறிஒரு
வித்தை புரியும் வீழுந்தும் எழுந்துமுள
சத்தைச் செலுத்திச் சரிக்கட்டப் பார்த்தாலும்
அத்தனையும் மீறி அலையும் அழுக்ககற்றும்
எத்தனங்கள் தோற்க அவற்றை மறைத்து விட்டுக்
கத்துகிறேன் தூய்மைக் கலைகள் கடைந்தெடுத்து
புத்தம் புதிய உணர்வைப் பெருக்கிவிடுவீர்
சித்தம் நெறிப்படுத்தும் சமயக்கருத்துக்களை
வித்திப் பயிரை வளர்த்து அறுத்தெடுப்பீர்
பித்தம் முறுக்கேறிப் பிதற்றாதீர் என்றெல்லாம்
மாரடித்தேன் என்றன் மயக்கந் தெளியவில்லை
ஊரமைத்துக் கூட்டி ஒருசொல்லில் கேட்கின்றேன்
சீரான வாழ்க்கை சிறக்கத் திருத்தமுறும்
நேரான தெல்லாம் நெறிதானே கத்தியொன்று
கூரான தாயின் குறிக்கோள் நிறைவேற
மீறாது செய்தால் விரும்போமா? குத்துவது
தேராத செய்கை தெளிவு துவக்கெடுத்துப்
போராடல் தானோ பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIJAYA TRADERS

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS,

**84, OLD MOOR STREET,**
**COLOMBO-12.**

T'phone: *31603*

*Dealers in :-*

Country Rice, Samba, Kora & Other Varieties



With the Best Compliments of:-

# A. S. M. ABDUL CADER & CO LTD.

Merchants & Agents; Importers, Exporters & Estate Suppliers

Dealers: **CEYLON PETROLEUM CORPORATION**
Agents: **THE SHELL COMPANY OF (CEYLON) LTD.**
" **CHEMICAL INDUSTRIES (Ceylon) LTD.**

**4, Bazaar Street, Badulla.**

Phone: **304** Grams: **'GRAINS'**

BRANCH:-
**213, OLD MOOR STREET,**
**COLOMBO-12.**


## ?




## கொண்டோடி சுப்பர்

எழுதும் நகைச் சுவைத் தொடர்

மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர், விஞ்ஞானப் புதுமையினுல், ஒளியிலும் பார்க்க வேகமாகப் பிரயாணஞ் செய்தார். திடீரென்று பார்த்த பொழுது, கி. பி. 2147 ஆம் ஆண்டிலே சஞ்சரிப்பதை உணரலானுர். இது கற்பனைக் குறளி என மற்றவர்கள் கூறக்கூடுமாதலால், அவ்வாண்டிலே கிடைத்த தமிழ் நூல் ஒன்றை நமக்குக் கொண்டு வந்திருக்கின்ருர். அதுதான்:

## பந்த நூல் மூலமும்

நச்சாதார்க்குமினியர் உரையும்

இதன் மூலம் நகைச்சுவை இலக்கியத்திலே புதிய திருப்பத்தை அவர் ஏற்படுத்தி வைக்கின்ருர்.

இந்தப் பூவில் பந்த நூலின் பதிப்பாசிரியர்

வெள்ளங்காடு வீ. வியாகேசதேசிகர் அவர்களின் முகவுரை பிரசுரமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பந்தநாதர் துணை

# முகவுரை

இந்து சமுத்திரத்திலே நித்திலத் திலகமாய் விளங்கும் ஈழ வள நாட்டின் தமிழ் கூறும் மூத்த குடிப் பகுதிகளின்1 செழுமை மிகு பண்பினையும் தொன்மைசால் புகழினையும் எடுத்தியம்பும் முப்பெரும் நூல்களுட் தலையாக வைத்துச் சான்றோரால் எண்ணப்படுவது பந்த நூலாகும். இந்நூல் இற்றைக்குப் பத்தாயிரந் திங்கள்களுக்கு முன்னர் இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்பது அத்தானந்தாதிக்குப்2 பாயிரம் யாத்த கபிலவாணரின்3 கருத்தாகும். இந்நூல் 'அப்பே ஆண்டுவ'4 ஆட்சிக் காலத்திற்றோன்றிய 'தமிழியக்கம் — நாற்பது பாட்டு'5 என்னுந் தொகை நூலுக்குப் பிற்பட்ட காலத்தின்றோன்றியிருத்தல் வேண்டு மென்றும்; எனவே, இந்நூல் இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு திங்களளவிலேயே தோன்றியிருத்தல் வேண்டுமென்றும் தெரிவிக்கும் விழலுரையாளர்6 பூதத்தம்பியின்7

---

1. அக்காலத்தில் ஈழநாட்டின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலே தமிழ்மொழி பெரு வழக்காகப் பயிலப்பட்டது என்பது வரலாற்று நூலார் முடிபாகும்.
2. அத்தானந்தாதி, யாழ்ப்பாணத்து மக்கள் மட்டக்களப்பிற் குடியேறிப் பெண் கொண்டு வாழ்ந்த வரலாறைக் கூறுகிறது. யாழ்ப்பாணத்தவர்களை அப் பகுதி மக்கள் 'யாழ்ப்பாணத்தான்' என அழைத்தனர். காலப்போக்கில் 'யாழ்ப்பாணத்தான்' (யாழ்ப்பாணம் + அத்தான்) என்பது அத்தான் எனச் சுருங்கிற்று. இந் நூலாசிரியர் பெயர் ஆர். பாலகிருஷ்ணனார் எனத் தெரிய வருகின்றது.
3. யாழ் நூலுக்குப் பாயிரம் வழங்கிய வெள்ளை வாரணரும், இந்தக் கபிலவாணரும் ஒருசாலை மாணுக்கர் என்பர்.
4. பண்டைய யாழ்ப்பாண இராச்சியத்தின் கோநகராகத் திகழ்ந்த நல்லூரின்கண் அமைந்துள்ள பண்டாரக் குளத்தைக் கட்டுவித்த பண்டாரத்தின் வழித்தோன்றல்கள் பண்டார நாயகங்களென அழைக்கப்படலாயினர். பண்டாரநாயக்கன் ஒருவன் 'அப்பே ஆண்டுவ' ஆட்சியை நிறுவினுன் என்பது 'தார்ச்சட்டி வீரர் மான்மியம்' என்னும் நூலால் அறியக் கிடக்கின்றது.
5. இத்தொகை நூலின் இருபது பாட்டுக்களே தற்காலத்திற் கிட்டியுள்ளன.

   'நாய்க்குணங் கொண்ட நந்தசேனு
   பேய்க்குணங் கொண்ட புஞ்சிநோனு'

   எனச் சந்திவெளிக் கோட்டைச் சுவரிலே காணப்படும் வரிகளும் இத்தொகை நூலில் இடம் பெற்ற பாடலொன்றின் வரிகளென் பாருமுளர்.
6. பல்கலைக் கழகத்தில் விரிவுரைகள் நடத்துபவர்கள் விரிவுரையாளரெனவும், விழலுரைகள் வழங்குபவர்கள் விழலுரையாளரெனவும் அழைக்கப்பட்டனர்.
7. அக் காலத்தில் அங்கொடையம் பதியிலே வித்தியாவிநோதக் கலைக்கழகம் நிறுவப்பட்டிருந்தது. அங்கு பயின்ற இளம் பௌத்த சந்நியாசிகளுக்கு 'பற தெமலோ' என ஏசத் தக்க அளவுக்குத் தமிழறிவூட்டும் பணியில் இவர் ஈடுபட்டிருந்தாரெனத் தெரிய வருகின்றது. வித்தியானந்ததூது, கைலாசபதி உலா, கணபதிக் கலம்பகம் முதலிய நூல்களை இயற்றிய பூதத்தம்பி வேறு; இப் பூதத்தம்பி வேறு என்பர். பூதம் போன்ற பாரிய சரீரங் கொண்டவராதலின் இப் பெயர் ஏற்பட்டது என்பது வித்துவச் சண்டமாருதம் பொன்னனுர் கருத்தாகும்.



குறிப்புரையொன்று நீலாவண புராண பதிப்பிற்8 காணப்படுகிறது. பந்தநூலின் ஆசிரியர் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளுடன் சங்கத் தமிழ்9 வளர்த்த பந்த தூதரே என்பர் ஒரு சாரார். அந்தப் பந்த தூதர் வேறு; இப் பந்த நூலியற்றிய பந்த தூதர் ஒத்த பெயருடையரேனும், பிற்காலத்தவரெனத் துணிவர் பிறிதொரு சாரார். இவர்கள் அக் காலத்தில் ஒன்றிற்குமேற்பட்ட ஔவையார்கள்10 வாழ்ந்ததைச் சுட்டித் தமது கட்சியை நிறுவுவர். எஃது எவ்வாறிருப்பினும், இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையுஞ் சிறந்து விளங்கி, பிரமாண நூல்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது என்பது அறிஞருலகின் ஒரு முகக் கருத்தாகும். பந்த தூதர் என்ற பெயர் எவ்வாறு வழங்கலாயிற்று என்பதைப் பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பந்த நாதருக்கும் பக்தர்களுக்குமிடையில் இவர் தூதாக அமைந்ததனுற் பந்த தூதர் என்ற பெயர் வழங்கலாயிற்று என ஒரு சாராரும், பந்தம் பெறும் பெரு வழக்கைப் பல நாடுகளிலுந் தூது சென்று பரப்பிய தனுல் பந்த தூதர் என்ற பெயரேற்பட்டது எனப் பிறிதொரு சாராரும், 'பந்த துதியர்' என்ற பெயர் தான் காலப் போக்கிற் பந்த தூதரென மருவியதென இன்னுமொரு சாராருங் கருதுவர். இவர்கள் அனைவரும் கர்ண பரம்பரைக் கதைகளையே தத்தம்

---

8. நரியன் குண்டடித் துரும்பர் நீர்த்துறை வாசிகசாலையில், பல்லாண்டுகளுக்கு முன்னர் நீலவண்ணன் புராணப் பதிப்பொன்றினைப் பார்வையிட்டேன். அதுவேறு; இதுவேறு.
9. பண்டைக் காலத்தில் இயல்-இசை-நாடகம் என முத்தமிழ் வழங்கி வந்தது. இடைக்காலத்தில் தந்தைத் தமிழ், சந்தைத் தமிழ் (மண்வாசனை), பந்தத் தமிழ், பங்கத் தமிழ் (இழிசனர்) வழக்கு), சங்கைத் தமிழெனப் பஞ்ச தமிழாக வழங்கலாயிற்று. சங்கைத் தமிழ் என்பது திரிந்து தற்காலத்தில் சங்கத் தமிழென வழங்குகின்றது. பந்தநூல் பந்தத் தமிழில் எழுந்தது என்க. ஆதாரம்:

   "பந்தத் தமிழினைப் பகருங் காலை
   சிந்தை மகிழ்ந்திடச் செந்தமிழ் வல்லோன்
   இபுருகீம் என்பான் இயற்றிய சீர்சால்
   ஒளிமதப் பனுவலைத் தன் பெயர் நிறுத்தித்
   தானே பிரதமத் தலைமையா சானென
   வீணே விளம்பரம் இயற்றிப் பிழைத்த
   கல்லறைக் காவலர் சொல்விழுக் குற்ற
   தா உம்"

   என வரும் 'ஞானரை வென்றான்' பத்தாம் பதிப்பின் பாயிரத் தானறிக. ஈழத்துப் பழந்தமிழ் முஸ்லிம் புலவரான மருதூர் ஆலிமப்பா இயற்றிய ஞானரை வென்றானுக்குப் பாயிரம் யாத்தவர் அவர் மரபினர் புலவர் மார்க்க சீரியர் என்ப.
10. ஜெமினி ஔவையாருக்குப் பின்னரும் பல ஔவையார்கள் தமிழ் சினிமா இரசிகர்களுக்கு அறிமுகமாயிருக்கலாம். ஔவையார் என அழைக்கப்பட்டவர்களுள் ஒருவருடைய பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுக்கு ஆதாரமாகக் காட்டுவர். பந்தம் 11 காரணமாகத் தெரிவித்தலின் இந்நூல் பந்த நூலெனப் பெயர் பெற்றதென்பர். இந்நூலின் சிறப்பினையுட் கொண்டு உரையாசிரியர் பலரும் இந்நூலிலிருந்து மேற்கோள்கள் காட்டியுள்ளனர்.

பந்த நூலுக்குத் தூரத்துவாசி நச்சாதார்க்குமினியர் இயற்றியுள்ள தெளிபொருள் விளக்கவுரை ஒன்றுங் கிட்டியுள்ளது. அவ்வுரையாசிரியர் இயற்பெயரும், அவர் இருந்த விடமும், அவர் காலம், குலம், சமயம் முதலியனவும் ஒரு வாற்ருனும் தெரிந்து கொள்ளப்படவில்லை.

'ஆண்டவன்' என்னுஞ் சொல்லுக்கு இவர் கூறியுள்ள உரையில் இஸ்லாமியர் கருதும் இறைவனின் பரியாய நாமங்களுக்கு அமைந்த பொருள் தோன்றுமாறு கூறியுள்ளமையால் இவரோர் இஸ்லாமியரே

---

சுந்தராம்பாள் என்பதை நிறுவுவதற்குத் தக்க சான்றுகள் அண்மையிற் கிட்டியுள்ளன.

11. அழகு, உண்டை, உறவு, ஏற்பாடு, கட்டு, கயிறு, கை விளக்கு, தளை, திரட்சி, தீக்கொளுத்தும் பந்து, பெருந்துருத்தி, மதில், மயிர்முடி, முடிச்சு, முறை, விலங்கு, மலம், நூலிழை, வத்தி, பாசம் என இருபத்தொரு பொருள்களிலே 'பந்தம்' என்ற பதம் கையாளப்படலாமெனக் கற்றுத் தேர்ந்த பண்டிதர் பலர் மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் நிறுவியுள்ளனர். ஆயினும், பந்த நூல் இயற்றப்பட்ட காலத்தில் 'பந்தம்' என்ற சொல் மேற் போந்த கருத்துக்களிற் பயிலப்படவில்லையெனத் தெரிய வருகிறது. பணத்தின் மீதான பந்த உறவு காரணமாகத் தானும், வேறொரு பந்தத்தின் தளைக்குள் அகப்பட்ட முடிச்சிலே தவிக்கும் வேருருவனும் பரஸ்பரம் நன்மை பெறற் பொருட்டுத் தொடரப்பட்ட ஏற்பாடு அன்றேல் முறைமைதான் பந்தமாகும். பந்தம், கையூட்டு, லஞ்சம், 'ஸம்திங்', ' கட்', 'கொமிஷன்', கொசுறு, 'அல்லச' ஆதியன ஒரு பொருட்கிளவிகளாக வழங்கின. ஏனையன வழக்கழிந்து வீழ, பந்தம் என்னுஞ் சொல்லே பெரு வழக்கிற் பயிலப்படுகின்றது. இன்னென்றும் ஈண்டு கவனத்திற்குரியது.

முத்தெடுக்க மூழ்குகின்ருன் சீலன்,
முன்னலே வந்து நின்ருன் காலன்,
சத்த மின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான், போனுன் முச் சூலன்!

என ஈழந் தந்த பெரும் புலவர் மஹாகவி இயற்றிய குறும்பா கவித்தொகை நூலில் ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. பந்தம் எவ்வளவு இரகசியமாகப் பறிமாறப்படுகின்றது என்பதையும், எவ்வாறு வீரத் தமிழ் மகன் இப் பழக்கத்தினைத் தேவர்களுக்கும் கற்றுத் தந்திருந்தான் என்பதையும் இப்பாடல் அழகுறச் சித்தரித்துக் காட்டுகின்றது. கவிதை இரசனையைப் பரப்புதலையே உயிர் மூச்சாகக் கொண்டுழைத்த இரசிகமணி கனக செந்திநாதன் குறும்பா—கவித் தொகையும், பந்த நூலும் சம காலத்திலெழுந்த நூலெனக் கூறும் கருத்தொன்று 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' (மூன்ரும் பதிப்பு) என்னும் நூலிற் காணப்படுகின்றது. மேலும், பந்த நூல் இயற்றப்பட்ட காலத்தில் ஆசிரியப்பா, விருத்தப்பா, கலிப்பா, வெண்பா, குறும்பா ஆகிய ஐவகைப் பாக்கள் வழங்கி வந்தன என்பதும் இவற்ருல் நிறுவப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ருர் கணக்காயர் ஷம்ஸுத்தீன் 12. இஃதொன்றே காரணமாகக் கொண்டு, இவர்தம் சமயம் இஃதெனக் கொள்ளுதல் பொருத்தமாய்த் தோன்றவில்லை. ஏனெனில், அடியார்க்கு நல்லார் 'குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த குடக்கோச் சேரல் இளங்கோவடிகள்' என்னுந் தொடரில் வரும் 'கோட்டம்' என்னுஞ் சொல்லுக்கு 'அருகன் கோயில்' எனப் பொருள் கொண்டு இளங்கோவடிகளின் சமயம் சமணம் எனக் கொண்டார். ஆயின், நாவலர் வேங்கடசாமி நாட்டாரோ13 'கோட்டம்' என்பது பல கடவுளர் உறையுமிடங்களுக்கும் பெயராய் வருமென்றும், அங்ஙனமே 'அடிகள்' என்பதும் இறைவனுக்கும் அவனடியவர்களுக்கும் வழங்கும் பொதுப் பெயரென்றுங் கூறி அவர் சமயம் சமணம் என்பதை மறுத்துள்ளார். மேலும், நாவலர் நாட்டார் இளங்கோவடிகளின் அண்ணன் செங்குட்டுவன் சைவனுதலின் தம்பியாருஞ் சைவரே எனக் கொண்டும், சிவபெருமானை அவர் பாராட்டிப் பாடியுள்ளமை இதற்குச் சான்ருகும் என்றுந் துணிவர். திலகவதியார் சைவராகவும் அவர் தம்பி மருணீக்கியார் சமணராய் வாழ்ந்தாரெனவும்14 பாண்டியன் சமணனுகவும் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவ நன்னெறியராய்15 வாழ்ந்தவரெனவும் அறியப்படுதலால், அண்ணன் சைவன் ஆதலின் தம்பியாருஞ் சைவர் என்பது போதிய ஆதாரமற்ற வெற்றுரையாயது. இதனுல், இளங்கோவடிகளின் சமயம் இன்னதென்று அறிதல் பெருங் குழப்பத்தில் முடிந்து இலக்கிய ஆய்வாளரை இரு வேறு முகாம்களிற்றங்கச் செய்துள்ளமை எவருமறிந்த உண்மை. எனவே, ஆசிரியர் நச்சாதார்க்குமினியரின் சமயம் இன்னதெனத் துணிதலுக்கு மேலும் ஆராய்ச்சிகள் நிகழ்த்துதல் அவசியமாகும். அவ்வுரையாசிரியர்,

'பாரத்தொல்காப்பியமும் பத்துப்பாட்டுங்கலியும்
ஆரக்குறுந்தொகையுளைஞ்ஞான்கும் — சாரத்
திருத்தகுமாமுனிசெய்சிந்தாமணியும்
விருத்திநச்சினர்க்கினியமே'

எனும் வெண்பாவிற் புகழப்படும் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் 16 பரம்பரை எனத் தம்மைக் குறிப்பதால், அவர் நச்சினர்க்கினியருக்குக் காலத்தாற் 17 பிந்தியவர் என்பது தெளிவாம்.

---

12. 'அவ்ராது' தொகுத்தும், 'திக்கை வணங்கும் துலுக்கர்' என மஹாகவி பாரதியார் (சுப்பிரமணியம்) இயற்றிய பாடலிலுள்ள வழுக்களை எடுத்து நிலை நாட்டியும், ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் தமிழ்த் தொண்டுமாற்றிய கணக்காளர் அல்ஹாஜ் ஷம்ஸுத்தீன் வேறு, இவர் வேறு. இவர் மக்கத்தார் மரபினர் அட்டாளையூரர் எனவும், நக்கீரர் தந்தை கணக்காயனுர் போலக் கற்பித்தற்ருெழிலை மேற்கொண்டோரெனவும் அறியப்படுகின்றது. ஆதாரம்: இலக்கியத் தேன்மழை.

13. சிலப்பதிகார உரையாசிரியர் ந. மு. வெங்கடசாமி நாட்டார்.

14. பெரிய புராணம் — திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்.

15. பெரிய புராணம் — திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம்.

16. இவர் 'உச்சிமேற் புலவர் கொள் நச்சினர்க்கினியர்' எனவுஞ் சிறப்பிக்கப்பட்டார்.

17. நச்சினர்க்கினியர் இற்றைக்கு ஆருயிரந் திங்கள்களுக்கு முன்னர் வாழ்ந்தார் என்பது நிறுவப்பட்டுள்ளது.

(தொடரும்)

இலங்கை விளைபொருள்
விற்பனையாளர்கள்.

திறமான சம்பா — கோரா மற்றும்
அரிசி வகைகள் சகாய விலையில்
கிடைக்குமிடம்.

**E. SITTAMPALAM & CO.,**

**25, OLD MOOR STREET,**
**COLOMBO-12.**

*T' Phone:* **32813**

---

T. Grams: **SRIDHARAN**
*Extension to Import Dept. No: 1.* T. P. **33863.**

# P. K. PARAMANATHAN & Co.,

Prop: **P. K. Paramanathan.**

*• GENERAL MERCHANTS, COMMISSION AGENTS*
*EXPORTERS & IMPORTERS & ESTATE*
*SUPPLIERS.*

**109, Old Moor Street,**
**COLOMBO-12.**

**Branches:**

**The Zuincrs Corporation**
109, Old Moor Street,
COLOMBO-12.

**P. K. Paramanathan**
**Pawn Broker**
236, K. K. S. Road,
JAFFNA.

---

# மீலாத் வாழ்த்துக்கள்

சிவபாலன் பீடி கம்பெனி

83, மெசஞ்சர் வீதி,
கொழும்பு-12.

தொலை பேசி: 31929 - அலுவலகம்; 83783 - இல்லம்

---

Importers & Dealers in:

METHYLATED SPRITS,
CORN FLOUR,
VIROL,
BOURIL,
TURPENTINE &
STOCKISTS OF
EMPTY TINS — 4 GLN
" " — 1 "
LOZENGER TINS — 7 LBS.
" " — 8 LBS,
TOFFEE TINS — 5 LBS.
BAKING POWDER TINS

AVAILABLE AT:

# GOLDEN AGENCY

66, OLD MOOR STREET,
COLOMBO-12.

*T. Phone:* **32350**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரகர் தம்பையா

தரகர் தம்பையா: (குரலெடுத்துப் பாடியவாறு வருகின்றார்)
'ஆசைக் கோர் அளவில்லை, அகிலமெல்லாம் கட்டி
ஆளினும், கடல்மீதிலே ஆணை செய்ய நினைப்பார்...'

**சேர்மன் செல்லத்துரை:** தம்பையா அண்ணரே! வாருங்கோ, வாருங்கோ... தரகர் மட்டக்களப்பை மறந்திட்டார் எண்டலுவா நாங்கள் கதைச்ச... பிறையைக் காணுறதுபோல தான் தரகரைக் காண வேண்டியிரிக்கி...



த. த: ஊரிலையும் தலை புழுத்த வேலை கேட்டியளோ அது சரி, தம்பி சேர்மன் ஆயிட்டார் எண்டு கேள்விப்பட்டனான். அது தான் பாத்திட்டுப் போகலா மெண்டு பொதுவேலை எண்டால் உப்பிடித்தான். திடீரெண்டு சேர்மன் ஆக்கி வைச்சாலும் வைப்பாங்கள்; நாளைக்கே கதிரைக்குக் கீழாலை குழி வெட்டினாலும் வெட்டுவாங் கள். வலு கவனமாய் இருக்க வேணும்.

சே. செ: ஓம், அண்ணன் சொலுற உண் மைதான். பொது வேலை எண்டு இறங் கீட்டா அப்படியும்தான்; இப்படியும் தான்...

த. த: அதிலும் கண்டியளோ, தம்பி உங்கடை பொது வேலைக் கும் என்ரை பொது வேலைக்கும் வித்தியாசம் இருக்குது இப்ப நீர் சேர்மன்... உங்கடை காரிலை போய் ஒருத்தருக்கு ஒரு வேலையை முடிச்சுக் குடுக்கிறீர் எண்டு வைச்சுக் கொள்ளும் பச்சைத் தண்ணீரிலையே கார் ஓடுது? உதுக்காக ஒரு பத்து ரூபா கைநீட்டி வாங்கினாலும், லஞ்சம் வாங்கினான் எண்டு மானத்தை வாங்கிப் போடுவாங்கள். நானும் செய்யிறது பொதுவேலைதான் ஆனால், தரகுக்கு அச்சவாரம் முதலிலை வாங்கிக் கொண்டுதான் வேலையைச் செய்யத் துடங்குவன். இஞ்சை கண்டியளோ, இந்த லஞ்சக் கொமிஷன் என்னைப் புடுங்கட்டும் பாப்பம்— உண்மை னைச் சொல்லுங்கோ தம்பி, எங்கடை தரகுத் தொண்டு கொஞ் சமே? எத்தினை குமர் குஞ்சுகளைக் கரை சேர்க்கிறம் ? வாக்குக் கண் பொட்டையளையும், கூன் முதுகுப் பொடிச்சியளையும் மேக் கப் கூடப் போடாமல் ஒப்தேப்பதிப் போடுவம் நாங்கள் எங் கடை வாய்க்கட்டுப் பலத்தாலை 'பியோன்' பொடியனைக் கிளாக்க ராகவும், கிளரக்கரை ஆபிஸராகவும் ஆக்கிப் போடுவம் சேர்மன், உங்களாலை முடியுமோ? .. அதுக்குத்தான் நான் சொல்லி வாறன். இந்த ஓல் சிலோனிலையும் உள்ள தரகர்மாருக்கெல்லாம் முதலில் ஜே. பீ. பட்டம் குடுக்க வேணும்.



"அல்லாஹ் உங்கள் வெளிக்கோலத்தையும், உங்கள் செல்வத்தை யும் பார்ப்பதேயில்லை; ஆனால், உங்கள் இதயங்களையும் உங்கள் செயல்களையும்தான் பார்க்கின்றான்.

—நபி மொழி

சே. செ: தரகர் சொல்லிறதிலையும் நியாயம் இரிக்கி. நாங்கள் ஏதாவது பொதுத் தொண்டு செய்தால், மச்சான்ர ஒழுங்கைக்குக் கிறவல் போடுறான்: மாமன் வீட்டுக்கு 'லையிட்' போடுறான் எண்டு பஸ் ஸ்ராண்டுகற் வழியையும், பாலத்துக் கம்பிகள் வழியவும் நிண்டு பேசுறவனுகளுக்குக் குறைவில்ல

த. த: அதுதான் தம்பி சொல்ல வந்தனான். எற்லாம் அறிஞ்ச சக்கிட்த்தார் குதிரையிலை இருந்து சறுக்கி விழுந்ததைப்போலை விழுந்திடாமல் பார்த்துக் கொள்ளும்.

சே. செ: ஏதாவது தண்ணி வெற்றி

த. த: வேண்டாம், சேர்மன். பேந்து உதுகளைக் குடுத்துச் சேர்மன் தரகரைப் பந்தம் பிடிக்கிறான் எண்டும் கதைப்பாங்கள் வாறன் இல்லை. ஒருக்கா, இளம்பிறை ஆசிரியரையும் சந் திக்க வேணும். போன வரியம் ஆடி மாசம் சந்தித்ததுக்கு ஆள், கோவிச்சாலும் கோவிக்கும். போய்ப் பாத்திட்டு வாறன்.

—ஆர். பாலகிருஷ்ணன்.

**SEYED MOHAMED & CO.,**
**JEWELLERS**

DEALERS IN GOLD AND SILVER
BULLIONS & GOLDSMITH'S TOOLS
ELECTROPLATING &
POLISHING MATERIALS

**195, Main Street,**
**COLOMBO-11.**

TELE { Phone : 29214
grams : "POONACHENA"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக கதை:

ஜனாப் சுலைமான் அவர்கள் இலக்கியத் திளைப்புள்ளவர். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக 'முஸ்லிம் முர'சில் 'பழமொழி ஆயிரம்' என்ற பகுதியை எழுதி முஸ்லிம் வாசகர்களுக்கு அறிமுகமானவர். 'ஈஸப்பின் கட்டுக் கதைக'ளைப் போல நீதி நெறி புகட்டும் கதைகளை எழுதுவதில் ஆர்வமுள்ளவர். இவருடைய ஆசை காரிய சாதனையாகும் என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக 'கழுதையின் மதிப்பு' என்னும் இந்த உருவகக் கதை விளங்குகின்றது.

அந்த அலுமாரியிலே அழகு மிகுந்த அபூர்வப் பொருள்கள் பல,சீராக அடுக்கப்பட்டிருந்தன, பளிங்குக் கற்கள், பீங்கான், பித்தளை ஆகியவற்றிலே செய்யப்பட்ட பொம்மைகளும் அவற்றுள் அடங்கும். வெகு இயற்கையான அமைப்பில் சிங்கம், புலி, யானை, வண்ண வண்ணப் பறவைகள் எனப் பல.

அவற்றின் மத்தியிலே கழுதை ஒன்று கம்பீரமாகக் கொலு வீற்றிருந்தது. அதை யார் அங்கே நடுநாயகமாக வைத்தார்கள் என்பது வரலாற்று நிகழ்ச்சி. அதனைத் துலக்கமாக அறிந்தவர்கள் இலர்.

# கழுதையின் மதிப்பு!

எஸ். ஏ. சுலைமான் M.A.

அந்த அலுமாரியைப் பார்த்தவர்கள் யாவரும் அந்தக் கழுதையின் பால் ஈர்க்கப்பட்டார்கள். அதனைக் கையிலெடுத்து 'ஆகா என்ன அழகு! என்ன வேலைப்பாடு! எத்தகைய பளபளப்பு என்ன எடை! எத்தகைய மதிப்பு!' என்று வாயாரப் பாராட்டினார்கள்.

இந்தப் பாராட்டுரைகளைக் கேட்கும் பொழுது, அலுமாரிக்குள்ளிருந்த ஏனைய மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் மனக் குறை இருந்தது. கழுதைக்கு ஏற்பட்டுள்ள இந்த தனித்துவ மதிப்பு அவற்றை மானபங்க உணர்விற்குள் உள்ளாக்கித் துயருறச் செய்தன.



'எல்லோரும் அந்தக் கழுதையைத்தானா பாராட்ட வேண்டும்? நான் வன விலங்குகளுள் ராஜன். என் வீரத்தைப் பற்றி ஒரு வார்த்தையாவது பாராட்டிச் சொல்லக் கூடாதா?' எனச் சிங்கம் கறுவிக் கொண்டது.

'உடற் பலத்தினதும், சேவையினதும் உருவம் நான்' என யானை தன் பெருமை பிளிறிற்று.

'சுதந்திரமாய்ப் பறந்து, மனித குலத்தை மகிழ்விக்கும் வகையில் இறைபுகழை இன்னிசை பாடித் துதிக்கும் எங்களுக்கில்லாத மதிப்பு இந்தக் கழுதைக்கா?' என்று பறவைகளின் மனக் குறைக்கு வானம்பாடி சொல்லுருவம் கொடுத்தது.

'ஏனிந்தப் பொறாமை உங்களுக்கு? என்னிலே ஏதோ அமானுஷ சக்தியைத் தரிசித்து மகிழ்கிறார்கள் என்று கொண்டாடுவது தானே? எனக்குக் கிடைக்கும் மரியாதை விலங்கினத்திற்குக் கிடைக்கும் மரியாதை எனப் பாராட்டக் கூடாதா?' — கழுதை நயமாகப் பேசினாலும்,' அதனுடைய குரலின் தொனி ஏனையவற்றை ஏளனம் செய்வதாகவே அமைந்தது.

அப்பொழுது வீட்டின் ஏஜமானரும், கல்விமான் ஒருவரும் அறைக்குள் நுழைந்ததும் அறைக்குள்ளிருந்த பொம்மைகள் எல்லாம் மௌனம் சாதிக்கலாயின.

'அதோ, தெரிகின்றதே அந்தக் கழுதை, அதுதான்! அது எப்படித்தான் இங்கு வந்தது என்பதை அறியமாட்டேன்; அது முதுசொம்மாகக் கிடைத்தது என்பது மட்டும் தெரியும். போயும், போயும் ஏன் கழுதையின் உருவத்தைத் தங்கத்திலே செய்து வைத்தார்கள் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை' என்றார் ஏஜமானர் சற்றே விசாரத்துடன்.

கல்விமான் சிறிது நேரம் யோசித்தார் பின்னர், 'பணத்திற்கு எங்கும், எப்பொழுதும், எந்த உருவத்திலும் மதிப்புண்டு என்பதைச் சுட்டிக் காட்டவோ, அன்றேல், மக்கள் குணத்தை மதிக்காமல், பணத்தைத்தான் மதிக்கிறார்கள் என்பதைத் தொட்டுக் காட்டவோ, ஒரு கல்விமானின் ஆலோசனையின் பேரிலே இது தங்கத்தினாலே செய்யப்பட்டிருக்கலாம்' என்று விளக்கம் கூறினார்.

'இருக்கலாம். ஆனால், இதன்மீது எல்லோரும் புகழ் பாராட்டுவதனால், என் மகன் 'மிருகங்களிலே மிகவும் சிறந்த பிராணி கழுதை' என்று சொல்லித் திரிகின்றான். இதனால், அவனுடைய உளவளர்ச்சி பாதிக்கப்படுகின்றது ..' என்றார் ஏஜமானர்.

'அதனாலென்ன? ஒரு தலைமுறையினரின் உளப்பாங்கினை வளர்க்க உதவிய ஒன்று, இன்னொரு தலைமுறையினருக்கு உதவுவதில்லை. வேண்டுமானால், கழுதையை உருக்கி விடலாம். உருக்கினாலும், தங்கத்தின் மதிப்புத் தங்கத்தின் மதிப்பாகத்தானே இருக்கும்' என்றார் கல்விமான்.

தனக்குத் தரப்பட்ட மதிப்பு, தன் உருவத்திற்கு அப்பாற்பட்டது என்ற உண்மை அப்பொழுதுதான் கழுதைக்கு உறைக்கலாயிற்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For All

Ceylon Produces

RAHMAN PRODUCE STORES,

22 - 26, Old Moor Street,
Colombo-12.

Phone: 32146

For Rice, Poultry Food
and Manure

Visit

P. R. M. COMPANY

112, DAM Street,
Colombo-12.

T. Phone: 20487



## நன்றி

நபி கதை: நான்கு

இறுதி இறை தூதராம் நபி நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் தமது இஸ்லாமிய பிரசாரத்தை ஆரம்பித்ததும் பல பகுதியிலிருந்தும் அவர்களுக்கு எதிர்ப்புகள் கிளர்ந்தெழுந்தன.

கவிஞர்கள் கவிதைகள் யாத்து எதிர்ப்பிரசாரம் செய்தார்கள்; தலைவர்கள் தமது செல்வாக்கை உபயோகித்து மக்களை எதிராகத் தூண்டினார்கள். வீரர்கள் எதிர்த்தார்கள். இத்தனைக்கும் மத்தியிலும் அல்லாஹ்வின் மீதுள்ள உறுதியான நம்பிக்கை வழி நடத்த பெருமானார் தமது பணியை இயற்றி வந்தார்கள். இறை நம்பிக்கை பெருமானாருக்கு எவ்வாறு அரிய மற உணர்வையும் ஊட்டிற்று என்பதற்கு இஸ்லாமிய வரலாற்றிலிருந்து இரண்டு அதியுன்னத நிகழ்ச்சிகளைக் கூறலாம்.

ஒருநாள். மக்கமா நகருக்கு அணித்தாகவுள்ள மலையடிவாரமாக நபிகள் நாயகம் (ஸல்) சென்று கொண்டிருந்தார்கள்.

ருக்கானா பிரசித்திபெற்ற மல்யுத்த வீரன்; தன்னுடன் மல்யுத்தம் புரிந்து வெற்றி காணத் தக்கவன் அராபியா தேசம் முழுவதுங் கிடையாது என்ற செருக்கும், மமதையுங் கொண்டவன். யாருக்கும் அஞ்சாத அவன், இஸ்லாமியப் பிரசாரத்தை அலட்சியப் படுத்தி வந்தான்.

அவனைக் கண்டதும், 'ருக்கானா! உனக்கு இறைவன் மீது அச்சம் இல்லையா? என் தூதை ஏற்று, நான் பிரசாரஞ் செய்யும் மார்க்கத்தை நீ ஏன் விசுவாசிக்கக் கூடாது?' என்று கேட்டார்கள்.

'நீர் கூறுவது உண்மை என்பதற்கு என்ன ஆதாரம்? அதனைக் காட்டுவீரா?' என ருக்கானா அலட்சியமாகக் கேட்டான்.

'நீ சிறந்த மல்யுத்த வீரன்; அதிலே மிகுந்த பயிற்சி பெற்றவன். அப்படிப்பட்ட உன்னை நான் மல்யுத்தத்திலே தோற்கடித்தால் என் தூதை நம்புவாயா?' என்று பெருமானார் கேட்டார்கள். கள்.

'என்னை உம்மால் மல்யுத்தத்தில் தோற்கடிக்க முடியுமானால், நிச்சயமாக உமது தூதை நான் உண்மையென்று நம்பத் தயாராக இருக்கின்றேன்' என்று கூறி அட்டகாசமாகச் சிரித்தான். அக்கணமே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மல்யுத்தம் புரிவதற்குத் தயாரானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின்

| புடவைத் தேவைகளை பூர்த்தி செய்பவர்கள் | தங்க நகை தேவைகளுக்கு | விசேஷ கால புடைவைத் தினிசுகளை எப்பொழுதும் இருப்பு வைத்திருப்போர் |
|---|---|---|
| சிங்காரம்ஸ் | டைமா | சுபைதாஸ் |
| 47, செட்டியார் தெரு, கொழும்பு-11 போன்: 20875 | நகை மாளிகைக்கு விஜயம் செய்யுங்கள் 89, செட்டியார் தெரு, கொழும்பு-11 | 139, செட்டியார் தெரு, கொழும்பு-11 |

மனோரம்மியமான பல புதிய

டிசைன்களை உருவாக்கி

புதுமைகள் பல புரிந்து வரும்

என்றும் மறக்கமுடியாத நிறுவனம்

# ஏ. கே. கோல்ட் ஹவுஸ்,

56 - 58, செட்டியார் தெரு,

கொழும்பு-11

தொலைபேசி: 25384 (Ext. 3 Lines)




பெருமானார் (ஸல்) சாந்தி நெறியாளர்; பொறுமையின் பெட்டகம்; எளிமையின் பேருருவம்! அத்தகைய ஏந்தலைக் கோபாவேசத்தோடு ருக்கானா தாக்கத் தயாரானான். முதலாவது தாக்குதலிலேயே பெருமானார் லாவமாகத் தப்பி ருக்கானாவை ஒரே மூச்சிற் குப்புறத் தள்ளிவிட்டார்கள். அந்த ஆரம்பத் தோல்வி ருக்கானாவின் ஆத்திரத்தை வளர்க்கவே உதவியது. தன் உடற் பலம் முழுவதையும் திரட்டி மீண்டும் தாக்கினான். அப்பொழுதும், குப்புற விழுந்து தோல்வியே கண்டான். மூன்றாம் முறை முனைந்தும் ருக்கானாவிற்குத் தோல்வியே கிட்டிற்று!

இந்தப் படுதோல்வியை அவன் எதிர்ப்பார்க்கவேயில்லை; தன்னிலும் பார்க்க விழுமிய மறத்தை நபி பிரானுக்கு இறை நம்பிக்கையே அளித்தது என்பதைச் சந்தேகத்திற் கிடமின்றித் தெளிந்து அவர்களுடைய தூதை உண்மையென ஏற்றுக் கொண்டான்.

பெருமானாரின் விழுமிய மறமாண்பு, பின்னொருமுறை மதீனமா நகரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் மிளிர்ந்தது.

போர் புரிவதற்குப் படைகளுடன் சென்றுகொண்டிருந்த பெருமானார் அவர்கள் இளைப்பாறுவதற்காகத் தண்டிறங்கியிருந்தார்கள். அப்பொழுது, பெருமானார் தன்னந்தனியாக ஒரு மரத்தடிக்கு வந்து தூங்கினார்கள்.

அயர்ந்த தூக்கத்தினூடே அரவங் கேட்டுத் திடீரெனக் கண் விழித்துப் பார்த்தார்கள். அவர்களுக்கு முன்னால் உருவிய வாளுங் கையுமாக ஒரு காட்டரபி அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தான். எதிரியை மடக்கிவிட்டதான ஏமாப்பு மீதூர, "முஹம்மதே! இப்பொழுது உம்மைக் காப்பாற்றப் போகிறவர் யார்?" என்று அலட்சியமாகக் கேட்டான்.

அப்பொழுது, முஹம்மது நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் ஒருவனே!' என அழுத்தந் திருத்தமாகக் கூறினார்கள்.

அச்சமூட்டவல்ல வல்லாண்மை மிக்க அக்குரலின் உறுதி காட்டரபியை நிலைகுலையச் செய்தது. தன்னந்தனியாக எதிரியாக தன்னிடம் நிராயுதபணியாக அகப்பட்டும் பெருமானார் (ஸல்) அளித்த அந்த பதில் அவன் அகத்திலே பயத்தை ஊட்டியது. அவனையும் அறியாது அவனுடைய வாள் நிலத்தில் விழுந்தது. விழுந்த வாள் மின்னல் சொடுக்கி மறையும் நேரத்திற்கிடையில் பெருமானாரின் கரங்களுக்கு லாவகமாக மாறியது.

'இப்பொழுது உம்மைக் காப்பாற்றுபவர் யார்?' என்று அமைதியாகப் பெருமானார் கேட்டார்கள்.

'தங்களைத் தவிர வேறு யாருமில்லை' என்று காட்டரபி அனுதையைப் போல பதிலளித்தான்.

அப்பொழுது, இறைவனே நம்மனைவரையும் காத்து இரட்சிப்பவன் என்பதை விளக்கி, சாந்தி மார்க்கத்தின் உன்னதக் கொள்கைகளையும் உபதேசித்தார்கள்.

துஃதூர் என்ற நாமமுடைய அந்தக் காட்டரபியும் பெருமானாரின் தூதை ஏற்றுக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ்ப்பட வரலாற்றிலே
ஒரு பொன்னேடு ஆரம்பமாகிறது

பல வெற்றிப் படங்களை அளித்த

**எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்**

ஜெஸீமா (கொழும்பு)
ராஜா (யாழ்ப்பாணம்)

மற்றும் பல திரைகளில்
விரைவில் அளிக்கவிருக்கிறார்கள்

**கலா பவன பிலிம்ஸாரின்**

**நிர்மலா**

தயாரிப்பு: ஏ. ரகுநாதன்
டைரக்ஷன்: எஸ். அருமைநாயகம்



# அஞ்ஞானம்

நபி கதை: ஐந்து

சத்தியம் தவறாத அறமும், வீரம் வைரம் பெற்றிருக்கும் மறமும் இருவரிடத்திலேயே மிளர்ந்து விளங்குதல் மிகவும் அபூர்வமானதாகும். அபூர்வத்திலும் அபூர்வமாக விளங்கின முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அருங்குணங்கள்.

நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் எவ்வாறு அறம் ஓம்பிய செம்மலாகத் திகழ்ந்தார்களோ, அவ்வாறே மகாதீர புருஷராகவும் திகழ்ந்தார்கள். பகைவரைக் கண்டு அவர்கள் பயந்ததுமில்லை; அச்சத்திலே மனங் குன்றியதுமில்லை.

ஒரு நாள். அக்காலத்தில், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோரை மக்க மாநகரில் காண்பது அரிதாயிருந்தது. பெருமானாரும் ஓரிரு நெருங்கிய சஹாபாக்களுமே மக்காவில் தங்கினர். காபிர்களான அரபிகளே அன்றைய மக்கமா நகரிலே பெருந்தொகையினராக வாழ்ந்தார்கள். அவர்கள் கொலைவெறி பிடித்தவர்களாக இறுதி இறை தூதராம் எம்பெருமானார் (ஸல்) அவர்களையும், அவர் தூதினை ஏற்றுக் கொண்ட இஸ்லாமியர்களையும் தேடி அலைந்தார்கள்.

மக்கமா நகரம் பயங்கர நிசப்தத்தில் மூழ்கியிருந்தது. மக்கத்துக் குறைஷியரும் இஸ்லாத்தைப் போதிப்பதற்காக றசூலே கரீம் நபி (ஸல்) அவர்கள் மீது மிக பகைமை பாராட்டினார்கள். சூழ்ச்சி ஏதேனும் இயற்றியாயினும் பெருமானாரின் உயிருக்கு உலை வைத்து விடல் வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இவ்வாறு இஸ்லாத்தை, ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களுக்கு எதிராகவும், தனக்கு எதிராகவும் சதியாலோசனைகள் நடைபெற்று வருவதை நபிகள் திலகம் அறிந்தார்கள் இதனால், பாதுகாப்பின் நிமித்தமாக முஸ்லிம்கள் எல்லோரையும் திருமதீனா நகருக்கு அனுப்பி வைத்தார்கள். தாம் மட்டும் தனியாக மக்கமா நகரிலே தங்கி விட்டார்கள். அல்லாஹ்வின் அழைப்புக்கிட்டும் வரை மக்கமா நகரை விட்டுப் புறப்படுவதில்லை என்ற உறுதியுடன் இருந்தார்கள். அல்லும் பகலும் மக்கா நகர வீதிகளில் அச்சஞ் சிறிதுமின்றிப் பகிரங்கமாகத் திரிந்தார்கள். இறுதி நேரத்திலே தான் தமது தூதின் புனித நோக்கத்தினை காப்பாற்றும் முகமாகப் பாதுகாப்பினை நாடினார்கள்.

இறைவனின் ஆணை வந்தது. உயிர்த்தோழராம் அபூபக்கர் (ரலி) அவர்களோடு மக்காவிலிருந்து மதீனா நோக்கி 'யாத்திரை' செய்தார்கள். இதுவே, ஹிஜ்ரத் என்று அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[முஸ்லிம் மக்கள் தங்களுடைய ஆண்டுக்கணக்கை இந்த யாத்திரை (ஹிஜ்ரத்) யுடன்தான் கணிக்கத் தொடங்கினார்கள் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. எனவே, இந் நிகழ்ச்சி எத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை ஊகித்துணரலாம்.] பெருமானாரும் ஹஸ்ரத் அபூபக்கரும் செல்லும் வழியில் தௌர் குகையுள் தங்கியிருக்க நேர்ந்தது. குகைக்கு வெளியே போர் வீரர்களுடைய நடமாட்ட அரவம் கேட்டது.

'நாம் இருவர் மட்டுமே குகையில் இருக்கின்றோம். பகைவர்கள் நம்மைக் காண்பார்களேயானால் தப்ப முடியாது.' என்ற எண்ணத்துடன் அபூபக்கர் (ரலி) அவர்கள் மிகுந்த திகில் அடைந்தார்கள். அந் நேரத்திலேகூட நபி பெருமானார் (ஸல்) முறுவல் பூத்தார்கள். யா! அபூ பக்கரிப்னு ஸித்தீக் அஞ்ச வேண்டாம். நாம் இருவர்மட்டுமல்ல, நம்முடன் அல்லாஹ்வும் இருக்கின்றான்' என்று அமைதியாகவும், திட நம்பிக்கையுடனும் கூறினார்கள்.

நபி பெருமானாரும், அவர் தோழரும் அக் குகைக்குட் சென்ற பின்னர், குகையின் வாசலிலே சிலந்திவலை பின்னி இருந்தது. புறாக்கள் முட்டைகள் இட்டு இருந்தன. இதனைப் பார்த்த பகைப்போர் வீரர்கள் இந்தக் குகையில் யாரும் இருக்க முடியாது என்ற எண்ணத்தில் குகைக்குள் நுழைந்து சோதனையிட மனமற்றவர்களாகத் திரும்பி விட்டார்கள்.

பெருமானார் முஹம்மது முஸ்தபா (ஸல் அவர்களிடங் காணப்பட்ட சத்திய வீரத்திற்கு, இறை நம்பிக்கையே காரணம் என்பதை இந் நிகழ்ச்சி நிறுவுகின்றது.

பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களின் வீரத்தைக் குறித்து நாயகத் தோழர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வருமாறு குறிப்பிட்டார்கள்;

பத்று யுத்தகளத்திலே மிகுந்த ஆபத்துக் காணப்பட்டது. நாங்கள் நாயகம் அவர்களுக்குப் பின்னாற் புகலிடந் தேடிக்கொண்டோம், ஏனெனில், அக்களத்திலே நாயகம் அவர்களைப் போன்ற பராக்கிரமசாலி வேறெவரு மிலர். மேலும், அவர்களைப்போன்று பகைவர்களிருக்கும் இடங்களுக்கு மிக அண்மையிற் செல்லக் கூடிய அஞ்சா நெஞ்சினரும் வேறெவரு மிலர்.

---

இடநெருக்கடி காரணமகா தேர் - சிறுகதை அடுத்த பூவிற் பிரசுரமாகும்

தமிழ் முஸ்லிம்களின் பாரம்பரியம்' என்ற தலைப்பில் ஹாபிஸ் எம். கே. செய்யிது அஹமது அவர்கள் எழுதி வந்த தொடர் இந்தப் பூவுடன் நிறைவுறுகிறது.

---



# நன்றி

நபி கதை: ஆறு

நபி பெருமானார் (ஸல்) அவர்கள், தமக்கு யாராவது சிறு உபகாரஞ்செய்தாலும், அதனை மறக்கமாட்டார்கள். நன்றியோடு உதவி புரிந்தவரின் உறவினருக்கும், வேண்டியவருக்கும் கூட உதவுவதில் பெருவிருப்புடையவர்கள்.

தமது பிரியநாயகி கதீஜா (ரலி) உயிர் வாழ்ந்த காலத்தில் பல பெண்களைப் பிரியமாக நடத்தியிருக்கின்றார்கள். பெருமானாரோ கதீஜாநாயகி (ரலி) இறந்த பின்னரும் தமக்குக் கிடைக்கும் நல்ல பொருள்களை, இன்னின்ன பெண்களுக்குப் பகிர்ந்து கொடுங்கள். இவர்களை என் பிராட்டி கதீஜா அன்புடன் நடத்தினார், என்று கூறுவார்கள்.

ஹுனைன் போர்க்களம்.. எங்கும் ஆரவாரம். யுத்தமுஸ்தீபுகளில் எல்லோம் ஈடுபட்டுள்ளார்கள். அப்பொழுது அங்கு வந்திருந்த ஒரு பெண் நபிகள் திலகம் (ஸல்) அவர்களுக்கு அறிமுகமாகிறார். அவர் பெயர் ஷைமா. அவரைக் கண்டதும் பெருமானார் தமது விரிப்பை அவருக்குக் கொடுத்து உபசாரச் செய்தார்கள். அப்பெண் மணியுடன் அதிக நேரம் இஷ்டமுடனிருந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்ணுற்ற நாயகத் தோழர்களுக்கு ஆச்சரிய மேற்பட்டது. 'நெருக்கடியான ஒரு நேரத்தில்-அதுவும் யுத்த களத்தில், பெருமானார் (ஸல்) ஒரு பெண்ணுக்குத் தன்விரிப்பையே ஈந்து, முகங் கோணாது, நேரத்தை வேறு செலவிட்டுக் கொண்டிருக்கின்றார்களே! இப்பெண் யாராக இருக்கலாம்' என அறிய விரும்பினார்கள்.

பெருமானாரின் செவிலித் தாயாரான ஹலீமாவின் புதல்வி ஷைமாவே அப்பெண் என்பதைப் பின்னர் அறிந்து கொண்டார்கள்.

இறுதி இறைதூதராம் எம் பெருமான் முஹம்மது முஸ்தபா (ஸல்) இப்புவியில் அவதரிக்கு முன்பே தந்தை அப்துல்லாஹ் இறந்துவிட்டார்கள். பெருமானார் பிறந்த போது, குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தது. குலத்தாலும், கோத்திரத்தாலும் பெருமானார் உயர்ந்திருப்பினும், ஏழ்மை நிலைகாரணமாக செவிலித் தாய்மார்கள் முஹம்மது என்னும் அப்பாலகனை ஏற்கத் தயங்கினார்கள்! ஹலீமா என்னும் மாது சிரோமணியே அவர்களைப் பெற்றுச் சென்று, மிக அன்போடும் நேசத்தோடும் வளர்த்தார்கள். ஹலீமாவின் நன்றிக்காகவே அவரின் மகள் ஷைமாவிற்கு நபிநாயகம் (ஸல்) அத்தனை மரியாதை கொடுத்து அன்புடன் நடத்தினார்கள். இறுதியாக ஷைமாவிற்கு அநேக வெகுமதிகள் வழங்கி மரியாதையோடு அனுப்பி வைத்தார்கள்.

துவையா என்னும் பெண் மணியும் நபிகள் பிரான் (ஸல்) அவர்களுக்குச் சில நாட்கள் பாலூட்டி வளர்த்தவர். அவர் அபூலஹபின் அடிமைப் பெண். பெருமானார் ஆண்டு தோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவையாவுக்கு ஆடை அணிகளும், சன்மானங்களும் அனுப்பி வருவது வழக்கம். துவையா இறந்த பின்னர், அவரின் வாரிசாக யாராவது இருக்கின்றார்களாவெனப் பெருமானார் விசாரித்தார்கள். அவரைச் சேர்ந்தவர்கள் யாருமே இலர் என்பதைத் தெளிவாக அறிந்தபின்னரே, பெருமானார் தம்முடைய வழக்கத்தைக் கைவிட்டார்கள்.

இஸ்லாம் பரவுகின்ற ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களுக்குக் குறைஷிகள் அளவில்லாத தொல்லைகளைக் கொடுத்தார்கள். அப்பொழுது முஸ்லிம்களைக் கோஷ்டி கோஷ்டியாகப் பெருமானார் அபிஸீனியாவிற்கு அனுப்பிவைத்தார்கள்.

அபிஸீனிய மன்னன் நஜ்ஜாஷீ அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தான். இஸ்லாம் பரவி அதியுன்னத நிலையில் இருக்கும்போது அபிஸீனிய மன்னன் நஜ்ஜாஷீயிடமிருந்து ஒரு தூது கோஷ்டி வந்தது. அக்கோஷ்டிக்குத் தேவையான அத்தனை பணிவிடைகளையும் பெருமானாரே செய்தார்கள். அப்பொழுது ஸஹாபாக்கள், நாயகமே 'அல்லாவின் திருத்தூதரே! நாங்கள் அதிபதிகளுக்கான பணிவிடைகளைச் செய்கின்றோம். தாங்கள் தள்ளிக் கொள்ளுங்கள், என்று எவ்வளவோ சொல்லியும் பெருமானார் ஏற்றுக்கொள்ளவில்லை.

'இன்னலிலிருந்த எனது தோழர்களுக்கு இவர்கள் சௌகரியமளித்தார்கள். ஆதலால், இவர்களுக்கு நன்றி செலுத்துவதற்காகவே நானே இவர்களுக்குப் பணிபுரிகின்றேன் என்று இறுதி நபி முகம்மது (ஸல்) அவர்கள் நன்றிப் பெருக்குடன் கூறினார்கள். ●


பீடி உலகில் மக்கள் மத்தியில்
என்றும் மங்காது துலங்கும் பீடி

"பெஸ்ட் இந்தியன் பீடி"

தங்க நிறமுள்ள முதல் தரமான அக்கூள்
புகையிலையினால் பல வருட அனுபவம் உள்ள
திறமை வாய்ந்த தொழிலாளர்களால்
தயார் செய்யப்பட்டது.

"பெஸ்ட் இந்தியன் பீடி"

தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்:

மகா லெட்சுமி ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: M. கனகரத்தினம்
தலைமை ஆபீஸ்: லட்சுமி மகால்
26, புதிய செட்டித் தெரு, கொழும்பு-13

தொலைபேசி: 27875 தந்தி: மாலக்



For Gold and Silver Bullions,
Goldsmith Tools, Electroplating
&
Polishing Materials

ABBAS & CO.,
JEWELLERS

195, 2nd Cross Street,
COLOMBO-11

Head Office :-
187, N. S. C. BOSE ROAD, MADRAS-1.



WITH BEST COMPLIMENTS OF :

S. T. R. SALAY MOHAMED & CO.,

245, Main Street,
COLOMBO-11

Gram :- "PERDESHI" Phone :- 3536


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறம் சம்பா, கோரா மற்றும்
சகல வித அரிசித் தினுசுகளுக்குப்
பெயர் பெற்ற இடம்

**கொழும்பு கோப்பரேஸன்**
மொத்த கமிஷன் வியாபாரம்,

41, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12

தொலைபேசி: 32455



கொட்டைப் பாக்கு வகைகள்
நிதான விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

**வி. மு. சண்முகம் அன் பிரதர்**

74, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12

தொலைபேசி: 31160

தலைமை நிலையம்:
47, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 657

கொழும்பு — யாழ்ப்பாணம் லொறி
போக்கு வரத்துச் சேவையும்
ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்



அன்பர்களே! நண்பர்களே!

அரிசி உணவுப் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
உங்களுக்குத் தேவையான அரிசி வகைகள் கிடைக்க
வில்லையே என்று கவலைப்படுகிறீர்களா? வேண்டாம்!
இப்போதே கவலையை விடுங்கள்!

**மகாராஜா ஸ்டோர்ஸ்**
அரிசி வியாபாரிகள்,

103, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12

Telephone: 79784 — 32784

சகல வைபவங்களுக்கும் உங்களுக்குத் தேவைப்படும்
பல விதமான அரிசி தினுசுகளை விலை மலிவாகவும், திருப்தி
கரமான முறையிலும் பெற்றுக் கொள்ள மேற்கண்ட
விலாசத்திற்கு இன்றே விஜயம் செய்து உண்மையறியுங்கள்



எல்லா வகையான நாட்டரிசித் தினுசுகளும்,
விசேடமாக சம்பா, கோரா வகைகளும்
மலிவான விலையில் கிடைக்குமிடம்

**லோகராஜா ஸ்டோர்ஸ்**

மொத்த கமிஷன் வியாபாரிகள்,
21, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12

தொலை பேசி: 32119



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. MUTHUCKUMARU & BROS.

General Merchants & Commission Agents

Dealers in :-

**COUNTRY RICE VARIETIES**
**SAMBA – KORA – and OTHER**
**CEYLON PRODUCES**

74, Old Moor Street,
COLOMBO-12

WHOLESALE DEALERS, IMPORTERS, EXPORTERS
and ESTATE SUPPLIERS



# M. S. A. FIRM

*பிரபல மொத்த கமிஷன் வியாபாரம்*

அரிசி - நெல் - கேப்பை - சோளம்
மிளகு - கொக்கோ - கோப்பி மற்றும்

உள்நாட்டு விளைபொருள்கள்
மொத்தமாக சகாய விலையில் கிடைக்கும்

*95, பழைய சோனகத் தெரு,*
*கொழும்பு-12*

*தொலைபேசி: 32014*



# K. K. S. STORES

GENERAL MERCHANTS COMMISSION
AGENTS and ESTATE SUPPLIERS.

*Dealers in :*

**COUNTRY RICE VARIETIES AND**
**OTHER CEYLON PRODUCES**

**181, Dam Street,**
**COLOMBO-12**
Phone: **78802**
*RICE MILL* SNAVA MILLS, – PELIYAGODA.



*எங்களிடம்:*

திறம் நாட்டரிசி — சம்பா — கோரா வகைகள்
சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

# வி. ஆர். எம். கம்பெனி

*பிரபல மொத்த வியாபாரம்*
*111, பழைய சோனகத் தெரு,*
*கொழும்பு–12*

*தொலை பேசி: 32188 கொழும்பு.*
*670370 வத்தளை.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments of:

The Gulistan Hardware Stores,

No. 65, Third Cross Street,
COLOMBO-11.

'Phone: 4720 Grams: "ZAINSTAN"

With the best compliments of:

ELEPHANT BEEDI CO.,

Wolfendhal Street,
COLOMBO-13.

Tele: 7651

With the Best Compliments from:-

RAJAH LITHO PRINTERS

No. 60, Dam Street,
COLOMBO-12.

T 'Phone :- 5370

FOR ALL KINDS OF
CEYLON PRODUCE
CONTACT

L. A. C.

LANKA ASIATIC CORPORATION

Importers, Exporters & Commission Agents,

32, OLD MOOR STREET,
COLOMBO-12.

T' phone: 21388

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We deal in Rice - Paddy - Samba
Kora - Cocoa - Pepper - Cloves
Coffee and other
Ceylon Produces

**K. M. MOHIDEEN & CO**

108, Dam Street,
Colombo-12.
Phone: 21037

**Head Office**
65, 4th Cross Street, Colombo-11.

**LANKA PRODUCE AGENCIES**
GENERAL MERCHANTS
&
COMMISSION AGENTS

*Wholesale Dealers in*

**Rice, Bran, Maize, Gingily,
Dhall Husk, Broken Rice, Poultry Foods
& All Other Ceylon Produces.**

155/1, DAM STREET,
COLOMBO-12: phone: **34836**

**Branch:**
**L. P. A. Mills & Industries,**
*32, Negombo Road,*
*KANDANA.*
Phone: **367** *JA-ELA*

FOR RICE - PADDY
SAMBA - KORA - MAIZE
KURAKKAN & ALL OTHER
CEYLON PRODUCES

VISIT

**SRI LANKA PAKKU STORES**
(PROP: **A. KANNIAH & SONS**)

General Merchants, Commission Agents,
Wholesale Dealers & Estate Suppliers

**96, Old Moor Street,
COLOMBO-12.**

Phone: **32825**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ILAMPIRAI-MEELAD SUPPLEMENT, JUNE 1968.
"REGISTERED AS A NEWSPAPER IN CEYLON"




Printed at The Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org